70
ாந்த
L/PR

# கலைஞானியும் கலைத்தொண்டும்

எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி



மாமனிதர் கலைஞானி கலாலயம் குரும்பசிட்டி

# கலைஞானியும் கலைத் தொண்டும்

## பத்திரிகை நறுக்குகளின் தொகுப்பு

தொகுப்பாசிரியர்

**எம். ஷரந்தன் சத்தியகீர்த்தி**

வெளியீடு :-

**மாமனிதர் கலைஞானி கலாலயம்**
**குரும்பசிட்டி**

| | | |
|---|---|---|
| தலையங்கம் | :- | 'கலைஞானியும் கலைத்தொண்டும்' |
| நூலாசிரியர் | :- | எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி<br>பொதுச் செயலாளர்<br>'கலைஞானி கலைக்கூடம்' |
| முதற்பதிப்பு | :- | தை 2001 |
| வெளியீடு | :- | 'மாமனிதர் கலைஞானி கலாலயம்'<br>குரும்பசிட்டி |
| பதிப்புரிமை | :- | ஆசிரியருக்கே |
| கணனி வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும் | :- | **சாந்தி அச்சகம்**<br>நாச்சிமார்கோயிலடி,<br>யாழ்ப்பாணம். |
| அளவு | :- | 21 c.m. X 14. 5 c. m. |
| பக்கங்கள் | :- | xviii + 74 |
| விலை | :- | ரூபா 100/= |

| | | |
|---|---|---|
| Title | :- | 'KALAIGNANIYUM KALAITHONDUM' |
| Author | :- | M. Shanthan Sathiakeerthy<br>General Secretary<br>'Kalaignani Kalaikkudam' |
| First Edition | :- | January 2001 |
| Publisher | :- | 'Mamanithar Kalaignani Kalalayam'<br>– Kurumpachiddi. |
| Copyright | :- | Author |
| Computer Type Setting and Printing | :- | Shanthy Printers<br>Nachchimarkovilady—Jaffna. |
| Size | :- | 21c.m. X 14.5 c.m. |
| Pages | :- | xviii + 74 |
| Price | :- | Rs. 100/= |



# சமர்ப்பணம்

குரும்பசிட்டி அன்னை தந்த தவப்புதல்வர்களில் கலைஞானியும் ஒருவர். 'மாமனிதர்' என்று மகுடம் சூட்டப்பட்டுக் கௌரவிக்கப் பட்டவர். அன்னாரது சேவையைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும்.

தனி மனிதனாக நின்று தமிழர் தம் வரலாற்றுக் கலைப் பொக்கிஷங்களைக் காடு கரம்பையெல்லாம் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அலைந்து அலைந்து தேடிப்பெற்றவர். இப்பணியின் அவசியத்தையும் உயர்வினையும் உணர்ந்து தன்னை அர்ப்பணித்துப் பிரமச்சாரியாகவே வாழத்தலைப்பட்டவர். செல்வந்தக் குடும்பத்தின் வாரிசான இவர் தனது அனைத்துச் சொத்துக்களையுமே இப்பணிக்கு இரையாக்கியவர்.

கலைஞானி பற்றிக் காலத்துக்குக்காலம் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளைத் தாங்கிய இந்த மலரினை வெளியிடுவதிற் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இதனைத் தொகுத்து வழங்குபவர் அரியாலையைச் சேர்ந்த திரு. எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி அவர்கள்.

குரும்பசிட்டி மக்களது இஷ்ட தெய்வமாம் அன்னை பராசக்தியின் திருப்பாதங்களில் இம்மலரினைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

**தர்மகர்த்தா சபையினர்**
குரும்பசிட்டி **மாமனிதர் கலைஞானி கலாலயம்**

உ
அம்பாள் துணை




குரும்பசிட்டி அம்மன்



உ
சிவமயம்
குருபாதம்

# அருளாசிச் செய்தி

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

(இரண்டாவது குருமஹா சந்நிதானம் -- ஆதீன முதல்வர்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

அன்புசார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணத்துக்கும் யாழ்ப்பாண மக்களுக்கும் பெருமை சேர்க்கும் கலைஞானி அ. செல்வரத்தினம் அவர்களினால் நீண்டகாலமாகச் சேகரித்துப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் கிடைத்தற்கரிய பொருட்களைப் பாதுகாக்கும் முகமாக அவர் சேவையை நினைவுகூர்ந்து மலர் ஒன்று வெளியிடுவதனையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம்.

அழிவுகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழினத்தினுடைய பழைமைவாய்ந்த கிடைத்தற்கரிய பொருட்கள் அனைத்தையும் தனி ஒரு மனிதனாக நின்று கலைஞானி எனும் பெயரோடு பாதுகாத்துவரும் அ. செல்வரத்தினம் அவர்களது பணி அளவிட்டுச் சொல்ல முடியாத ஒன்றாகும். பல இடர்களுக்கு மத்தியிலும் இப்பொருட்கள் அனைத்தையும் மிக விநயமாகப் பாதுகாத்துக்கொண்டிருப்பது, தமிழ் மக்களுடைய பழைமையை அழிந்துவிடாது பாதுகாத்துக்கொண்டிருப்பது எல்லோருக்கும் மனநிறைவைத் தருகின்றது. இதற்கென ஒரு கலைக்கூடத்தை அமைத்துத் தொடர்ந்து பாதுகாப்பதும் மக்களது பாவனைக்கு உகந்ததாக ஆக்குவதும் கலைஞானி கலைக்கூடத்தின் கடமையாகும். இதற்காக உழைக்கும் அன்பு உள்ளங்களை இறைவன் ஆசீர்வதிப்பாராக. திரு. அ. செல்வரத்தினம் அவர்களது பணி சிறக்க இறைவனை வேண்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

தொலைபேசி : 2870
நல்லூர், யாழ்ப்பாணம்
இலங்கை
07-12-2000

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்
2வது குருமஹா சந்நிதானம்
நல்லை ஆதீனம்

## திருமறைக் கலாமன்ற இயக்குனர்

அவர்களின்

# ஆசிச் செய்தி

'கலைஞானி' அவர்கள் ஈழத்தில் நினைவு கூரப்படவேண்டிய முதன்மையான மனிதர்களில் ஒருவர். வாழ்வைப் பொதுச் சேவைக்கு அர்ப்பணித்து வாழ்வோர் மிக அரிதலான இக்காலத்தில் இம்மண்ணை நேசித்து மண்ணுக்காகவே வாழ்வை அர்ப்பணித்த இம்மாமனிதர் என்றும் நினைவு கூரப்பட வேண்டியவர். இவர் கால் கடுக்க நடந்து ஈழத்துப் பாரம்பரியங்களைக் கண்டறிந்தவர். சிட்டுக்குருவி போல சிறிது சிறிதாய் சேர்த்த எமது மண்ணின் வரலாற்றுச் சுவடுகளை இன்றும் பகீரதப் பிரயத்தனத்துடன் பாதுகாத்து வருபவர். புகைப் படத்துறையில் தனக்கென ஒரு கலைநெறி வகுத்து அற்புதமான கலை ஓவியங்களைப் படைத்தவர். தனது இயலாமைகளிலும் இறுதி மூச்சுவரை அர்ப்பணத்துடன் செயற்பட்டுவரும் இவ் அற்புதக்கலைஞன் வாழுகின்றபோதே கௌரவிக்கப்படவேண்டியவர். இவரது திறன் அறியும் மலராக இந்நூல் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றேன். இவ்வேளை கலைஞானியவர்களிற்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரது நலத்துக்கும், நல்லா ரோக்கியத்துக்கும், தொடர்சேவைக்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

இவரது பணி தொடரப்படுதலும், இவரது அரும்பெரும் முயற்சிகள் பாதுகாக்கப்படுவதும் இவ்வேளையில் அவசியமான தொன்று. இப்பணி இம்மண்ணை நேசிக்கும் ஒவ்வொருவருக்குமுரிய வரலாற்றுக் கடமையுமாகும்.

நன்றி

05-01-2001

**அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள்**
இயக்குனர்
திருமறைக் கலாமன்றம்



# முன்னுரை

வரலாறு என்றால் என்ன? என்ற வினாவுக்கு இந்தியாவின் முன்னாள் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் விடையளிக்கும் போது "கடந்தகால அனுபவங்களிலிருந்து கற்க வேண்டிய பாடங்களைக் கற்று அவற்றின் ஊடாக நிகழ்காலத்தைத் தரிசித்து எதிர்காலத்தைச் செப்பனிடுவதே வரலாறு ஆகும்" என்றார்.

ஒரு தேசிய இனத்தை அடையாளம் காண்பதற்குரிய ஐந்து பரிமாணங்களை ரஷ்யாவின் முன்னாள் தலைவர் ஸ்டாலின் வரைவிலக்கணப்படுத்தினார். அந்த ஐந்து அம்சங்களின் அடிப்படையில் தந்தை செல்வா இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் ஈழத்தில் ஒரு இனக்குழுமமோ அல்லது சிறுபான்மை இனமோ அல்ல, அவர்கள் ஒரு தனியான தேசிய இனம் என்றும் அந்த அடிப்படையில் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்றும் வலியுறுத்தி தமிழ் பேசும் மக்களது தனித்துவத்தைப் பல்வேறு தளங்களினூடாகப் பிரதி பிம்பப்படுத்தினார்.

ஒரு தனியான தேசிய இனத்தின் முக்கிய பரிமாணம் அதன் வரலாறு ஆகும். கொடியோடும் முடியோடும் வாழ்ந்த தமிழ்பேசும் மக்களின் வரலாறு பேரினவாத வரலாற்றாசிரியர்களாலும் அரசினாலும் இன்று பாடப் புத்தகங்களினூடாகத் திரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களது வரலாற்றுச் சாசனங்களையும் தொல்லியல் சான்றுகளையும் சேகரித்துப் பாதுகாத்து வரும் பெரும்பணியை கலைஞானி செல்வரத்தினம் அவர்கள் நீண்ட நெடுங்காலமாகவே யுத்த நெருக்கடி களுக்கும் முகம்கொடுத்து ஆற்றி வருகிறார். இதனால் தான் அவர் மாமனிதராகக் கௌரவிக்கப்பட்டார் என்றால் அது மிகையல்ல.

காலத்துக்குக் காலம் அவர் செய்தித்தாள்களுக்கு வழங்கிய செவ்விகள் மிகவும் பயனுடைய கருத்துக்களைத் தாங்கி வெளி வந்தன. அவற்றையெல்லாம் மிக அவதானமாகச் சேகரித்துத் தொகுத்து ஒரு நூல் வடிவில் வெளியிடுதல் இன்றைய வரலாற்றுத் தேவையுமாகும்.

முகம் இழந்த மக்களாக வாழும் ஒரு இனம் தனது முகவரியைத் தொலைத்த இனமாக வாழக்கூடாது என்பதில் உறுதியோடு பணியாற்றும் கலைஞானியின் கருத்துக் கருவூலங்களை நூலாக்கிய இளம் பத்திரிகையாளர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி அவர்கள் பாராட்டுக்குரியவராவார்.

இந்நூல் தமிழ் மக்கள் வாழும் இடமெல்லாம் சென்று கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்தித் தேசிய விழிப்புணர்ச்சியை வளர்க்க வேண்டுமென்று வாழ்த்தி, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் இந்த உரையை வழங்குவதில் பெருமகிழ் வடைகின்றேன்.

01-01-2001

**பொன். பூலோகசிங்கம்**
**B. Dev. S (Hons) Cey: L. L. B. (Sri Lanka)**
**இலங்கை உயர்நீதிமன்ற சட்டத்தரணி**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இடைவரவு விரிவுரையாளர்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைப் பிரதிநிதி.



# அணிந்துரை

புகழ்பூத்த கலைஞர் கலைஞானி அ. செல்வரத்தினம் அவர்களின் அனுபவப் பகிர்வாக வெளிவரும் இந்நூல் ஆதார நூல் என்ற பெருமைக்கும் உரித்துடையதாகும்.

மிகப்பழமை வாய்ந்த ஈழத்தமிழர் வரலாற்றை ஆதாரங்களோடு பேணுகின்ற பணியில் கலைஞானி அவர்கள் ஈடுபட்டதனை வரலாற்றாளர்கள் அறிவர். அரும்பெரும் பொக்கிஷமாக விளங்கும் அவரது ஆதாரத்தேடல்களை நூல்வடிவாக்குகின்ற வரலாற்றுப் பணியில் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி அவர்கள் முனைந்து நிற்பது பாராட்டுக்குரியதாகும்.

யாழ் பாடிப் பரிசு பெற்ற திருநாடு என்ற யாழ்ப்பாணத்தில் காட்சிக்குக்கூட யாழ் என்ற கருவி கைவசம் இல்லாது போனமை துரதிஷ்டமே. இன்றும் அழிந்து கொண்டிருக்கின்ற சங்கிலித்தோப்புப் பற்றி அறிவுசார் உலகம் அமைதி காப்பதும் வேதனைக்குரியதே. என்செய்வோம்.

கலைஞானி போன்ற உணர்வு ரீதியான கலைஞர்கள் எம்மிடையே உருவாக வேண்டும் என்பதுதான் இந்நூலுக்குள்ளால் சொல்லவேண்டிய செய்தி ஆகும்.

இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் பற்றிய தகவல்களைக்கூட கலைஞானி தன் முயற்சியால் காத்துவருவதை இந்நூலில் உணர்கிறோம்.

கந்தரோடை தொடக்கம் காலிவரை தமிழரின் வரலாற்றுத் தடயங்களைத் தனிஒருவராக நின்று ஆராய்ந்ததனை அவரது செவ்வியினூடாக எம். எஸ். எஸ். கீர்த்தி அவர்கள் உரை வைத்துள்ளார்.

தேடுதற்கரிய ஆவணங்களைத்தேடிப் பல இடங்களிலும் காட்சிக்காக வைத்துத் தொல்பொருள் ஆய்வில் இளைய தலைமுறையை ஈடுபடுத்துவதற்கு கலைஞானி எடுத்த முயற்சிகளை தமிழ்ச் சமூகம் என்றும் நன்றியோடு போற்ற வேண்டும் என்பதனை இந்நூலைப் படிப்பவர்கள் உணர்ந்து கொள்வர்.

வரலாறுகள் திரிபடைகின்ற போதெல்லாம் வாதாடுகின்ற ஒருவராக கலைஞானி விளங்கி இருக்கின்றார். வரலாற்றுத்துறைப் பேராசிரியர்கள் முதல் வரலாற்று ஆய்வாளர்கள் வரை தவறாகக் கருத்துக்கள் வெளியிட்ட காலத்தில் துணிந்து மறுகருத்துக்கள் வெளி யிட்டவர் கலைஞானி. அதனை இந்நூலின் ஊடாகவும் நூலாசிரியர் சத்தியகீர்த்தி வெளிப்படுத்தியுள்ளார். எனக்கு இன்றும் ஞாபகமாக இருக்கின்றது யான் யாழ். இந்துக் கல்லூரி மாணவனாக இருந்த

காலத்தில் யாழ்ப்பாண அன்ன சத்திரம் பற்றி 'ஈழநாடு' பத்திரிகையில் கலைஞானி அவர்கள் 'மக்கள் கருத்து' என்ற பகுதியினூடாக வெளிப்படுத்திய தகவல்கள் பலரையும் திகைக்க வைத்தது. அக்காலத்தில் அவரது அறைகூவலே அன்ன சத்திரத்தின் வரலாற்றை எம் போன்ற இளைய தலைமுறை அறிய வைத்தது எனலாம்.

கலைஞானி தேசப்பற்று மிக்க தேசாபிமானி என்பதனை இந்நூல் நன்கு உணர்த்துகிறது. அவர் தேடி வைத்த பிரசித்தமான ஆவணங்களைப் பிற நாட்டவர் பெருந்தொகைப் பணத்தினை நீட்டிப் பெற முயன்ற வேளையெல்லாம் தேசத்தின் மீது கொண்ட அளவில்லாத பற்றினால், தன்னை அர்ப்பணித்துத் தேடிய ஆவணங்களை அவர் இன்றுவரை காக்க முற்பட்டது! ஓர் வரலாற்று நிகழ்வாகும்.

'தமிழர் வந்தேறு குடிகள் அல்ல' என்பதற்கு கலைஞானி அவர்கள் தன் ஆதாரபூர்வ வாதங்களைப் பல ஆய்வாளர்களுக்குச் சமர்ப்பித்துள்ளார். அவரது தொல்பொருள் சேகரிப்புப் பணியைப் பாராட்டி மேன்மைமிகு விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டமையை இந்நூலும் ஞாபக மூட்டுகிறது.

பிரமச்சாரிய வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்தி இலட்சிய நோக்கோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மாபெரும் கலைஞனின் பணியை எடுத்துக்கூறும் இச்செவ்விநூல் பெரும் பயன் தரும் நூலாக அமைந்துள்ளது. எதிர்காலத்தில் ஈழத்து வரலாற்றை ஆராய்கின்ற வர்களுக்கு இந்நூல் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

மகத்தான கலைஞர் தொல்பொருள் அறிஞர் கலைஞானி அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவவிருது கொடுத்துக் கௌரவிக்க வேண்டும் என்பது என்போன்ற ஆர்வலர்களின் பேராவலாகும்.

அவர் தேடிய பெறற்கரிய பொருட்கள் எம் சமூகத்தால் தொடர்ந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பதனை இந்நூல் ஆசிரியர் கீர்த்தி அவர்கள் நிறைவாக எடுத்துரைப்பது ஒரு முக்கிய விடயமாகும். இவற்றை எம் சமூகம் கருத்திற்கொள்ள வேண்டுமென்று வேண்டி அன்பர் கலைஞானி அவர்களுக்கும் சகோதரன் கீர்த்தி அவர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகின்றேன்.

**செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்**

16-12-2000

ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை சுன்னாகம்.



உ

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத் தலைவர்
**லயன் வைத்தியகலாநிதி வை. தியாகராசா**
அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

ஈழத்துத் தமிழ் மக்களுக்கு ஒரு வரலாறு உண்டு. இவ்வரலாறு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான பழைமை கொண்டது. இதனை நிறுவுவதற்கான தொல்பொருட் சான்றுகள் ஆங்காங்கு இன்னும் தேடவேண்டிய நிலையில் உள்ளன.

பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் இத்தேடலில் இறங்குவதற்கு முன்பே தனிமனிதராய் நின்று ஐம்பதாண்டுகளுக்கு மேலாகப் பல தொல் பொருட்களை அரும்பாடுபட்டுத் தேடித் தொகுத்து வைத்திருக்கும் பெரியார், கலைஞானி அ. செல்வரத்தினம் அவர்களைத் தமிழினம் நன்றியோடு என்றும் பாராட்டுதல் வேண்டும். இது அதன் கடனும் கடமையுமாகும்.

கலைஞானி அவர்கள் தொகுத்துள்ள தொல்பொருட்களைப் பேணிப்பாதுகாக்க நடவடிக்கை எடுத்துவருகின்ற இளந்தலைமுறைக்கு நாம் பெருமையோடு ஆதரவு காட்டுவதும் அதற்கான முன்முயற்சி களில் ஈடுபடுவதும் இன்றியமையாதது என்பதற்கு எவ்வித ஐயமும் இல்லை.

இவ்வகையில் 'கலைஞானி கலைக்கூடம்' போற்றப்படுவதும் அதன் நிறுவுநர் கலைஞானி அ. செல்வரத்தினம் அவர்கள் நன்றியுடன் பாராட்டப்படுவதும் நம்மை நாமே போற்றுவதற்கும் பாராட்டுவதற்கும் சமமாகும். அந்த அளவிற்கு அவர் ஈழத்து வரலாற்றிற்கு அரும்பணி ஆற்றி எம் நெஞ்சங்களில் நிலைத்து விட்டார்.

கலைஞானி பற்றிப் பத்திரிகைகளில் இதுவரை வெளிவந்துள்ள கட்டுரைகளின் தொகுப்பை வெளியிடுவோர் காலத்தின் தேவை ஒன்றை நிறைவேற்றுகிறார்கள் என்றே சொல்ல வேண்டும். அவர்களை மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

கலைஞானி அ. செல்வரத்தினம் அவர்கள் மேலும் பல் லாண்டுகள் உடல் நலத்துடன் தமது பணியைத் தொடர்ந்து வாழ்க!

லயன் வைத்திய கலாநிதி **வை. தியாகராசா J. P.**

18-12-2000

(தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
கோப்பாய் பிரிவு)

உ

# என்னுரை

**வ**ரலாறு என்பது சாகாத தொடர்கதை. மனிதராகப் பிறந்த எவரும் தான் சார்ந்த சமூகத்தின் வரலாற்றையாகிலும் அறிந்திருப்பது இன்றியமையாதது. ஒரே ஒரு வரலாறுதான் ஒரு தேசத்திற்கு இருக்க முடியும். வெறும் ஊகங்களால் வரலாற்றை யாரும் உருவாக்கி விடமுடியாது; உருவாகவும் கூடாது.

பண்டைய வரலாற்றை ஆராய்வதற்குத் துணைநிற்பன தொல் பொருட்களும் பிறநாட்டார் குறிப்புகளுமாகும். குடாநாட்டில் அரும் பொருள் தொல்பொருள் சேகரிப்புக்காகத் தனது உழைப்பு முழுவதையும் செலவிட்டுவரும் 'மாமனிதர்' கலைஞானி செல்வரத்தினம் அவர்கள் இந்நூல் மூலம் உங்களைச் சந்திக்கிறார். சந்திப்பு முடிந்த பின் சிந்திக்க வேண்டிய பொறுப்பு உங்களைச் சார்ந்ததே.

தமிழ்த்தேசிய இனத்தின் வரலாறும் இந்த நாட்டில் அழியாத அழிக்கப்பட முடியாத ஒன்றாகும். பாரம்பரியமாகத் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ்ந்த தமிழினத்தின் இன்றைய நிலை பற்றி யாருமே சிந்திக்காது இருக்க முடியாது. உண்மைகள் பலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் உண்மைகளை மூடி மறைக்கவோ பூசி மெழுகவோ முற்படக் கூடாது. ஊமையன்கள் ஊரில் உளறு வாயன்கள் கெட்டிக்காரர்கள் தான்.

இன்றைய நிலையில் தமிழ்ச்சமூகம் மரத்துப்போன ஒன்றாக மாறிவருவது கவலைக்குரியது. அறிக்கைகள் மூலம் தமிழின விடுதலை விரும்பிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் அல்லது காட்டிக்கொள்ள முற்படும் உயர்கல்விப் பீடங்கள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் கவலையளிப்பனவாகவுள்ளன. அப்பாவித் தமிழ் மகன் கைது செய்யப்படும் போதோ சித்திரவதைக்குட்படுத்தப்படும் போதோ உங்கள் 'பேசாப்பொருட்கள்' பேசமறுப்பதேனோ? ஊருக்கு உபதேசம் உனக்கல்லவே. பச்சோந்தித் தனங்களால் பயன் ஏது கண்டோம்? 'சிவத்தமிழ்ச்செல்வி' போன்ற பெண்மணிகளால் பெருமை அடைந்து கொண்டிருக்கும் இம்மண்ணிலே, அகதி வாழ்வும் அவலங்களும் சூழ்ந்துள்ள இந்நேரத்திலே உயர்கல்விப் பீடங்களில் 'ராக்கிங்' ஒரு சாபக்கேடா? சகோதரிகளால் சகோதரிகளுக்கு ஏற்படும் அவலத்தையும் அவமானத்தையும் கண்டு தமிழ்த்தாய் கண்ணீர் வடிக்கிறாள். கோஷ்டி மோதல்களும் குழிபறிப்புகளும் எமது சமுதாயத்தை மேலும்



வன்முறைக்களமாக உருமாற்றிவிடும். இதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இக்கட்டான இருள் சூழ்ந்த இவ்வேளையிலே இருப்பே கேள்விக்குறியான நிலையிலே நீங்கள் ஒன்றுபட வேண்டும். தமிழர் ஆவணக் காப்புத் தொடர்பான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் இன்றே இறங்கவேண்டும். அதுபோதும்!

தமிழர் ஆவணச் சான்று பேணுதல் தொடர்பாக ஈழத்தமிழ் அறிஞர்களின் பங்களிப்பு திருப்திகரமாக அமையவில்லை என்பதையே இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் மூலம் நாம் தேடிக்கொண்டது 'வந்தேறுகுடிகள்' என்ற பட்டத்தையும் 'முதுகெலும் பற்றவர்கள்' என்ற நாமத்தையும் தான்.

தமிழ் மக்களின் அபிலாசை சுயநிர்ணய உரிமையே என்பதையும் அரசு யுத்தத்தை நிறுத்திப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்பதையும் வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக சமூகத்தினால் நடத்தப்படும் எழுச்சி நிகழ்வுகள் யாழ். கல்விச் சமூகம் விழித்துக்கொண்டு விட்டதை, தனது கடமையை உணரத் தலைப்பட்டுவிட்டது என்பதற்கான முன்னோடி நிகழ்வுகளாக அமைந்துள்ளன.

இந்நேரத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் என்றுமே அழியாத கரும்புள்ளியொன்றும் ஏற்பட்டுவிட்டது. செய்தியாளர் மாணவர்களால் தாக்கப்பட்டதே அச்சம்பவம். இது சமூகப் பொறுப்புணர்வுள்ள அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டியது. பக்கச்சார்பின்றிச் செய்திகளை வெளியிடும் அதேவேளை சமூக அநீதிகளைத் தட்டிக் கேட்கும் உரிமையும் பத்திரிகையாளனுக்கு இருக்கிறது. மீண்டும் நினைவூட்டுகிறேன் உண்மைகள் பலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம் ஆனால் ………………

மாந்தரின் பிறப்பிடம் தொல் பழந்தமிழகமே என்பது ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும் தமிழர் எங்கு தோன்றினர் என்பது பல்லாண்டுகளாக விடைகாணமுடியாத வினாவாகவே இருந்து வருகிறது. ஆனாலும் குமரிக்கண்டம் அல்லது மைய ஆசியாவே ஆதித் தமிழ்க்குடிகளின் பண்டைய வாழ்விடங்களாக இருந்திருத்தல் வேண்டும்.

தமிழின் தொன்மையும் தமிழர் தம் இருப்பும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்க முடியாத அம்சங்கள். ஈழத்தில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் ஐயாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழ் பேசிய மக்கள் கூட்டத்தினர் வாழ்ந்துள்ளனர் என்பது வரலாற்றாசிரியர் கருத்து.

வரலாறு பற்றி அறிவதும் எழுதுவதும் எமது வரலாற்றுக் கடமையாகும். தமிழர் வரலாறு பற்றிய சான்றுகள் பலவாறு தேடப்பட்டு ஆராயப்பட்டுவரும் இக்காலத்தில் இதற்காகவே தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்து தரணியில் 'மாமனிதராக' உயர்ந்து நிற்கிறார் 'கலைஞானி' அவர்கள். அவரின் 54 வருடகாலத் தன்னிகரில்லாக் கலைத்தொண்டுக்குக் கட்டியம் கூறுவதாக அமைகிறது இந்நூல்.

குடாநாட்டுப் பத்திரிகைகள், தேசிய நாளிதழ்கள், சஞ்சிகைகளில் வெளிவந்த பேட்டிகள், கட்டுரைகள் மற்றும் கல்வியியலாளர்களால் எழுதப்பட்ட குறிப்புகளைத் தாங்கி வெளிவரும் இந்நூல் தமிழர் பூர்வீகத்தை அறிய அவாவுறுவோர்க்கு சிறந்ததொரு படையலே.

பல பத்திரிகை நறுக்குகள் எமக்குக் கிடைக்காது போனாலும் இதில் இடம்பெறும் பத்திரிகை நிறுவனங்களுக்கும் கட்டுரையாளர்களுக்கும் எமது நன்றிகள் உரியதாகட்டும்.

தமிழ் பேசும் ஒவ்வொரு மகனும் தமிழ் மீது தணியாத தாகம் கொண்ட எவரும் இந்நூலை வரவேற்பர் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு.

விஞ்ஞானத்தின் அதிவேக வளர்ச்சியால் இன்று உலகம் குக்கிராமமாகச் சுருங்கிவிட்டது. தொல்பொருள் மற்றும் ஆவணப் படுத்தல் துறையிலும் மைக்ரோ பிலிம் (MICRO FILM) முறை அறிமுகமாகியுள்ளது. பத்திரிகை நறுக்குகள், நூல்களை இதன் மூலம் கையடக்கமான முறையில் பேணலாமே தவிர தொல் பொருட்களான சிலைகள், ஓடுகள், நாணயங்கள், செங்கட்டிகள், மண் சுவடுகள், ஏட்டுச் சுவடிகள், ஆயுர்வேத மருத்துவ மூலிகைகள் என்பவற்றைக் காபாந்து பண்ண இயலாது. இவற்றின் பெறுமதியை வெளிநாட்டவர் உணர்ந்த, அறிந்த அளவிற்கு எம்மவர் அக்கறை கொள்ளாதிருப்பது எம்மை நாமே விலைபேசுவதற்குச் சமனானது.

தமிழின விடுதலை வேண்டி ஏங்கி நிற்கும் எம் இனத்தின் அடியை வேரோடு பிடுங்கி எறிய கங்கணம் கட்டி நிற்கும் பேரினவாதத்தின் துப்பாக்கிக் கலாசாரத்தையும் அடாவடித் தனங்களையும் விரும்பாத வெறுக்கின்ற 'சுத்தத்தமிழர்' எவரோ அவரே தமிழ்ப் பண்பாடும் கலாசார விழுமியங்களும் சீரழியாது பேணிக்காக்கும் திறன் கொண்டோர்.

அப்படிப்பட்ட ஒருவர் தான் கலைஞானி அவர்கள். எவருமற்ற தனிமனிதனாக பன்முகப் பார்வைகொண்ட கலைஞனாக தான் சார்ந்த



சமூகத்தின் மீது பற்றுறுதி கொண்ட மாமனிதனாக வாழ்ந்து வருபவர். இவர் ஓவியர், புகைப்படக்கலைஞர், நாடக விற்பனர், தொல்பொருள் ஆய்வு மற்றும் சேகரிப்பாளர். இவர் ஒரு சிறந்த பத்திரிகையாளரும் கூட. தானே ஆசிரியராக இருந்து 'கலைஞானி' என்ற பத்திரிகையை நடாத்தி வந்தார். கலை, இலக்கியம், வரலாறு, தொல்பொருள் எனப் பல்பரிமாணம் கொண்டது அது.

1933 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி பிறந்த இவர், ஆரம்பத்தில் குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலயத்திலும் தொடர்ந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கல்வி கற்றார். பள்ளிப் பருவத்திலிருந்து இவர் சேகரிந்துவரும் சேகரிப்புகளை அடுத்த எம் சந்ததிக்கு அழியவிடாது பேணிக்கையளிப்பதற்கு நிரந்தரக் கட்டடம் ஒன்று இல்லாதது பெருங் குறையே.

கலைஞானி தனது மூன்றரைப் பரப்புக் காணியை குரும்பசிட்டியில் கலைச்சேவைக்கே அர்ப்பணித்துள்ளார். திருவாளர்கள் சி. நடராஜா, வ. கிருஷ்ணசாமி, பொ. பாலசுப்ரமணியம், அ. யோகநாதன், க. பரிபூரணானந்தன் ஆகிய ஐவர் கொண்ட தர்மகர்த்தா சபையிடம் இதற்கான உறுதி 15-08-2000 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. இங்கு அமைக்கப்படவிருக்கும் 'மாமனிதர் கலைஞானி கலாலயம்' என்ற அரங்கு சமய, பண்பாட்டு, கலை, கலாசார நிகழ்ச்சிகளை நடாத்து வதற்குப் பயன்படுத்தப்படும். இக்கைங்கரியத்தைச் செய்த மாமனிதரை தமிழ்கூறும் நல்லுலகம் என்றுமே மறக்கமாட்டாது.

கலைஞானியின் அரும்பொருள் தொல்பொருட்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு நல்லூர் பிரதேச சபை ஐந்து இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக அறிகிறோம். (24-09-2000 ஆம் திகதிய 'வலம்புரி', நல்லை ஆதீன முதல்வர் பாராட்டு 02-10-2000 ஆம் திகதிய 'வலம்புரி') இதன் தலைவர் க. மணிபல்லவராஜன் (நிஷாந்தன்) (ஜே. பி. யு. எம்) அவர்களுக்கும் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர், ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதேவேளை மாமனிதர் கலைஞானியின் நலனில் அதிக அக்கறை கொண்டு செயற்பட்ட கடந்தகால சகல நிர்வாகக் கட்டமைப்புகளுக்கும் எமது நன்றிகள் பற்பல. இந்நூலுக்கு ஆசி வழங்கிய நல்லை ஆதீன முதல்வர், அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் மற்றும் பல்வேறு கோணங்களிலிருந்தும் வாழ்த்துரைகள், சிறப்புரைகள் வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கும் மேலும் இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த சாந்தி அச்சக அதிபர் மற்றும் ஊழியர்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக.

காலத்தைப் பிரதிபலிப்பனவான ஆவணச் சான்றுகள் உரிய முறையில் ஆவணப்படுத்தப்பட வேண்டும். இவை பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவேண்டும். யாழ்ப்பாணத்துப் பண்டைய தமிழ்ப் புலவர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், நாடகக்கலைஞர்கள் பற்றிய குறிப்புகள் அவர்கள் எழுதிய நூல்கள் பேணப்பட வேண்டும்.

யாழ். குடாநாட்டுத் தூரநோக்குக் கொண்ட சிந்தனையாளரும் புத்திஜீவிகளும் இவரது சேகரிப்புகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை என்பது கசப்பான உண்மை. இந்நூல் மூலம் வெளிவரும் அவரது உள்ளக்கிடக்கைகள் சமூகத்தின் உணர்வு நரம்புகளை ஒரு கணமேனும் தட்டிவிடட்டும்.

இவர் வாழும் காலத்தில் தொல்பொருட் பாதுகாப்புக் குறித்த முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் இவைபற்றி எவரும் அக்கறை கொள்ளாது அரும்பொருட்கள் கறையானுக்கு இரையாதல் தவிர்க்கமுடியாததாகிவிடும்; தமிழரின் ஆவணச் சான்று அழிக்கப்பட்டுவிடும் என்ற உணர்ச்சிப் பிரவாகத்தால் இவ் ஏடு உங்கள் கரங்களில் தவழ்கிறது.

பொதுச் செயலாளர், **எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி**
**'கலைஞானி கலைக்கூடம்'**
பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
இலங்கை.



## உள்ளே ☞

பக்கம்


❖ தமிழர் பூர்வீகத்தைத் தமிழர் மறந்துவிடக்கூடாது — நூலாசிரியர் 1

❖ 'கலைஞானியும் கலைத்தொண்டும்' இவர்கள் பார்வையில்

I. தனிமனித முயற்சியில் உருவான தொல்பொருட் காப்பகம் 7
— ம. வ. கானமயில்நாதன்

II. கலைஞானி சேகரித்ததைத் தமிழரல்ல கறையான்களே உண்டு மகிழ்கின்றன. 9
— மு. திருநாவுக்கரசு.

III. வாழ்க கலைஞானி. — புலவர் ம. பார்வதிநாதசிவம் 11

IV. வருங்காலச் சந்ததி செய்துள்ள தவமே கலைஞானியின் செயலுக்குக் காரணம் 12
— சாமிஜி

V. மாமனிதரின் மகத்தான பணி — நூலாசிரியர் 14

❖ அடுத்த சந்ததிக்காய் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு 15

❖ கலைஞானி 18

❖ தமிழ் மண்ணின் அரும்பொருள் திரு. கலைஞானியுடன் ஒரு சந்திப்பு 19

❖ அரும்பொருட் கண்காட்சி யாழ். பல்கலைக்கழகம் 23

❖ மாமனிதர் கலைஞானியின் வரலாற்றுச் சான்று காட்டி நிற்கும் அரும் பொருள் கண்காட்சி 24

❖ கலைஞானியின் கலைச் செல்வங்கள் 27

❖ அரும்பொருட் கண்காட்சி ஒரு அமரசாதனை 29

❖ மாமனிதருடன் ஒரு செவ்வி 30

❖ அறக்கட்டளை – 1993 33

❖ அழிவுகள் எல்லாம் பெரியவைகள் தான் ஆனாலும் என் தேடல் குறையவில்லை 43

❖ அழியும் அருங்கலைப் பொருட்கள். 49

❖ மறத்தமிழரின் தொன்மை மறைந்துவிடக்கூடாது. 50

❖ தமிழ் கூறும் நல்லுலகில் வாழ்ந்துவரும் கலைஞானி தமிழ் மக்களின் ஒரு சொத்து. 56

❖ தனிமனித சேகரிப்பில் கிடைத்த தமிழர் வரலாற்றுப் பொக்கிஷங்கள் 59

❖ தமிழ் வரலாற்றாசிரியர்கள் சோரம் போனவர்களின் நீளும் பட்டியல்? 65

❖ பின்னிணைப்பு : கந்தரோடை -- கல்லும் கதையும் -- கலைஞானி அ. செல்வரத்தினம். 66



# தமிழர் பூர்வீகத்தைத் தமிழர் மறந்துவிடக் கூடாது

**கடந்த 54 ஆண்டு காலமாகத் தொல்பொருள் சேகரிப்பில் ஈடுபட்டுவரும் கலைஞானி அ. செல்வரத்தினம் அவர்கள் இந் நூலுக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டி**

'கலைஞானி' அவர்கள் தொல்பொருள் ஆய்வாளர் மட்டுமல்ல, சிறந்த புகைப்படக் கலைஞர், புகழ் பெற்ற ஓவியர், எழுத்தாளர், நாடக விற்பன்னர், தமிழன் கலை, கலாசாரம் பண்பாட்டு விழுமியங்களில் பற்றுறுதி கொண்டவர். தமிழன் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்ற எண்ணம் அவர் இதயத்தில் ஒரு அறையை அடைத்துக் கொண்டது. எமது கலாசாரச் சின்னங்கள் அழித்தொழிக்கப் பட்டபோது அதற்கெதிராகக் குரல் கொடுத்தவர். பல்வேறு சிரமங்கள், வேதனைகள் மத்தியிலும் ஈழத்தமிழன் இருப்பை உலகோர்க்கு உணர்த்தும் பண்பாட்டுக் கருவூலங்களை கண்ணின் மணிபோல் காத்து வருபவர்.

எளிமையான தோற்றம், கடல் அலை நிறத்தில் ஒரு குடுமி. தூய உள்ளத்தின் வெளிப்பாடாக எப்போதும் வெள்ளை வேட்டி, சால்வை. தமிழனின் தன்னாட்சி உரிமை கிடைக்கும் காலம் வெகுதொலைவிலில்லை. அவன் தன்மானத்துடன் தன்காலில் நிற்கும் காலம் அதோ தெரிகிறது என நோக்கும் தீர்க்க தரிசனம் மிக்க கண்கள். இவை அவரது புற இலட்சணங்கள். ஒரு காலத்தில் 'கண்ணாடி மனிதன்' என அழைக்கப்பட்டவர் இன்றும் கண்ணாடித் துண்டுகளின் மத்தியிலேயே அவர் நாட்கள் நகர்கின்றன. பழைய பத்திரிகைகள், சிலைகள், நாணயங்கள், ஓடுகள், செங்கற்கள், இப்படிப் பல விலைமதிப்பற்ற அரிய பொருட்களை காலத்திற்குக் காலம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள், வன்செயல்களின் போது இழந்தும், அவை மேற் கொண்ட பற்றின் நிமித்தம் தொடர்ந்தும் இதற்காகவே தனது இறுதி நாட்களைச் செலவழித்து வருகிறார். 68 வயதுடைய இவர் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

நோய் வாய்ப்பட்டு இருந்தாலும் கேட்ட கேள்விகளுக்கு உற்சாகமாகவும் உறுதியாகவும் பதில் தருகிறார்.

வணக்கம் ஐயா!

வணக்கம்.

சீர்த்தி : **ஈழத்தில் தமிழரின் தொன்மையை எடுத்தியம்புவதில் முக்கிய மாக யாழ். குடாநாட்டின் செல்வாக்கு என்ன என்பது பற்றிக் கூற முடியுமா?**

ஞானி : ஆம். முதலில் ஈழத்தில் தமிழன் பாரம்பரியமாக வாழ்ந்து வந்தான் என்பதற்கான ஆதாரங்களைத் தருகிறேன். கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட இளங்கோ அடிகளின் சிலை, கடைப்படிக் கல்வெட்டுக்கள், கோட்டைச் சுவரில் காணப்பட்ட திருக்கேதீஸ்வர கல்வெட்டு போன்றவற்றைக் கூறலாம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக பேராசிரியர் இரகுபதி ஆனைக்கோட்டையில் கண்டெடுத்த சில தொல்பொருட்கள், யாழ்ப்பாணத்தில் தமிழ் ராசாக்கள் இருந்து ஆண்டதற்கு ஆதாரங்களான சேது நாணயங்கள், மற்றும் பரராசசேகரன், செகராசசேகரன் எழுதிய சில விலைமதிக்க முடியாத நூல்கள் இன்னும் யாழ்ப்பாணத்தில் நிலமட்டத்திற்கு கீழ் கண்டெடுத்த கல் ஆயுதங்கள், நாகர் இருந்ததாகக் கூறப்படும் ஐதீகக் கதைகள் இப்படிப் பலவும் தமிழனின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தி உள்ளன.

நேர்கண்டவர் :

**மோசஸ் - ஷாந்தன் சத்தியகீர்த்தி**

(எம். எஸ். எஸ். கீர்த்தி)

மேலும் வண்ணார்பண்ணையில் நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில் கண்டெடுத்த மண்சுவட்டில் இருந்த எழுத்துக்கள் வாசித்து அறிய முடியவில்லை. திருக்கேதீஸ்வரம் மாந்தையில் கண்டெடுத்த மட்சுவடு "எழுத்தல்ல குறியீடு தான்" என்று கல்விமான்கள் கூறியும் கூட நான் முன்னாள் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுப் பகுதி இயக்குநர் இரா. நாகசாமிக்கு எழுதியதன் பிரகாரம் "இது 3000 ஆண்டு பழமையானது என்றும் இதேபோல் சுவட்டை கொற்கைத் துறைமுகத்திற்கு அண்மையிலும் கண்டுபிடித்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். இன்னும் விஜயனும் அவனது தோழர்களும் இலங்கை வருவதற்கு முன்னரே அவ்வெழுத்துக்கள் இருந்ததாகவும் இவர்களின் வருகைக்கு முன்னர் இங்கு ஓர் இராச்சியம் நிலைபெற்றிருந்தது" என மேலும் தெரிவித்துள்ளார். இக் கருத்தையும் ஈழத்தில் நான்கு மூலைகளிலும் நான்கு சிவத்தலங்கள் இருந்ததையும் சிங்கள இதிகாசங்களே உறுதிப் படுத்தி உள்ளன.

கஜபாகு மன்னனின் வருகைக்குப் பின்னர் கந்தரோடையில் கண்ணகி வழிபாடு இருந்தது என்பதற்கு ஏட்டுப் பாடலில் ஆதாரம் உள்ளது. (அழகாகப் பாடிக் காட்டுகிறார்)

மாணிப்பாயில் நிலமட்டத்திற்குக் கீழ் கல்லினால் உருவாக்கப்பட்ட வேல் போன்ற வடிவம் கண்டெடுக்கப்பட்டது. அக்காலத்தில் இது ஆயுதமாகப் பயன்பட்டிருக்கலாம் என நாம் சந்தேகிக்கிறோம்.



கீர்த்தி : **காலங்காலமாக இலங்கையில் அரச பாடப்புத்தகங்களில் வரலாறு திரித்துக் கூறப்படுவதாகப் பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர். தற்போது கூடப் பாடப் புத்தகங்களில் வரலாற்றில் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவதாக போர்க்கொடி தூக்குகிறார்களே, இது பற்றி ................**

ஞானி : பாடப் புத்தகங்களில் மட்டுமல்ல, சகல நடவடிக்கைகளிலும் தமிழ் மக்கள் ஓரங்கட்டப்படுகின்றனர். கல்வெட்டுக்கள், சிலைகள், தொல்பொருட்கள் என்பனவும் மறைந்து போய் விட்டன; மறைக்கப்பட்டு விட்டன. திருக்கேதீஸ்வரத்தில் கண்டெடுத்த சிவலிங்கம் தமிழ்த் தொழிலாளர்கள் அங்கு நின்றதால் காப்பாற்றப்பட்டு கோவிலில் வைக்கப்பட்டது. இல்லையேல் மூடி மறைக்கப்பட்டிருக்கும். குறிப்பாக சித்திரபாடம் சம்பந்தமான நூல்களில் பௌத்தமதத் துடன் சம்பந்தமான பல வினாக்களே வெளிவருகின்றன. இதனால் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

தமிழ் தெரியாத உயரதிகாரிகளை தமிழ்ப்பிரதேசங்களில் நியமிப்பதால் மக்கள் தொடர்பு மொழி பாதிக்கப்படுவதோடு தமிழ் புறக்கணிக்கப்படுகிறது.

**வரலாற்று திரிபுகளும் திணிப்புக்களும் தாராளமாக இடம்பெறுகின்றன.**

கீர்த்தி : **தமிழன் உரிமையில் அக்கறை கொண்டோராகப் பலரும் காட்டிக் கொள்கிறார்கள். இந்நோக்கில் ஈழத்தமிழ் அறிஞர்களின் பங்களிப்பு எவ்வளவு தூரம் உள்ளது?**

ஞானி : ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை பேச, எழுதப் பயப்படுகிறார்கள். நாடு அவ்வளவுக்கு சீரழிந்து விட்டது. ஆரம்ப காலங்களில் தமிழ் - சிங்கள உறவு சிறப்புற்றிருந்தது. கலப்புத் திருமணங்கள் பல இடம்பெற்றன. துவேச மனப்பான்மை தோன்றத் தொடங்க தமிழனைக் கொல், கொல் என்ற கோஷம் வானைப் பிளந்தது. தமிழர்கள் அன்று தொடக்கம் அழிந்து கொண்டிருக்கிறார்கள்; அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் பௌத்த பிக்குகளின் போக்குத்தான் கவலையளிப்பதாக உள்ளது. இலங்கையில் தமிழர் வந்தேறு குடிகள் என்று கூறியும் இங்குள்ளவர்கள் இன்றும் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறார்கள். படித்தவர்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை.

கீர்த்தி : **"இன்றைய பத்திரிகைகள் இளம் சந்ததியின் உள்ளங்களைச் சிதைக்கின்றன" என்று கூறப்படுகிறதே இது குறித்து ..........**

ஞானி : **உண்மைதான்.** சில பத்திரிகைகள் வருவாய் நோக்கில் செயற்படுகின்றன. **சிறுவர்கள்** மட்டுமல்ல முதியவர்கள் கூட வீடுகளில்

வைத்து வாசிக்க முடியாதுள்ளது. சமூகப் பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டிய பத்திரிகைகள் ஏனோ தானோ நிலையில் நெறிகெட்டு சென்று கொண்டிருப்பது வேதனைக்குரியது. ஆபாசமான படங்களும் எழுத்துக்களும் தடை செய்யப்பட வேண்டும் என்பதே என் கருத்து.

கீர்த்தி: **1974ல் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, 1991ல் யாழ். பல்கலைக் கழகம், இறுதியாக 1998ல் யாழ்ப்பாணக் கல்லூரி எனப் பல இடங்களில் உங்கள் பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன. இக்கண்காட்சிகள் மூலம் எத்தகைய மாற்றங்கள் மக்கள் மத்தியில் ஏற்பட்டன?**

ஞானி: வெளிநாட்டவர்கள் 60500 ஸ்ரேளிங் பவுண் கேட்டும் நான் இவற்றைக் கொடுக்காததன் நோக்கம் இந்த நாட்டுப் பிள்ளைகள் எமது வரலாறுபற்றி அறிய வேண்டும். எமது கலை, கலாசாரத்தை வளர்க்க ஊக்கமெடுக்க வேண்டும் என்ற நோக்கிலேயே ஆகும். ஆனால் எம்மவர் ஊக்கம் இது விடயத்தில் போதாது என்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன். பிள்ளைகளைக் களவெடுக்கப் படிப்பிக்கிறார்களே தவிர அவர்களை நல்வழிப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வில்லை.

கீர்த்தி: **தமிழர் வந்தேறு குடிகளல்ல அவர்கள் இம்மண்ணில் பாரம்பரிய மாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதை இறுதிட்டமாகக் கூறக் கூடிய ஆதாரங்கள் உங்களிடம் உண்டா?**

ஞானி: முதல் வினாவில் முழுமையாக விளக்கி விட்டேன். என்றாலும் இந்தியக் குகை ஒன்றில் 2000 ஆண்டுகள் பழைமையான கல் வெட்டொன்றில் "ஈழகுடும்பிகன் பொலாலயன்" - ஈழத்துக் குடும்பத் தலைவன் பொலாலயன் என்ற குறிப்பு காணப்படுகிறது. மேலும் வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட பொற்சாசனத்தைப் பரீட்சிப்பதற்கு அதைக் காணவில்லை என்கிறார்கள். இதனால் அது பற்றிய தகவல்களைப் பெறமுடியாதுள்ளது.

05 யூன் 1978 **வீரகேசரியில்** வெளியான "மாந்துறைப் பள்ளத்தாக்கின் ஆதிக் குடியேற்ற வாசிகள் தமிழரே" என்ற தலைப்பில் வெளியான கட்டுரையையும்

29 செப்ரெம்பர் 1982 **காலைக்கதிரில்** பக்கம் 5 இல் வெளியான "கொம்புநாச்சி விவசாயிகள் பலவந்த வெளியேற்றம் இலட்ச ரூபாய் புகையிலை பறிமுதல்" எனும் தலைப்பிலான செய்தியையும் காட்டுகிறார்.

கீர்த்தி: **உங்கள் சொந்த ஊர் குரும்பசிட்டி. அவ்வூரைவிட்டு வெளியேறி 15 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இக்காலப் பகுதியில் நீங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள், இக்கலைப் பொருட்களைப் பாதுகாக்கப் பட்ட சிரமங்கள் குறித்து .......**







கலைந்து கிடக்கும் கலைப்பொருட்கள் மத்தியில்
கலைஞானி அ. செல்வரத்தினம்.

முரளி : இராணுவ நடவடிக்கைகளின் போது இடம்விட்டு இடம் மாறியதால் இன்று பத்து வீதமான பொருட்களே எஞ்சியுள்ளன. கற்சிலைகள், பித்தளைப் பொருட்கள் தொலைந்து விட்டன. மரச்சிலைகள் கொத்தி எரிக்கப்பட்டிருந்தன. பத்திரிகைகள் கொழுத்தப்பட்டிருந்தன. 1961 சத்தியாக்கிரக பத்திரிகைகள் 600 இறாத்தல் வைத்திருந்தேன். இன்று ஒன்று கூட இல்லை. 5 சதம் விற்ற ஈழநாடு இப்படிப்பல.

ஒரு தொகுதி பொருட்களை குருநாகல் வாசி ஒருவர் களவாடிச் சென்றார்.

தென் அமெரிக்காவுக்கும் வட அமெரிக்காவுக்கும் இடையில் உள்ள "மாயா" என்ற நகரம் பற்றிய குறிப்புகள் அடங்கிய புத்தகத்தை சுவிஸ் நாட்டவர் ஒருவர் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் கேட்டார். நான் கொடுக்க மறுத்து விட்டேன். இப்போது எதுவுமில்லை. "மாயா" நகரத்தில் தென் இந்தியத் தமிழர்கள் குடியேறி இருந்தனர் என்ற செய்தி அதில் எழுதப் பட்டிருந்தது.

## தமிழர் வந்தேறு குடிகளல்ல
## இம்மண் வரலாறு சொல்லும்

கிப்ஃ: **உங்கள் கலைச் செல்வங்களைப் பாதுகாக்க 12 பேர் கொண்ட அறக்கட்டளை நிதியத்தை ஸ்தாபித்தீர்களே. கம்பன் கோட்டத்தில் அங்குரார்ப்பண கூட்டமும் நடைபெற்றதே?**

முரளி: இவை பற்றிய பெறுமதியையும் நன்மைகளையும் இங்குள்ளவர்கள் எவரும் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என்றே கருதுகிறேன். அவை எல்லாம் பேச்சோடும் எழுத்தோடும் தான்.

கிப்ஃ : **அண்மையில் யாழ். நகரில் கி. பி. 4 ஆம் நூற்றாண்டுப் பழைமை வாய்ந்த ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக வரலாற்றுத் துறையினர் அறிவித்துள்ளார்களே. உங்கள் கருத்து என்ன?**

முரளி: அத்திவாரம் வெட்டும்போது சில அடி தூரத்தில் வரும் பொருட்களைக் கொண்டு எந்த முடிவுக்கும் வரமுடியாது. இது முன்னர் பள்ளக் காணியாக இருந்தது. ஆனைக்கோட்டை சூளைப்பிட்டியில் வெட்டி அள்ளிய மண்ணைக் கொண்டு இதனை நிரவி இருக்கலாம். இதே போல் கஸ்தூரியார் வீதிக்கு அண்மையில் உள்ள வண்ணான் குளமும் நிரவப்பட்டது தான். இதற்குள்ளும் அம்மி, ஆட்டுக்கல் போன்றன இருக்கலாம். இப்போது அது சைக்கிள் பாக்காக மாறிவிட்டது. ஒரு காலம் அதையும் ஆய்வு நடத்தட்டும்.

இவர்கள் கூறும் இடத்தில் மேலும் தோண்டினால் டச்சுக்காரரின் முருகைக்கல் அத்திவாரங்கள் காணப்படலாம். இதற்கு என்ன கூறப்போகிறார்கள்?

## நம்மவர் காட்டும் ஆர்வம் போதாது

**கீர்த்தி: நீங்கள் பிரமச்சாரி. உங்களுக்குப் பின் இப்பொருட்களைக் கட்டிக் காத்துப் பேண வல்லவர்களை இனம் கண்டு கொண்டீர்களா?**

ஞானி: இன்னும் இல்லை. இனியும் இல்லை என்றே நினைக்கிறேன். உம்மைத் தவிர இத்துறையில் ஆர்வம் காட்டும் இளைஞர்களை நான் இன்னும் இனங்காணவில்லை. உம்மைப்போன்ற இளஞ்சந்ததியாலேயே இவற்றைப் பேணமுடியுமென நான் கருதுகிறேன். கொழும்பிலுள்ள பத்திரிகை ஸ்தாபனம் ஒன்றுக்கு இவற்றைப் பாரம் கொடுக்க எண்ணியுள்ளேன். காரணம் யாழ்ப்பாணத்தவரிடம் ஆர்வம் இல்லை. பெறுமதி உணராத பெருச்சாளிகள்.

**கீர்த்தி: பல ஆண்டுகளாக பல்வேறு செய்தித்தாள்களைச் சேகரித்து வருபவர் என்ற முறையில் இன்றைய நிலையில் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் ஆற்றும் பணி குறித்து உங்கள் அபிப்பிராயம் என்ன?**

ஞானி : யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதிலுமே பத்திரிகைச் சுதந்திரம் நசுக்கப்படுகிறது. குரல் வளைகள் நசுக்கப் படுகின்றன. ஆனாலும் அவற்றின் பணி ஓரளவு திருப்திகரமாக உள்ளது. போட்டி கூடக் கூட வியாபாரம் கருதி அவற்றின் எழுத்திலும் நோக்கிலும் மாற்றம் வரும். இது உமக்குச் சொல்லி விளங்க வைக்க வேண்டிய தேவையில்லை. பொக்கற்றை நிரப்புவதற்குத் தானே அவன் அவன் என்னென்னவோ செய்கின்றான். இதுவும் ஒரு வியாபாரத் தந்திரம் தானே.

**கீர்த்தி: எதிர் காலத்தில் உங்கள் முயற்சி எவ்வாறு தொடரப் போகிறது?**

ஞானி: 54 வருட காலத்தில் எவரும் இது பற்றிச் சிந்திக்கவில்லை. இனியா சிந்திக்கப் போகிறார்கள்? ஏதோ இருக்கும் வரை காப்பேன் பின் 'அவனே' காத்துக் கொள்ளட்டும்.

(கண்ணீர்ச் சுரப்பிகள் திறந்து கொள்கின்றன)

**கீர்த்தி: இறுதியாக இளம் சந்ததிக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

ஞானி: பிள்ளைகள் கட்டாயமாக எமது கலை, கலாசாரம், பண்பாடு என்ன என்று உணரவேண்டும். இன்றோ நாடு சீரழிந்து போய் விட்டது. மேல் நாட்டு மோகத்தால் தனது தாயையும் தமிழ் நாட்டையும் தமிழ் மொழியையும் மறந்து போகக் கூடாது. தமது முன்னோரின் வாழ்வை வழிகாட்டியாகக் கொண்டு வாழ வேண்டும்.

❋



### தனிமனித முயற்சியில் உருவான

# தொல்பொருட்காப்பகம்

ஈழத்தில் தமிழ் மக்களின் பூர்வீகமும், தொன்மையும் சர்ச்சைக்குரிய, சந்தேகத்திற்கு உரியனவாக்கப்பட்டுள்ளன. அவர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்த பிரதேசங்கள் அவர்களது தாயகம் என்று சொல்வதற்குத் தகுதியற்றவை எனவும் வாதாடப்படுகிறது. அவ்வாறு உரிமை கோரமுடியாது என்று வாதாடப்படுகிறது. வரலாறு வேண்டுமென்றே திரிபுபடுத்தப்படுகின்றது.

இவற்றுக்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. நிகழ்வுகளை -- சம்பவங்களை, காலம் பதிக்கும் சமூகக் கோடுகளை ஆவணப் படுத்தும் பயிற்சியும் வழக்கமும் எம்மவரிடையே மிகமிகக் குறைவு. இந்தக்குறைபாடு இன்று நேற்றல்ல சந்ததி சந்ததியாகவே தொடர்ந்து வருகிறது.

சில பாடசாலைகளின் நிறுவுநர்களின் வரலாறு குறித்த பதிவுகளோ முழுமையான ஆவணங்களோ இல்லாத துரதிஷ்ட நிலை உண்டு. இவ்வாறிருக்கையில் வரலாறு, கலாசாரம், பண்பாடு, கலைகள் பற்றிய ஆவணப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்று எவ்வாறு எதிர்பார்க்க இயலும்?

தொல்பொருட்களைச் சேகரிப்பதும், நிகழ்வுகள், வரலாறுகளை ஆவணப்படுத்துவதும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. இவற்றில் ஆர்வமும் அக்கறையும் கொள்வோர் மிகச் சிலரே. பல்கலைக்கழகம் வரை சென்று பயின்றவர்களிடம் கூட இப்பழக்கம் மிக அரிதாகவே காணப்படுகிறது.

சற்று வித்தியாசமானவர் தான் கலைஞானி அ. செல்வரத்தினம் அவர்கள். சிறுவயதிலிருந்தே அரும்பொருட்கள், தொல்பொருள்கள் சேகரிப்பதிலும், ஆவணப்படுத்துதலிலும் ஆர்வமும் அக்கறையும் கொண்டவராக விளங்கிய சிறப்புக்கு உரியவர் அவர். 54 வருடங்களை வேறு எவரின் நிதி உதவியோ தொழில் உதவியோ இன்றித் தனிமனிதனாக அவர் இப்பணியினைச் செய்து வந்திருக்கின்றார்.

இவர் சேகரித்த தொல்பொருள்கள், அரும்பொருள்கள், தொகுத்த ஆவணங்கள், இவர் எடுத்த புகைப்படங்கள் என்பன ஒரு தொல்பொருட் காப்பகத்தை உருவாக்கக் கூடியன. இந்தப் பணியில் அவர் உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்துப் பணியாற்றினார்.

ஆனால் அவரது உழைப்பு இத்தனை வருடங்கள் சென்றும் அதன் அருமை பெருமை தெரியாமல் வீண்போகும் நிலை தோன்றியுள்ளதோ என்று அஞ்சவேண்டியுள்ளது.

கோடி ரூபா பெறுமதியான அவரது சேகரிப்புகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு உரிய இடவசதி இன்றிச் சீரழியும் நிலையில் அவை உள்ளன. தனிமனித முயற்சியாக அவர் அரும்பாடுபட்டுச் சேகரித்த அரும்பொருட்கள், தொல்பொருட்கள், கலைப் பொருட்களை ஓரிடத்தில் வைத்துப் பேணிப் பாதுகாப்பதற்கு பொதுநல அமைப்புக்கள் அல்லது உள்ளூராட்சி சபைகள் முன்வர வேண்டும். அவரது சேகரிப்புகள் பெரும் பொக்கிஷங்கள் மட்டுமன்றி ஏதோ ஒரு வகையில் இந்த மண்ணில் வரலாற்றுப் பதிவுகளுமாகும். எதிர்காலச் சந்ததியினருக்கு கடந்த காலத்தின் பாரம்பரியங்கள் மற்றும் கலைச் செல்வங்களை அறிமுகப் படுத்தும் பெருங்கூடமாக்க வேண்டும்.

கலைஞானி அவர்களின் அரிய கலைச்சேவைகளைப் பதிக்கும் வகையில் இளம் ஆர்வலர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி அரும்பாடுபட்டு வெளியிடும் 'கலைஞானியும் கலைத் தொண்டும்' என்ற இந்த நூலும் அரிய ஆவணமாக அமைகிறது. கலைஞானி அவர்களின் தொண்டைப் பாராட்டி வெளிவந்த ஆக்கங்களின் தொகுப்பாக இருந்த போதிலும் இந்நூல் கலைஞானி அவர்களின் பன்முகக் கலைச் சேவையை ஒரு சேர்த்துக் காட்டுகிறது.

அவரது இந்த அரிய முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறேன். வேறு எவரும் சிந்திக்காத ஒரு தொண்டை முன்னெடுத்துள்ள இந்த இளைஞனின் தொண்டுக்கு கலைப்பற்றுள்ள அனைவரும் கைகொடுத்து உதவ வேண்டும்.

361, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
24-12-2000.

**ம. வ. கானமயில்நாதன்**
பிரதம ஆசிரியர்
உதயன் -- சஞ்சீவி



# கலைஞானி சேகரித்ததைத் தமிழரல்ல கறையான்களே உண்டு மகிழ்கின்றன

கலைஞானி என்றொரு மாமனிதன் இன்னமும் எம்மத்தியில் வாழ்கின்றார் என்பதை அறிந்தவர் சிலரே. அறியாதார் பலரென்றே கூறவேண்டும்.

நோயுற்று நடை இழந்து, முதுமையும் நீரிழிவு நோயும் தன் உடல் நிலையை வாட்ட, மெல்ல நடந்து தானுண்டு தன் தனிமையுண்டு, என ஊரும் உலகும் அறியாவண்ணம் திருநெல்வேலி பிரதான வீதியில் பல்கலைக் கழகத்துக்கு அண்மையில் துறவிபோல் வாழ்கின்றார் இம்மாமனிதர்.

ஈழத்தமிழர்கள் வந்தேறு குடிகள்; வரலாறு அற்றவர்கள்; அவர்களுக்கு என ஒரு கலை, கலாசாரம், பண்பாடு, வாழ்க்கை முறை, சரித்திரம் கிடையாது என ஆளும் ஆட்சியினர் முழக்கமிட்டு எம்மினத்தை முடக்கிவிட முற்பட்ட காலகட்டத்தில் தன் இடையறா முயற்சியால் அல்லும் பகலும் சரித்திர வரலாற்றுச் சான்றுகளை ஊர் ஊராகத் தேடித் தொகுத்து, நம்மவர் பண்டைய வரலாற்றை ஆதார பூர்வமாக உலகறியச் செய்த உத்தமர் 'கலைஞானி' ஆவார்.

வெறுமனே வாய்ப்பேச்சாலும், எழுத்துமூலமும் எம் தொன்மையையும், புகழ் பூத்த வரலாற்றையும் எடுத்துக் காட்டுவது போதாது என உணர்ந்து, சரித்திரச் சான்றுகளை, கல்வெட்டுக்களை, பழைய நாணயங்களை, ஏட்டுச்சுவடிகளை

காட்டுவது போதாது என உணர்ந்து, சரித்திரச் சான்றுகளை, கல்வெட்டுக்களை, பழைய நாணயங்களை, ஏட்டுச்சுவடிகளை எண்ணற்ற புதைபொருள் ஆய்வுகளை இடையறா முயற்சியால் சேகரித்தவர் இந்த வரலாற்று நாயகன்.

இத்தனையையும் சேர்த்தென்ன? இவற்றையெல்லாம் பேணிக் காக்க, தான் தன் கைப்படச் சேகரித்த வரலாற்றுச் சின்னங்களைச் சேகரித்து வைப்பதற்கு ஒரு அறையோ, மண்டபமோ கூடக்கிடையாது மழையிலும், பனியிலும், வெயிலிலும் கிடந்து இவை சீரழிவதைக் கண்டு இம் மாமனிதன் இரத்தக் கண்ணீர் வடித்தவாறே தனது இறுதி நாட்களை எண்ணியவாறு இருக்கின்றார்.

கூட்டத்தில் கூடி நின்று கூடிப்பிதற்றும் வாய்ச்சொல் வீரர்களாக, நாம் இன்று கூடி நின்று விலை மதிக்க முடியாத இந்த சேகரிப்புக்கள், அழிந்து சிதைந்து உருக்குலைந்து கறையானுக்கு இரையாவதை கண்ணாரக் கண்டும், இத்தனை சான்றுகளும் செத்து மடிவதைத் தன்கண் முன்னே கண்டு நிதம் செத்துக் கொண்டிருக்கும் கலைஞானிக்கு ஆறுதலாவது சொல்வார் யார்? என்ற வினாவுடன் என் குறிப்பை நிறைவு செய்கின்றேன்.

**புலவர் மு. திருநாவுக்கரசு**
(முன்னைநாள் மாவட்ட நீதிபதி)

16-11-2000



# வாழ்க கலைஞானி

செந்தமிழ்ப் பற்றும் செழுங்கலைப் பற்றும்
சொந்தமாய்க் கொண்ட தூய உளத்தினர்
இளமை முதலே கலைக்கெனத் தம்மை
அர்ப் பணித்திட்ட அற்புத ஞானி
தமிழர்தம் தொன்மையைத் தமிழர்க் குணர்த்தும்
தொல்பொருள் யாவும் தேடிச் சேர்த்தே
நல்லுல கினர்க்கு நல்கிய பண்பினர்
பொதுப்பணி கருதித் தன்னலம் மறந்தே
அரிதின் உழைத்த அருங்குணத் தோன்றல்
தமிழ்மொழி வளரவும் தமிழ்க்கலை சிறக்கவும்
மேலும் உழைத்து வாழிய நீடே!

15-11-2000 **புலவர் ம. பார்வதிநாதசிவம்**

நூலகம்

# வருங்காலச் சந்ததி செய்துள்ள தவமே கலைஞானியின் செயலுக்குக் காரணம்

மிகவும் இக்கட்டான ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நாம் வாழும் மண்ணுக்குச் சிறப்பைத் தேடித்தந்த தமிழும் சைவமும் இந்த மண்ணிலிருந்து முற்றாகவே மறைந்துவிடுமோ என்ற பயம் பல சமயங்களில் நெஞ்சில் நிறையவே உண்டாகிறது.

எவையெல்லாம் நமது சமூகத்துக்குப் பெருமை தந்தனவோ அவற்றையெல்லாம் நாம் மறந்து வாழுகின்றோம். யாரெல்லாம் நமது சமூகத்தின் உண்மையான வழிகாட்டிகளாக இருந்தார்களோ அவர்களையெல்லாம் ஒரு கணமேனும் நினைக்க நேரமின்றி அவலப் படுகுழியை நோக்கி நாம் விரைந்து சென்று கொண்டிருக்கிறோம்.

உயர்ந்த விழுமியங்களை இழந்த ஒரு சமூகம் ஒரு போதுமே உயர்வடைய முடியாது.

“நாமமது தமிழரெனக் கொண்டு” வாழ்வதில் பயனும் இல்லை, பெருமையும் இல்லை. “ரசனை கெட்ட சமூக” மாக நமது சமூகம் மாறிக் கொண்டு வருகிறது. “முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாய் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியதாய்” உள்ள நமது மொழியினதும், பண்பாட்டினதும், சமயத்தினதும் சிறப்பையும் அருமையையும் தெரிந்துகொள்ளாத ஒரு கூட்டமாக நமது சமூகம் மாறியிருக்கிறது.

தெரியாமை தப்பு அல்ல.
தெரிந்து கொள்ள விரும்பாமையே தப்பு.

பணம் தேடும் கூட்டத்திலிருந்தும் விளம்பரம் தேடும் கும்பலி லிருந்தும் பிரிந்து நின்று

தனி ஒரு மனிதனாக --

‘கலைஞானி’ செய்துவரும் சேவையின் காரணமாக -- வருங்காலச் சந்ததியாவது நமது முன்னோரின் வரலாறு, இலக்கியம், கலை, சமயம் என்பவற்றின் சிறப்பை அறிந்து அதற்கேற்ப அவர்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.



கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக எத்தனையோ இடங்களுக்கு அலைந்து திரிந்து பணச் செலவையும் கால விரையத்தையும் பொருட்படுத்தாது பல அரும்பொருட்களைச் சேகரித்து வைத்திருக்கிறார் ‘கலைஞானி’.

இவரிடம் இருப்பது ஒரு அருமையான ஆவணக் காப்பகம்.
தேடக் கிடைக்காத பெருஞ்செல்வம்.

வருங்காலச் சந்ததி செய்துள்ள தவமே கலைஞானியின் செயலுக்குக் காரணம்.

பழைய பழைய பொருட்களையெல்லாம் சேகரித்து வைத்திருக்கும் ‘கலைஞானி’ ஒரு ‘புதிய பொருளை’ யும் உருவாக்கி வளர்த்து வருகிறார்.

‘புதிய பொருள்’ என்று நான் குறிப்பிடுவது --
ஆர்வமும், உற்சாகமும், அடக்கமும், இனிமையான சுபாவமும் கொண்ட இளைஞர் சத்தியகீர்த்தியை!

பழைய பொருட்களை கலைஞானி பாதுகாத்து வருவதுபோல இளைஞர் எம். எஸ். சத்தியகீர்த்தி இப்போது கலைஞானியைப் பாதுகாத்து வருகிறார்.

அவருக்கு வாரிசாக இவர் வருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

23-12-2000

**‘சாமிஜி’**
(ஆசிரியர் ‘சூரியகாந்தி’)

# மாமனிதரின் மகத்தான பணி

தொல்பொருள் சேகரிப்பைத் தனது முழுநேரத்

தொழிலாகக் கொண்ட தொண்டர்; சகலருமறிந்த

வல்லதோர் புகைப்படக் கலைஞர்; வன்கண்மை

வீழச் சேவைசெய்த பத்திரிகை யாளர்;

பல்லாயிரரில் ஒருவர்; தமிழ்ப் பற்றாளர்; நம்

பண்பாட்டு விழுமியங்களைப் பேணு பவர்;

சொல்லற்கரிய சிற்பக்கலைஞர்; சிறந்த நடிகர்;

சித்திரங்கள் தந்த சீர்த்திறை ஓவியர்;

நல்லியற் கவிஞர்; நகைச்சுவைப் பேச்சாளர்;

நடுநிலை மீறாத இலக்கிய விமரிசகர்;

சொல்லிலக் கனர்யாழ் வைத்திசு வரனைத்

தேடிச்சென்று தொழு தேத்தும் சிவனடியார்;

முல்லைக்குத் தேர்கொடுத்தவர் பாரி அன்று

மண்கற்குயிர் கொடுத்தவர் கலைஞானி இன்று

பல்கலைச் செல்வர்; பழைமை புதுமைக்குப்

பாலமாய்த் திகழ்பவர் பல்லாண்டு வாழ்க!

**மோ. ஷாந்தன் சத்தியகீர்த்தி**

✱



# அடுத்த சந்ததிக்காய் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு

நகரத்தின் ஆரவாரங்கள், வாகனங்களின் இரைச்சல்கள், இயந்திரங்களின் கூப்பாடுகள், இயந்திரங்களோடு இயந்திரங்களாக இழுபட்டோடும் மனிதர்கள், கணத்தரிப்புகளுமற்ற அவசரவாழ்க்கை. இந்தச் சந்தடிக்குள்ளும் எந்த ஆரவாரங்களும், அவதிகளுமின்றி ஒரு மனிதன். வரலாற்றுக் கதைகளில் சித்திரிக்கப்படும் ஓவியர். சிற்பிகளை நினைவுறுத்தும் தோற்றப்பாடு; தீட்சண்யம் மிக்க விழிகள்; அகன்ற நெற்றி; அள்ளு கொண்டை; நீண்டு நெடுத்தவொரு உருவம்.

"நான் ஒரு கண்ணாடி மனிதன்" இப்படித்தான் கலைஞானி (அ. செல்வரத்தினம்) தம்மை எங்களிடம் அறிமுகம் செய்து கொண்டார். உண்மைதான். தான் சேகரித்த தொல் பொருட்களை, சஞ்சிகைகளை இன்னும் பலவற்றைப் பாதுகாக்க கண்ணாடிப் பெட்டிகளையே அவர் பயன்படுத்துகிறார். இதற்காகப் பாவிக்கவும், பாவித்து எஞ்சியதாகவும் அவருடைய கடை - சேகரிப்பு நிலையம் - இருப்பிடம் எல்லாமுமாகிய நீண்ட தொடர் அறைகளெங்கும் கண்ணாடித் துண்டுகளே நிரம்பிக் கிடந்தன. சேகரிப்புக்கிடையில் விரிக்கப்பட்ட பழைய புற்பாய், ஒரு தலையணை, எப்போதோ நின்றே போய்விட்ட தூசு படிந்த சுவர்க்கடிகாரம்; அந்த அறையின் கடப்பில் சென்றடையும் இடத்திற்கும் கிணறு, அருகில் உலரப் போட்டிருக்கும் துணிகள். ஒரு ஒதுங்கிய துறவு வாழ்வு போல ஏதோ வழமைகளின் புறம்பாய் உறவு கொண்டோம்.

பதினான்காம் வயதில் குரும்பசிட்டியிலுள்ள தம் வீட்டு வளவில் எதிர்பாராமல் கிடைத்த மூன்று பழைய நாணயங்களும் சங்கும் தொல் பொருட்களைச் சேகரிக்கும் தன்னுடைய ஆர்வத்திற்கு வித்திட்டதாகக் குறிப்பிடுகிறார். அன்றிலிருந்து கிட்டத்தட்ட நாற்பது வருடங்களுக்கு மேலாக இதற்காகவே அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வாய்; தீவிரவாதியாய் இந்நேரத்தில் ஒரு புத்திஜீவி "அந்தாளுக்குப் பைத்தியம் போலை" எனத் திருவாய் மலர்ந்தருளியதை கலைஞானி சிரித்தபடி குறிப்பிட்டதையும் சொல்லியாக வேண்டும். ஆனால் இத்தனை காலச் சேகரிப்புகளிற் பலதை இலங்கை இராணுவக் கெடுபிடியில், குரும்பசிட்டியிலுள்ள தன்வீட்டில் இழந்து போனார். இன்னும் சிலதை இதற்கு முன்பே, தன்னுடைய இன்னொரு சேகரிப்பு நிலையத்திலிருந்து களவு கொடுத்து விட்டிருந்தார். இவையெல்லாம் இழந்துவிட்ட பின்னால், தாம் நித்திரையைக் கூட பெரும்பாலும் இழந்துவிட்டதாகக் கூறுகிறார். இழந்துவிட்ட பொருட்களைப்பற்றிக் குறிப்பிட்டு, "ஒண்டுமில்லை! ஒண்டுமில்லை!" என்று கூறுகையில் தொனிக்கும் சோகத்தை வடிக்கவியலாது மொழி பின்னடைகிறது.

"வயது போகப் போக நான் அஞ்சுகிறேன், இன்னும் எவ்வளவோ இடங்களைப் பார்க்கவும், ஆய்வு செய்யவும் வேண்டியிருக்கிறது" என்று கூறும் கலைஞானி, பலவற்றை இழந்து விட்ட நிலையிலும் பவுண், வெள்ளி கலந்து செய்யப்பட்ட வளை பொருட் துண்டங்களும், செங்கட்டிகளும், மிகப்பழைய நாணயங்கள், ஏறக்குறைய 2500 வருடப்பழைமை வாய்ந்த மண் கவடு, சில ஆதிகாலச் சிலைகள், மற்றும் முக்கியம் வாய்ந்த சில புகைப்படங்கள் கையெழுத்துப் பிரதிகள், ஏட்டுச்சுவடிகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆயுர்வேத மருத்துவ மூலிகைகள் போன்றவற்றை யெல்லாம் கண்ணாடிப் பெட்டிகளினுள் பாதுகாக்கின்றார்.

தொல்பொருளியலாய்வுகள் பற்றி ஏலவே வெளியிடப்பட்ட சில கருத்துக்களோடு கலைஞானி முரண்பாடு காட்டுகிறார். கந்தரோடை ஆய்விடத்தில் காணப்பட்டவை பௌத்த தாதுகோபங்கள் என்ற பௌத்தம் சார்ந்த கருத்துக்களே பெரும்பாலும் ஏற்கப்படுகின்றன. இதனை மறுத்து, "அங்கு காணப்படுவது இறந்தோரையும் அவர்களது உடைமைகளையும் தாழிகளில் இட்டுப் புதைக்கும் வீரசைவ வழி பாட்டுச் சின்னங்களே" என, இவர் கருத்துரைக்கிறார். அடுத்து கந்த ரோடையில் கிடைத்ததான பிராமிச் சாசனத்தின் மீதான கருத்துரை களோடும் மாறுபாடு காட்டுகிறார். மேலும் பல வரலாற்று ஆய்வுக் கருத்துக்களோடு முரண்படும் இவருடைய கருத்துக்கள் விமர்சனத் துக்குரியனவாக உள்ளன.

**-நிருத்தன்-**

இத்தனை காலத்துத் தனித்த உழைப்பு, உதவிகளின்மை, இழப்புகளெல்லாம் அவரை மிகவும் பாதித்துள்ளதை அவதானிக்க முடிந்தது. "ஆர் ஆதரவு தந்தினம்? கஷ்டப்பட்டுச் சொத்து இழந்து, பேந்தும் கடன்பட்டு என்ர வாழ்க்கையையே அர்ப்பணிக்க என்ன பலன்? செத்தாப் பிறகு மதிக்க வேணுமெண்டில்லை. எங்கட சேகரிப்பு களைப் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியிட்டைக் கொடுக்க வேணும்" என்றும் கூறியது நெஞ்சில் பதிந்தது.

தன்னுடைய சேகரிப்புக்களைப் பொதுவான ஒரு இடத்திற்கு அல்லது தொல்பொருட் காட்சிச்சாலை போன்றவற்றிற்கு வழங்குவதை கலைஞானி கண்டிப்பாக மறுக்கிறார். ஒரு முறை தான் யாழ். அரும் பொருட்காட்சிச் சாலைக்குச் சென்ற போது அங்கே ஒரு தொல் பொருள் கதவுக்கு முண்டாக வைக்கப் பட்டிருந்ததையும், வேறு சில நாணயங்கள், ஏட்டுச் சுவடிகளை முக்கியமான இடங்களில் பாதுகாப்ப தாகக் கூறிப் பெற்ற சில முக்கியஸ்தர்கள் அவற்றைத் தம் சொந்தத் தேவைகளை நிறைவேற்ற உதவியாகக் கொழும்புக்கு நழுவ விட்டதையும் வெறுப்போடும் வேதனையோடும் குறிப்பிட்டார்.



"நாமே ஒரு கட்டிடத்தை எப்படியாயினும் அமைத்து நிர்வாகக் குழுவொன்றையும் ஏற்படுத்திச் செயற்பட வைக்கவே விரும்புகின்றேன். ஆனால், இது "கலைஞானி" என்ற தனிமனிதனின் சேமிப்புக்களை மாத்திரமல்ல, இன்னுமுள்ள சேகரிப்பாளர்களினது பொக்கி ஷங்களையும் பேணுவதற்கான பொதுநிலையமாக இருக்க வேண்டும் என்பதிலும் உறுதியாக இருக்க வேண்டும்" என்று கூறியதும் கருத்திற் கொள்ளக் கூடிய கூற்றாகவே பட்டது.

இந்த ஆய்வுத் துறையில் செயற்பட்டவர்களுள் காலஞ்சென்ற ம. பொ. செல்வரத்தினம் (முன்னை நாள் தொல் பொருட் காட்சிச் சாலை இயக்குநர்) அவர்களையும், கலாநிதி பொ. இரகுபதியையும் சிறப்பானவர்களாகக் கருதுகிறார். இப்போதிருக்கும் தொல்பொரு ளாய்வு நிலைமைகளில் நிறைந்த அதிருப்தி கொண்டுள்ள கலைஞானி, அரசோ வேறு குழுக்களோ, கலைப் பொக்கிஷங்களை விற்பனை செய்வதைத் தடுத்தும், கண்காணித்தும் வரவேண்டும் என்றும் இத்துறைசார் நிறுவனங்களில் இத்துறையில் ஆர்வமுற்றோர் நியமிக்கப்பட வேண்டுமென்றும், இத்துறையில் இயங்கும் தனிப்பட்ட வர்களை ஊக்குவிக்க மானியம் வழங்கல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டுமென்றும், அவ்வப் பிரதேச கலைப் பொருட்கள் அவ்வப் பிரதேசத்திலேயே பாதுகாக்கப்படுதல் என்பது கண்டிப்பாக நிலைநாட்டப்பட வேண்டுமென்றும், இதில் பொது மக்களின் பங்களிப்பும் பரந்தளவில் வேண்டுமெனவும் கருத்துரைக்கிறார்.

இப்போது அனேகமாக அவருடைய "கலைஞானி ஸ்ருடியோ" பெயரளவில்தான் "ஸ்ருடியோவாக" இருக்கிறது. படப்பிடிப்புச் செய்ய முடியாத அளவிற்கு இவரது சேகரிப்புகள் நிரம்பி விட்டன.

மீண்டும் வாகனங்களின் இரைச்சல்கள், இயந்திரங்களின் கூப்பாடுகள், இயந்திரமாயோடும் மனிதர்கள். உண்மையில் கலைஞானியின் வாழ்வின் முன் சிறுத்துப் போன நாம், விடை பெறாத நினைவுகளுடன் நகர்ந்தோம்.

நன்றி :- **'திசை'** (04-05-1990)
(வெள்ளிக்கிழமை) பக்கம் 9

# கலைஞானி

யாழ். மாவட்டம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட "கலைஞானி" அவர்கள் தனித்து நின்று தமிழ்ப்பிரதேசத்தின் அரும்பொருட் காட்சியகமாகச் செயற்பட்டு வருகிறார்.

"கலைஞானி" அவர்கள் ஈழத்தின் பல பகுதி களிலுமிருந்து சேகரித்த பண்டைய நாணயங்கள், கலைப் பொருட்கள், தொல் பொருட்கள், பழைய ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் படிகள் (பிரதிகள்) என்பவற்றையெல்லாம் தனது ஆற்றலுக்கு மீறிய வகையில் பேணிப் பாதுகாத்து வருகிறார்.

அவர் தேடி வைத்திருக்கும் அருங்கலைப் பொருட்களை வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் பல பல இலட்சம் ரூபாவுக்கு விலை பேசிய பொழுது கோடி கோடியாகக் கொடுத்தாலும் இவற்றைக் கைவிட முடியாது என்று அடித்துக் கூறியவர்.

சொந்த இருப்பிட வசதியோ, அன்றி நிலையாக வசிப்பதற்கு கட்டட வசதியோ இல்லாத நிலையிலும் அனைவரும் வியக்கும் வகையில், தொல்கலைப் பொருட்களைச் சேகரித்துப் பேணி வருகிறார் என்றால் தமிழனின் பண்டைய அரிய கலைப் பொருட்கள் எமதுமண்ணை விட்டு வெளியே செல்லக் கூடாது என்பதில் அவர் கொண்டுள்ள உறுதிப் பாடே காரணியாகும்.

நன்றி :- **முத்தமிழ் விழா மலர் - 1991**

(1991ம் ஆண்டு அரும்பொருள், தொல்பொருள் பாதுகாப்புக்காக கலைஞானிக்கு 'மாமனிதர்' விருது வழங்கப்பட்டது)

❊



# தமிழ் மண்ணின் அரும்பொருள்

## திரு. கலைஞானியுடன் ஒரு சந்திப்பு

அரும்பொருள், தொல்பொருட் பாதுகாப்புத் துறைக்காக தமது உழைப்பு முழுவதையும் செலவிட்டுவரும் திரு. கலைஞானி அவர்களுடனான சந்திப்பில் நிகழ்ந்த உரையாடல் பற்றி இங்கே காணலாம்.

**தே**டிப் பெறமுடியாத அரும் பொருட்கள், மற்றும் தொல் பொருட்கள், கையெழுத்துப் பிரதிகள், ஆயுர்வேத மருத்துவக் குறிப்புகள் போன்ற பல்வேறு விடயங்களைச் சேகரித்து, தமிழ்உலகின் அரும் பொருட் காட்சியகத்தைத் தானே தனித்து உருவாக்கிடத் திடம் பூண்ட திரு. கலைஞானி அவர்களை அவரது இருப்பிடத்தில் சந்தித் தோம்.

காற்றிலாடும் வெள்ளைத் தலைமுடியும் ஒற்றை நாலு முழ வேட்டியுமாக தமது கருமத்தில் கண்ணாக இருந்தார். பல்வேறு விதமான தொல் பொருட்கள், கண்ணாடித் துண்டுகள், கண்ணாடிப் பெட்டிகள் என்பன நாலா புறமும் கிடக்க உறக்கமின்றி உழைக்கும் இந்த மாமனிதனை ஈழநாதத்தின் சார்பாகச் சந்தித்தோம். அவருடன் நாம் செலவிட்ட சுமார் ஒரு மணி நேரப் பொழுதில் தெரிந்து கொண்ட சில விடயங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறோம். "ஈழநாதத்தின் சார்பாகச் சந்திக்க வந்துள்ளோம்." எனக் கூறி அறிமுகம் செய்ததும், அங்கிருந்த இரு நாற்காலிகளையும் காட்டி எம்மை அமரும்படி கூறியவர் தாம் நின்று கொண்டே எமது கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தயாரானார்.

**ஐயா, உங்களின் முழுப் பெயர், பிறந்த இடம், சொந்த ஊர் போன்ற விபரங்களைக் கூற முடியுமா?**

எனது சொந்தப் பெயரையோ, சொந்த இடத்தையோ அல்லது தனிப்பட்ட விபரங்களையோ நான் பகிரங்கப்படுத்த விரும்பவில்லை. நான்கு பெண் சகோதரிகள் எனக்கு உடன் பிறப்பினர். ஆறுமாத காலத்திலேயே தந்தையை இழந்தேன். பன்னிரண்டு வயதுப் பராயத்தில் தாயையும் இழந்தேன். பெரிய தாயாரின் அரவணைப் பிலேயே வளர்ந்தேன். சோகத்தில் பிறந்த எனது சொந்த வாழ்க்கை அம்பலத்திற்கு வருவது அநாவசியம் என்றே கருதுகின்றேன்.

**அரும் பொருள் மற்றும் தொல் பொருட்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் தங்களை ஈடுபடுத்தக் தூண்டிய விடயங்கள் என்ன? அடுத்த கேள்விக்குத் தாவினோம்.**

1947ஆம் ஆண்டு மாசி மாதம் 23ம் திகதி பாடசாலை மாணவனாக இருந்த எனக்கு சித்திர ஆசிரியர் திரு. கந்தையா, சரியாகப் படங்கீறவில்லை என்பதற்காகத் தண்டித்தார். அத் தண்டனையின் தழும்புகள் முதுகுப் புறத்தில் படிந்திருந்தன. அவற்றைப் பெரிய ஆச்சியோ அல்லது வீட்டிலுள்ளவர்களோ கண்டு விடக்கூடாது என்பதற்காகத் துவாய்த்துண்டு ஒன்றினால் முதுகைப் போர்த்தியபடி கிணற்றடியில் மரங்களின் அடியில் கிண்டிக் கிளறிக் கொண்டிருந்தேன். அப்போது மூன்று காசுகளும், ஒரு சங்கும் என் கண்ணில் பட்டது. அதனை எடுத்துப் பத்திரப் படுத்திக் கொண்டேன். அதே ஆண்டு ஆடி மாதம் நான் படித்த யூனியன் கல்லூரிக்கு தேசாதிபதி (கவர்னர் ஜெனரல்) அவர்கள் கார்னிவேல் ஒன்றுக்காக வந்திருந்தார். அதை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சி நிகழ்ச்சியில் எனது சேகரிப்பான நாணயங்களையும் பழைய முத்திரைகளையும் காட்சிக்கு வைத்தேன். தேசாதிபதி அதனைப் பார்த்துவிட்டுச் சென்றதும் நாணயங்களுக்கும் முத்திரைகளுக்குமாக இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் பரிசளிக்கப்பட்டன. அது முதல் ANTIQUES எனப்படும் தொல்பொருள் மற்றும் அரும் பொருட்களைச் சேர்க்கலானேன்.

**இந்தக் துறையில் நீங்கள் எதிர்நோக்கிய இடர்பாடுகளைப் பற்றிக் கூறமுடியுமா? என்றதும்**

தாராளமாக எனக் கூறியவர், நிறைய சம்பவங்களை அடுக்கத் தொடங்கினார். 230 தரம் ஷெல்லடிக்கும் ஏழுமுறை விமானக் குண்டு வீச்சுக்கும் யாழ்ப்பாண நகரம் இலக்காகிய 1986 ஆம் ஆண்டின் ஒரு நாளில் எனது சொத்துக்கள் அனைத்தையும் பாதுகாப்பிற்காக குரும்ப சிட்டிப் பகுதியிலுள்ள ஒரு வீட்டிற்கு மாற்றினேன். ஏழு லொறிகளில் ஏற்றக்கூடிய அவ்வளவு பொருட்களும், சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்டன. 1961 ஆம் ஆண்டின் சத்தியாக் கிரகம் உட்படப் பல அரிய ஆவணங்கள், பொருட்கள் இவ்வாறு சிதைக்கப்பட்டவற்றில் அடங்கும். கோயில்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், இடப்பெயர் ஆய்வு சம்பந்தமான தொகுப்புகள் எனப்பல அழிந்து போயின. இதைவிட தங்குவதற்கு இடமில்லாமலிருந்த குருநாகலைச் சிங்களவன் ஒருவனுக்குத் தங்க இடம் கொடுத்ததில் அவன் பல பெறுமதிமிக்க பொருட்களைக் களவாடிச் சென்றான். இப்படிப் பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்கி நான் சேகரித்தவற்றில் சுமார் முப்பத்தைந்து சத வீதத்திற்கும் குறைவானவையே இப்போது எனது கையிருப்பில் உள்ளவை என்றார்.



மேலே உடல் முள்ளும், காலடியில் ஆனை நெருஞ்சி முள்ளும் குத்துகின்ற நடுக் காட்டினுள்ளே ஒவ்வொரு கற்களாக அடுக்கி முன்னேறிப் போய் சேகரித்த பொருட்களையும், படங்களையும் பார்த்தபோது அவரது உழைப்பின் மகத்துவம் துல்லியமாகப் புரிந்தது.

**யாழ்ப்பாணத்திலிருந்த அரும்பொருட் காட்சியகம் உங்களுக்கு உதவியதா? எனக் கேட்ட போது**

இங்கிருந்த அரும்பொருட் காட்சியகத்திலிருந்த பொருட்களைக் கொழும்புக்கு, அல்லது அனுராதபுரத்திற்கு மாற்றிவிடும்படி வந்த உத்தரவை ஞாபகப்படுத்திய அவர், அதனைத் தடுக்க தாம் எடுத்த முயற்சிகள் பற்றி விளக்கினார்.

**யாழ்ப்பாணத்தில் அல்லது வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் பற்றி என்ன கருதுகிறீர்கள் எனக் கேட்ட போது,**

ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சி திரு. ரகுபதி தலைமையில் சீராக நடைபெற்றது என்று சொல்லலாம். ஆனால் மண்ணித்தலை அகழ்வாராய்வு தொடர்பாக சில கருத்து வேறுபாடுகளுண்டு. கந்தரோடை அகழ்வாராய்வின் போது ஆராய்ச்சியாளர் முடிவுகளை வலிந்து பெற்றுக் கொண்டிருப்பதாகவே கருதுகின்றேன் எனப் பதிலளித்தார்.

**எமது வாசகர்களுக்கு தாங்கள் சொல்ல விரும்பும் விசேட செய்தி என்னவென வினவிய போது,**

"இலங்கை முழுவதிலும் மட்டுமல்ல இந்தியா முழுவதையும் எடுத்தாலும் தனியார் சேகரிப்பு உங்களிடம் தான் கூட" என்று அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டிற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர் கொடுமுடி சண்முகமும் 'கொங்கு' பத்திரிகை ஆசிரியர் திரு. புலவர் இராசுவும் சுட்டிக் காட்டியதை மகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார். மேலும் கொழும்பிலிருந்து தனிக் கார் வாடகைக்கு அமர்த்தி வந்திருந்த அமெரிக்கத் தம்பதிகள் 50000 ஸ்ரேலிங் பவுண் (ரூபா பதினைந்து இலட்சம்) வரையில் விலைகேட்ட போதும் எமது நாட்டுப் பாரம்பரியம் ஈழத் தமிழகத்தை விட்டு வெளியே போகக் கூடாது என்பதற்காக கொடுக்கச் சம்மதிக்காததையும் பெருமையோடு சுட்டிக் காட்டினார்.

**உங்களுடன் ஒத்துழைத்து தங்கள் உடல் உழைப்பை உதவ எவரும் முன்வந்துள்ளார்களா என வினவிய போது,**

உதட்டின் ஓரத்தில் சோகமான புன்னகையை நெளிய விட்ட வாறே "கறையானும், தத்துவெட்டியும், எலியும் தான் எனக்கு உறுதுணையாகின்றன" எனப் பதிலளிக்கக் கேட்ட போது உள்ளம் நொந்தது.

வருங்காலச் சந்ததிக்காக தாம் சேர்க்கும் இந்தச் செல்வத்தை மேலும் விரிவாக்கி, பக்குவமாகப் பாதுகாத்துக் கையளிக்கத் தாம் உறுதி பூண்டிருப்பதாகக் கூறும் கலைஞானியின் வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடையே எந்த இடைவெளியையும் காண முடிய வில்லை.

(ஈழநாதம் பத்திரிகையில் இருந்து தொகுக்கப்பட்டது)

நன்றி :- **'ஈழநாதம்'**
14-06-1991, பக்கம் 7

*



# அரும்பொருட் கண்காட்சி
# யாழ். பல்கலைக்கழகம் 1991

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இந்துமன்றமும் என்ற கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது)

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து மன்றத்தின் ஆதரவில் 'கலைஞானி' அவர்களின் மாபெரும் அரும்பொருட் கண்காட்சி 22-09-1991 தொடக்கம் 08-10-1991 வரை தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் வரை பல்கலைக்கழக நூல்நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. கலைஞானி அவர்களின் தனிப்பட்ட சொந்த முயற்சியினால் சேகரிக்கப்பட்ட பல்வேறு வகையான அரும்பொருட்களை உள்ளடக்கிய முழுமையான கண்காட்சி, 1974 ஆம் ஆண்டு நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொழுது நிகழ்ந்தது. பதினாறு ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் 1991 ஆம் ஆண்டுதான் இக்கண்காட்சி மீண்டும் முழுமையான முறையில் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது.**

**இக்கண்காட்சி மண்டபத்திலே தென்னாசியாவின் குறிப்பாக ஈழத்தமிழர்களின் நாகரிக வரலாற்றினைச் சித்திரிக்கின்ற பழைமை வாய்ந்ததும், பல்துறை சார்ந்ததுமான அரும்பொருட்களான தொல்லியற் சின்னங்கள், கலை, பண்பாடு, இலக்கியம், சமயம், வைத்தியம், சோதிடம், அரசியல் ஆகிய இன்னோரன்ன பல அரிய அறிவியற் பொக்கிஷங்கள் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. கலைஞானியின் அரும்பொருட் கண்காட்சியின் ஆரம்ப வைபவத்தில் மங்கல விளக்கினை கலைப்பீடாதிபதி, பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக பிரதம நூலகர் சி. முருகவேள் ஆகியோர் ஏற்றி வைத்தார்கள். இக்கண்காட்சியினை பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.**

**அரும் பொருட்காட்சியினை வடமராட்சி, தென்மராட்சி உட்பட பல பகுதிகளில் இருந்தும் பாடசாலை மாணவர்கள், மாணவிகள், ஆசிரியர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஆகியோர் பார்வையிட்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.**

நன்றி :- **'பரமேஸ்வரம்'**
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய
மஹா கும்பாபிஷேக மலர்
யாழ். பல்கலைக்கழகம்.
02-06-1991

**ப. கணேசலிங்கம்**
உறுப்பினர்
பரமேஸ்வர ஆலயபரிபாலன சபை
(விரிவுரையாளர் இந்து நாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்)

## மாமனிதர் கலைஞானியின்

# வரலாற்றுச் சான்று காட்டி நிற்கும் அரும் பொருள் கண்காட்சி

நடைபெற்றுக் கொண்டிருக்கும் "மாமனிதர்" கலைஞானியின் தொல்பொருட் கண்காட்சியினைப் பார்ப்பதற்காக யாழ். பல்கலைக் கழக நூல் நிலைய மண்டபத்திற்கு நாம் சென்றிருந்தோம்.

அங்கு புத்தகங்கள், சஞ்சிகைகள், புகைப்படங்கள், தொல் பொருட் சின்னங்கள், மருத்துவக் குறிப்புக்கள் (ஆங்கில மற்றும் ஆயுர்வேத) மற்றும் இன்னோரன்ன வகையிலான பொருள்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

தலை நிமிர்ந்து சென்ற நாம் அங்கு தலை குனிந்த வண்ணம் தரையில் வைக்கப்பட்டிருந்த பொருள்களை, நூல்களை பார்வையிட்டோம். அம்புக் குறியிட்ட வழியைப் பின்பற்றி சுற்றி வரப் பார்த்தோம்.

**- உமா -**

நாம் பத்திரிகையாளர் என்பதை முதலில் நாம் அறிமுகப் படுத்தாவிடினும் 'மாமனிதர்' கலைஞானி பின்னர் அறிந்து எமக்குச் சில விளக்கங்களை அளித்தார்.

ஆரம்பத்திலே இலங்கை, இந்திய சஞ்சிகைகள் வைக்கப் பட்டிருந்தன. இவற்றிலே சிலவற்றை நாம் அறிந்திருந்தும் கூட அங்கேதான் கண்டோம். சில புத்தகங்களைப் பற்றி அறிந்திருக்கவே இல்லை. இங்கு பார்த்த பின்னர் தான் இப்படியொரு புத்தகம் வந்தது என்பதையும் உணர்ந்து கொண்டோம்.

ஆனால் இந்தச் சஞ்சிகைகளையோ புத்தகங்களையோ விளங்கிக் கொள்வதற்கு சில நேரங்கள் பிடித்தன. மேசை ஒன்றிலோ உயரமான ஒரு இடத்தில் இதனை ஒழுங்கு படுத்தியிருந்தால் அல்லது இப் புத்தகங்கள் பற்றிய விபரங்களை அருகில் எழுதியிருந்தாலோ விளக்கமாக இருந்திருக்கும். இதற்கான காரணத்தை "மாமனிதர்" கலைஞானியிடமே கேட்டோம். "பத்திரிகைத் தட்டுப்பாட்டால் இவ்வாறான ஒழுங்கை தான் கடைப்பிடிக்கவில்லை" என்று தெரிவித்தார். அவர் தெரிவித்த காரணம் நியாயமானது. நாம் பத்திரிகையாளர் என்பதால் அதனை உணர்ந்து கொண்டோம். ஆனால் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலர் இக்கண்காட்சியைப் பார்வையிடுவதால் இதனை நிவர்த்தி செய்திருக்கலாம்.

ஆனால் இதனை விட்டு கூட்டுமொத்தமாக சஞ்சிகைகள், நூல்கள் பற்றிப் பார்த்தோமானால் இவற்றை ஒழுங்கு செய்வதற்கு அதிகமான இடங்கள், மேசைகள் தேவைப்பட்டிருக்கும்.



மறுவளமாக இவையெல்லாவற்றையும் தனி ஒரு மனிதராக இருந்து எவ்வாறு பாதுகாத்து வைத்திருந்தார் என்பதை நினைக்கும் போது ஆச்சரியமாகவும் இருந்தது. தமிழாராய்ச்சி மாநாட்டு மலர்கள், தொல்காப்பியஉரை, ஆங்கில கவிஞர்களின் நாடகத் தொகுப்புகள், விநோதமான பொருள்கள் என்பனவும் இவற்றில் அடங்கும். "மாமனிதர்" கலைஞானி அவர்கள் எமக்குச் சிலவற்றை விளக்கி வந்தபோது கையில் ஒரு கல் வைத்திருந்தார். அதனைப் பற்றிக் கேட்டபோது அவர் "சாப்பிட்டு விட்டு வரும் போது இதனைக் கண்டெடுத்தேன்" என்று தெரிவித்தார். இவ்வாறாகவே நாளிலும், பொழுதிலுமாக அவர் சேகரித்த பொருள்களை இந்தக் கண் காட்சியில் நாம் கண்டோம்.

**யாழ். பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் "மாமனிதர்" கலைஞானியின் தொல்பொருட் கண்காட்சி பற்றிய குறிப்பு இங்கே தரப்படுகிறது.**

புத்தகங்களை அடுத்து நாணயங்கள் வைக்கப்பட்டிருந்தன. அங்கே பல்வேறு காலத்திற்குரிய நாணயங்கள் காணப்பட்டன. ஆனால் அவற்றுக்குரிய காலங்கள் பற்றி எந்தக் குறிப்பும் அங்கு காணப்படவில்லை. சிலவற்றில் மட்டும்

"குரும்பசிட்டி தச்சவளவில் கண்டெடுக்கப்பட்ட டச்சு நாணயம்"

"ஏழாவது கால 1902 நாணயம்" என்று குறிக்கப்பட்டிருந்தது. இதனால் இவை எக்காலத்திற்குரியவை என்பதை அறிய முடியாமலிருந்தது.

எட்வேர்ட் கால நாணயத்தில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளும் பொறிக்கப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து பத்திரிகைகள் காணப்பட்டன. இந்திய இலங்கை பத்திரிகைகள் இவற்றில் குறிப்பிடத்தக்கன.

தொடர்ந்து மட்பாண்ட ஓடுகள், சீனச் சாடித் துண்டுகள் போன்றவற்றைப் பார்த்துக் கொண்டு வந்த நாங்கள் எட்டுக்கால் பூச்சி ஒன்று கல்லாக மாறிய அந்த வடிவத்தைப் பார்த்தோம். " இது எங்கு கண்டெடுத்தீர்கள்? எத்தனை வருடங்களுக்கு முற்பட்டது?" என்று கேட்டோம். "கோடிக்கணக்கான வருடத்தையது" என்றும், இப் பொருள்கள் கண்டெடுத்த இடங்கள் இரகசியமாக வைத்திருக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

இங்கு வைக்கப்பட்டிருக்கும் பொருள்களில் பல விஞ்ஞான ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை என்பது கவலைக்குரியதே.

"அதற்கேற்ற நடைமுறைகளை ஏன் கடைப்பிடிக்கவில்லை" என்று கேட்டதற்கு "அத்தகைய வசதிகள் தனக்குக் கிடைக்கவில்லை" என்று அவர் தெரிவித்தார்.

பல்லவர்காலப் பிள்ளையார் லட்சுமி பிரேஸ், ஆறாம் பராக்கிரமபாகு கால கட்டட சிதைவுகள் போன்றவை இங்கு காணப்பட்டவைற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

ஆனால் இவையாவும் வடிவ அமைப்பு, அடையாளம் காணப்பட்ட இடங்களை வைத்து இவர்களுக்குரியது, இந்தக் காலத்திற்குரியது என்று கூறினாலும் அவை முறையான கணிப்புக்கு உள்ளாக்கப்படவில்லை என்பது வேதனைக்குரிய விடயமே.

அடுத்ததாக "மாமனிதர்" கலைஞானி அவர்கள் சிறந்ததொரு கலைஞர் என்பதை எடுத்துக் காட்டும் புகைப் படங்கள் நாடகத் துறையிலான பல்வேறு அம்சங்கள் விளங்கின.

சிறுவயதில் என்ன மாதிரி இருந்த சிறுவன் எப்படி இளைஞனாக வந்த பின்னர் இருப்பான் என்பதை மிக நுணுக்கமாக ஆராய்ந்து நாடகங்களைத் தயாரித்து இருக்கிறார். இங்கு காணப்பட்ட புகைப்படங்களிலிருந்து இதனை நாம் அறிந்து கொண்டோம். "நாணயம்" என்ற நாடகத்தில் பங்குபற்றிய கலைஞர்களின் புகைப் படங்கள் இங்கு வைக்கப்பட்டிருந்தன. இவையாவும் சிறப்பானதாக இருந்தன.

வேறும் சில ஒரு போத்தலில் ஒரு லட்சம் மைக்ரோ படங்கள் காணப்பட்டன. இவ்வளவு நுணுக்கமாக இந்தப் படங்களை வெட்டினார் என்பதைப் பார்க்க ஆச்சரியமாகவே இருந்தது.

இறுதியாக நாம் பார்த்து விட்டு வரும்போது ஒரு பக்கத்தில் கிடைத்தற்கரிய சில புகைப்படங்கள் நனைந்து கறையான் அரித்துப் போயிருந்தன.

இப்பொருள்களை வைத்திருக்கப் போதிய இடவசதி யின்மையால் இவை இப்படியான நிலைக்கு வந்ததாகத் தெரிவித்தார் "மாமனிதர்" கலைஞானி அவர்கள்.

நாளைய சந்ததிக்கான அரும்பொருள்களை நாம் பேணவேண்டுமெனில் அவற்றுக்குப் பாதுகாப்பான இடம் ஒன்றை அமைத்துக் கொடுத்தல் என்பதே தமிழ் மக்களின் தலையாய கடமையாக இருக்கும். "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?

நன்றி : **'ஈழநாதம்'** (பக்கம் 03)
08-10-1991

*



# கலைஞானியின் கலைச் செல்வங்கள்

ஈழத்தின் கலைப் பிராந்தியங்களில் வடமாளிலத்திற்கும் தனிச் சிறப்பு உண்டு. சுமார் 2500 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் நாகரிகம் இங்கு நிலவி வந்தாலும், இந்நாகரிகம் பற்றிய வரலாற்று மூலங்கள் ஒரு சிலவே எஞ்சியுள்ளமை துரதிஷ்டமே. போர்த்துக்கீசர் போன்ற பிறநாட்டவரின் படையெடுப்புகளால் அழிந்தவை போக, எஞ்சியிருந்தவற்றுட் பலவற்றை மக்களின் புறக்கணிப்பினாலும் இழந்து விட்டோம்.

சுமார் 400 ஆண்டுகளாக அரச ஆதரவு இன்றியோ அல்லது அதனை நன்கு பெறாமலோ இருந்துவரும் இப்பிராந்தியக் கலைச் செல்வங்களை ஒரு சில தனிப்பட்ட தொல்லியல் கலை ஆர்வலர்களும் பேணிப்பாதுகாப்பதில் உண்மையான சுயநலமற்ற அக்கறை காட்டி வந்துள்ளனர். அத்தகையோர் வரிசையில் இன்றும் முதன்மையிடத்தில் நிற்பவர் "கலைஞானி" எனப் பொதுவாக அழைக்கப்படும் திரு. அ. செல்வரத்தினம் எனக் கொள்ளுதல் மிகையாகாது. இவர் தனது வாழ்க்கையை இதற்காக அர்ப்பணித்திருக் கிறார். குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இளம் பராயம் தொட்டே பல்வேறு தொல்பொருட் சின்னங்களையும், கலைப் பொருட்களையும் பிறவற்றையும் தேடிச் சேகரிப்பதிலும் அவை பற்றி அறிதலிலும், அறிமுகம் செய்வதிலும் நன்கு ஈடுபட்டு வந்துள்ள புகைப்படக்கலைஞரும் ஆவார். இக் கலைத் தேர்ச்சி இவருடைய கலைபேணும் ஆர்வத்திற்கு மேலும் மெருகு ஊட்டியது எனலாம்.

கலைச் செல்வங்களைத் தேடிச் சேகரித்துப் பேணிப் பாதுகாப்பதிலும் விளக்குவதிலும் நீண்டகாலமாக ஈடுபட்டிருந்த இவருடைய அரும்பொருட் சேகரிப்புகளிலே சிறப்பாகத் தமிழர் நாகரிகம் பற்றிய பல்வேறுபட்ட பொருட்கள், புராதன மட்பாண்டங்கள், கூரைஓடுகள், நாணயங்கள், கட்டடப் பகுதிகள், சிற்பங்கள், சாசனப் பிரதிகள், நூல்கள், ஏடுகள், கோயில்களிலும் வீடுகளிலும் பயன் படுத்தப்பட்ட பாவனைப் பொருட்கள், பலரகப் புகைப்படங்கள் எனப்பல இடம்பெற்றுள்ளன.

இந்நூற்றாண்டின் எழுபதுகளிலே யாழ்ப்பாணத் தொல்லியற் கழகம் நன்கு செயற்பட்ட போது, அதில் ஈடுபாடுள்ள ஓர் உறுப்பின ராகத் தொல்லியல் மேலாய்வுகள் சிலவற்றில் ஈடுபட்டவர். கந்தரோடை, வல்லிபுரம், நல்லூர் முதலிய இடங்களின் வரலாறு,

தொல்லியற் சின்னங்கள் ஆகியன பற்றியும் இவர் நன்கு அக்கறை காட்டி வந்தவர். 1972 இலே அக்கழகத்தின் செயலாளர் 'நல்லூரும் தொல்பொருளியலும்' எனும் கட்டுரை எழுதுவதற்கு இவரே தூண்டு கோலாக விளங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1973 இலே இக்கழகம் யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்திலே நடத்திய தென்னாசிய சாசனவியல் கருத்தரங்கின்போதும், 1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போதும் இவருடைய அரும்பொருட் சேகரிப்புகள் கண் காட்சிக்கு வைக்கப்பட்டுப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றன. அன்றைய அரசாங்க அதிபர் இவற்றைப் பெற முயற்சித்தபோது, பணத்திற்காகவோ அல்லது புகழுக்காகவோ வேறு சிலரைப் போல இவர் இவற்றைக் கைவிட விரும்பிலர். சுயமரியாதையும் சுதந்திர சிந்தனையும் உடைய இவர் இன்று ஒரு 'மாமனிதராக' கௌரவிக்கப் பட்டுள்ளமையில் வியப்பில்லை.

துரதிஷ்டவசமாக இவரின் அரும் பொருட் சேகரிப்புகளில் ஒரு பகுதி கள்வரின் கைவரிசைக்கு இலக்காகியும் பல இன்னல்களுக்கு மத்தியிலும் பெரும்பாலானவை இன்றும் ஆர்வலரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இருப்பது குறிப்பிடற்பாலது. இம் மாமனிதரின் தனிமனித சேகரிப்புகளை மீண்டும் யாழ்ப்பாண மக்களின் பார்வைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே வைப்பதிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துமன்றம் மேற் கொண்டுள்ள முயற்சிகள் பாராட்டுக்குரியவை. இக்கலைச் செல்வங்கள் மேலும் எவ்வகையிலும் பாதிக்கப்படாது ஒரு கேந்திர நிலையத்தில் நன்கு பேணப்பட வேண்டியவை. கலைஞானியின் அரும் பெரும் முயற்சிகள் பலருக்கும் முன்மாதிரியானவை. பாராட்டத் தக்கவை.

**பேராசிரியர் வி. சிவசாமி**

19-09-1991

(முன்னாள் செயலாளர்
யாழ்ப்பாண தொல்பொருளியற் கழகம்)
(தலைவர் சமஸ்கிருதத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

*







**தனது கைவண்ணத்தில் உருவான ஓவியங்களுடனும் பழைய பத்திரிகைகளுடனும் பரமேஸ்வராச் சந்தியிலுள்ள தற்காலிகப் பணிமனையில்.**

# அரும்பொருட் கண்காட்சி ஒரு அமரசாதனை

காணப்படும் பொருட்கள் வெறும் அரும் பொருட்கள் மட்டுமல்ல. பெருமை வாய்ந்தவை, நாட்டின் சிறப்பை, வரலாற்று ஓட்டத்தை, ஏற்பட்ட தடைகளை, வென்ற வகைகளை, மண்மூடிய கலைத்திறன்களை, இவற்றுக்கெல்லாம் சூத்திரதாரிகளான பெரியவர்களை, வீரர்களை, வரலாற்று நாயகர்களை, அறிஞர் தம் எழுத்தோவியங்களை, கலைஞர்கள் தீட்டிய கருத்தோவியங்களை ஒரே கூரையின் கீழ் நாம் கண்டு வியக்க வழி செய்த "கலைஞானியின்" உவமையில்லாத் தொண்டைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அமைதியும், பணிவும் தன் தனிப் பண்பாகிய இம் "மாமனிதன்" தன் காலம் எல்லாம் செய்த அயராத சேவைக்குக் கைமாறு கிடையாது. தமிழ்மக்கள் கலைப்பண்பாட்டு ஆர்வலர்கள் செய்யக் கூடியது ஒன்றுதான். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் காட்சியைக் கண்டு பயன்பெறுதலே கைமாறு.

"வழங்குகின்றான் மூல பண்டாரம் வந்து முந்துமினே"

என்ற மணிவாசகர் கூற்றே நினைவுக்கு வருகிறது. நாம் பல வருடங்கள் தேடியும் பெறமுடியாத சஞ்சிகைகள் நாளிதழ்கள் போன்ற அரும் பொருட்களைக் காணவும், கலைப் பொருட்கள் எப்படிப் பேணப்பட வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும் ஓர் அரிய வாய்ப்பு.

**ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம்**

(முன்னாள் துணை முதல்வர்
யாழ். இந்துக்கல்லூரி)

# மாமனிதருடன் ஒரு செவ்வி

**கேள்வி :- ஐயா, "மாற்றம்" வாசகர்களுக்கு உங்களை அறிமுகப் படுத்துவீர்களா?**

பதில் :- என்னை "கலைஞானி" என்று அழைப்பார்கள். இயற்பெய ரைக் கூறுவதில் எனக்கு இஷ்டமில்லை. குரும்பசிட்டியில் பிறந்தேன் வளர்ந்தேன். இன்று நாடோடியாக இருக்கின்றேன். அரும்பொருட்களைச் சேகரிப்பது எனது பொழுது போக்கு.

**கேள்வி :- அரும் பொருட்சேகரிப்பில் எவ்வளவு காலமாக ஈடுபட் டுள்ளீர்கள்?**

பதில் :- 1947ஆம் ஆண்டு மாசி மாதம் 23ஆம் திகதி 3 சங்குகளும் 3 காசுகளும் எடுத்ததில் இருந்து இற்றைவரை ஈடுபட் டுள்ளேன்.

**கேள்வி :- இத்துறையில் ஈடுபடுவதற்கு ஏதாவது காரணங்கள் உண்டா?**

பதில் :- முதலில் பொழுது போக்காக ஆரம்பித்தேன். பின்பு முன்னைய புராதன அம்சங்களை மக்களுக்குத் தெரியப் படுத்தவேண்டும் என்பதற்காக ஈடுபட்டுள்ளேன்.

**கேள்வி :- இந்தத் துறையில் மறக்கமுடியாத சம்பவங்கள் ஏதாவது உண்டா?**

பதில் :- நிறைய இருக்கின்றன. பலாலி அம்மன்கோயில், ஊரெழு அம்மன்கோயில், உரும்பிராய் பர்வத அம்மன் கோயில் ஆகிய ஆலயக் கிணறுகளில் புராதன சிலைகள் இருப்ப தாக அறிந்து சென்றபோது என்னைக் "கள்வன்" என்று பூசகரும், ஏனையோரும் கத்தியதும், 1964ஆம் ஆண்டளவில் மாதகலில் இருந்து திருவடிநிலைக்குச் செல்லும் போது தடியால் நிலத்தைத் தட்டித் தட்டிப் பார்த்துச் செல்ல "விசரன்" என ஊர் மக்கள் கதைத்துக் கொண்டதும், ஓமந்தை சேமமடு காட்டுப் பிரதேசத்தில் கற்படுக்கைப் பகுதிக்குச் சென்றபோது குடிக்க நீர் இல்லாது தவித்ததும், கதைக்கக் குரல் வராமல் துடித்ததும், மறக்கமுடியாத சம்பவங்களில் சிலவாகும்.



**கேள்வி :- நீங்கள் எத்தனை தடவை கண்காட்சிகளை வைத்துள் ளீர்கள்?**

பதில் :- 3 தடவை நடத்தியுள்ளேன். 1974இல் தமிழாராய்ச்சி மாநாட்டிலும், 1991இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், 1992 ஆவணி மாதத்தில் நாவலர் கலாசார மண்டபத்திலும் நடத்தியுள்ளேன்.

**கலைஞானி என்பவர் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவரது இயற்பெயர் செல்வரத்தினமாகும். இவர் எமது ஈழத்திருநாட்டின் மாமனிதர். முன்னை நாளில் சிறந்த ஒரு படப்பிடிப்பாளர். ஸ்ரான்லி வீதியில் அமைந்திருந்த கலைஞானி படப்பிடிப்பு நிலையத்தின் உரிமையாளரும் இவரே தான். இவர் தனது பொழுது போக்காக அரும்பொருட் சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். இத்தகைய பெரியாரை 'மாற்றம்' வாசகருக்கு செவ்வி மூலம் அறிமுகம் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.**

**கேள்வி :- இன்றைய போர்க்காலச் சூழ்நிலையால் உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றிக் கூறுவீர்களா?**

பதில் :- 1986இல் குரும்பசிட்டியில் எனது அரும்பொருட் சேகரிப்பில் 7 லொறி பொருட்கள் சிங்கள இராணுவத்தால் கொள்ளை யிடப்பட்டதும், 1991இல் எனது ஸ்ருடியோவில் 4 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டதும் முக்கியமானவை. இதைவிட நாளாந்தம் பல பிரச்சினைகள் உண்டு.

**கேள்வி :- 'அரும்பொருட் காட்சியகம்' அமைப்பது தொடர்பாக தங்க ளுக்குள்ள பிரச்சினைகள் எவை?**

பதில் :- நான் நாடோடியாக அலைகிறேன். நான் எழுந்து நடக்கவே உதவி தேவையாகவுள்ள இந்த நேரத்தில் என்னிடம் தற்போதுள்ள 3 லொறிகள் கொள்ளக்கூடிய அரும் பொருட்களையும் தூக்கிச் செல்வது இலகுவான காரிய மல்ல. அரும்பொருட்களைப் பராமரிப்பதற்குத் தேவையான நிதியும் என்னிடமில்லை. இச்சூழ்நிலையில் 'அரும்பொருட்

காட்சியகம்' அமைப்பது தனிமனிதனான என்னால் இயலுமா? இல்லைத்தானே.

**கேள்வி :- உங்களுடைய வாழ்வின் பின்னால் நீங்கள் சேகரித்து வைத்துள்ள அரும்பொருட்களைப்பேண யாரையாவது வாரிசாக வைத்துள்ளீர்களா?**

பதில் :- எனது துறையில் ஆர்வமான பிள்ளைகள் எல்லாம் என் பிள்ளைகள் தான். இருந்தும் இப்போது ஒரு இளைஞனை என்னுடன் வைத்திருக்கிறேன். அவருடைய எதிர்காலம் எனது பொருட்களைப் பேண உதவுமா? என்பது எனக்குத் தெரியாது.

**கேள்வி :- தமிழரது நல்லூர் இராசதானி தொடர்பான ஆதாரங்கள் உங்களிடம் உண்டா?**

பதில் :- உண்டு. நல்லூர் இராசதானி இருந்த இடங்களை ஆராய்ந்தால் பல அரும்பொருட் சான்றுகளை எடுக்கலாம். அதற்கு சகலரதும் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

**கேள்வி :- தங்களது அரும்பொருட்கள் எதிர்காலச் சந்ததிக்குப் பிரயோசனமாக இருக்கத் தங்களது திட்டம் என்ன?**

பதில் :- அறிஞர்கள் சிலரைக் கொண்ட 'அறங்காவற்குழு' ஒன்றை அமைத்து எனது அரும்பொருட்களை எதிர்காலத்தில் பயன்பட ஏதாவது செய்யும்படி வேண்டியுள்ளேன்.

இவ்வளவு நேரமும் எமக்கு ஒத்துழைத்ததற்கு நன்றி ஐயா.

நன்றி :- **'மாற்றம்' மக்கள் சஞ்சிகை**
ஐப்பசி - மார்கழி 1992

*



# கலைஞானி அரும்பொருட்காட்சி மண்டபம், நூல் நிலையம், சித்திரகூடம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும் அறக்கட்டளை

இத்தால் சகலருமறிய, யாழ்ப்பாணம் குரும்பசிட்டி வாசியும், "கலைஞானி" என்ற கௌரவப் பெயரால் பொதுமக்களால் அன்புடன் அழைக்கப்பட்டவனுமாகிய அரியகுட்டி செல்வரத்தினம் ஆகிய நான் எனது பதினைந்தாவது பிராயத்திலிருந்தே கலைப்பணியிலும், தமிழர் பாரம்பரியத்தையும் நாகரீகத்தையும் வெளிப்படுத்தும் தொல் பொருட்கள், புராதனச் சின்னங்கள், பழைய நூல்கள், ஏட்டுச் சுவடிகள் ஆகியவற்றைச் சேகரிக்கும் பணியிலும் என்னை ஈடுபடுத்திக் கொண்டு பிரமச்சாரியாக வாழ்ந்து, அறுபது வயதை அடைந்துவிட்ட இவ்வேளையில் நான் சேகரித்து வைத்த இப்பொருட்கள் தமிழ் மக்களுக்குச் சந்ததி சந்ததியாகப் பயனளிக்க வேண்டும் என்று நான் விரும்புவதாலும், எனது சீவிய காலத்துக்குப் பின்னர் நான் செய்து வந்தது போலவே இப்பணிகள் அக்கறையுடன் தொடரப்பட வேண்டுமென்று நான் ஆசைப்படுவதாலும், என்னால் கடந்த 45 வருடங்களாகச் சேகரித்து வைக்கப்பட்ட பல இலட்சங்கள் பெறுமதியான கலைப்பொருட்கள், பழைய நூல்கள், ஏட்டுச் சுவடிகள், கற்சிலைகள், களிமண் வேலைப்பாடுகள், செங்கல் படிவங்கள், நாணயங்கள், மரவேலைப்பாடுகள் யாவற்றையும் இத்தைப்பொங்கல் திருநாளில் நல்லைக் கம்பன் கோட்ட மண்டபத்தில் கூடியிருக்கும் சான்றோர்கள் முன்னிலையில் தமிழ் மக்களுக்கு அர்ப்பணித்து, பின்வரும் கட்டுப்பாடுகளைக் கொண்ட இவ் அறக்கட்டளையை இயற்றி உறுதி சாதனப்படுத்துகின்றேன்.

## 1. பெயர் :

இவ் அறக்கட்டளையின் பெயர், "கலைஞானி அரும்பொருட் காட்சி மண்டபம், நூல் நிலையம், சித்திரக்கூடம், ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும் அறக்கட்டளை" எனப்படும். சுருக்கமாக, "கலைஞானி அறக்கட்டளை" என வழங்கும்.

## 2. எனது நோக்கங்கள் :

(அ) என்னால் இன்று தமிழ் மக்களுக்கு அர்ப்பணிக்கப்படும் பொருட்கள் யாவும் யாழ்ப்பாண நகரசபை எல்லைக்குள் ஒரு நிரந்தரமான மண்டபத்தில் பொதுமக்களின் பார்வைக்குக் காட்சிப் பொருட்களாக வைக்கப்படவேண்டும்.

(ஆ) எனது சீவிய காலத்துக்குப்பின் கலைப்பொருட்கள், தொல் பொருட்கள், பழைய நூல்கள், ஏட்டுச்சுவடிகள் ஆகியன தொடர்ந்தும் சேகரிக்கப்பட்டு அம்மண்டபத்தில் காட்சிப்பொருட்களாக வைக்கப்பட வேண்டும்.

(இ) பழைய நூல்களையும், ஏட்டுச் சுவடிகளையும், நூல் நிலைய மண்டபம் ஒன்று அமைத்து அதில் பொதுமக்களின் பாவனைக்காக வைக்கப்படுவதோடு நாளாந்த செய்தித் தாள்களையும், சஞ்சிகை களையும் பொதுமக்கள் வாசிப்பதற்கான வசதிகள் செய்யப்பட வேண்டும்.

(ஈ) சித்திரக்கூட மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அம்மண்ட பத்தில் தமிழ்த் தொண்டு, சமயத் தொண்டு, பொதுத் தொண்டு, (கலைஞர்கள், ஆய்வாளர்கள், வைத்தியர்கள், சோதிடர், ஞானிகள், யோகிகள், கவிஞர்கள்) ஆகியவற்றில் ஈடுபட்டு வாழ்ந்து மறைந்துபோன சான்றோர்கள், ஆகியோரின் உருவப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட வேண்டும்.

> **தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்**
>
> எம் கலை, கலாசாரம், பண்பாட்டைப் பிரதி பலிக்கும் தொல்பொருட்கள், அரும் பொருட்களை வலிதின் முயன்று பெரும் பொருட் செலவில் சேர்த்தார் ஒரு பெருந்தகை. வாழும், வரவுள்ள சந்ததியினர் இவற்றால் பயன்பெறவென அறக்கட்டளை மூலம் வகை செய்துள்ளார் அம்மாமனிதர்.
>
> தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் வரிசையில் முன்இடம் பெறுகிறார் இப்பெரியார் "கலைஞானி" என்போம் நாம்.
>
> **க. கனகராசா** J. P.

### 3. அறங்காவலர் குழு

எனது நோக்கங்களைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு பின்வரும் பெரியோர்கள் எனது வேண்டுகோளுக்கிணங்கியமைக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்து அவர்களை அறங்காவலர் களாக நியமிக்கின்றேன்.

(1) நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வர்
(2) சைவப்பெரியார் திரு. மு. ஞானப்பிரகாசம், ஏழாலை
(3) செந்தமிழ்ச் செல்வி. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, தெல்லிப்பழை.
(4) வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரம், யாழ்ப்பாணம்
(5) கலாநிதி க. கனகராஜா, ஜே. பி. (மில்க்வைற்)
(6) கலாநிதி எஸ். ஜெயநேசன், அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை



(7) திரு. அ. குமரகுரு, ஜே. பி. யு. எம். வழக்கறிஞர்
(8) திரு. சி. நடராசா. வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
(9) திரு. ஏ. ரி. பொன்னுத்துரை, குரும்பசிட்டி.
(10) திரு. சு. பொ. நடராசா உரிமையாளர் 'அண்ணா' தொழிலகம்
(11) திரு. க. சி. குலரத்தினம், பல்கலைப்புலவர், அம்மன்வீதி, யாழ்ப்பாணம்
(12) திருமதி. மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம், புலவரகம், மயிலணி சுன்னாகம்

> **தேன்போல் வைத்தீர் தெரிந்து**
>
> காலத்தாற் தேடிய கலைப்பொரு ளத்தனையும்
> சால உவந்தளிக்கும் ஞானியே - காலத்தாற்
> காண்பார் வியக்கக் கலைக்கூடக் காட்சியாய்த்
> தேன்போல் வைத்தீர் தெரிந்து.
>
> **பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன்**

(அ) இவர்களில் முதலாமவர் தலைவராகச் செயற்படுவார். எனது சீவிய காலத்தில் அவருக்கு எக்காரணத்தைக் கொண்டாவது தலைவராகச் செயற்பட இயலாத நிலை ஏற்படுமாயின், அவருடைய இடத்திற்கு நான் பிறிதொரு நியமனஞ் செய்யலாம்.

(ஆ) எனது சீவிய காலத்துக்குப்பின் தலைவராகப் பணிபுரிபவரால் செயற்பட இயலாத நிலைமை ஏற்படுமாயின் ஏனைய அறங்காவலர்கள் அவ்விடத்துக்கு ஒருவரை நியமிப்பர்.

(இ) அறங்காவலர்களில் ஒருவர் சட்ட அறிஞராக இருப்பார். இவர் செயற்பட இயலாத நிலைமை ஏற்படுமாயின் தலைவர் இவருடைய இடத்துக்கு சட்ட அறிஞராகவுள்ள வேறொருவரை நியமிப்பார்.

(ஈ) அறக்கட்டளையின் நோக்கங்களை நிறைவேற்றும் பணிகள் தொடர்பான எவ்விடயத்திலும் அறங்காவலரின் முடிவே இறுதியான தாயிருக்கும். ஏகமனதாக முடிவு எடுக்க முடியாத பட்சத்தில் தலைவரும், பெரும்பான்மை அறங்காவலர் உறுப்பினரும் சேர்ந்து எடுக்கும் முடிவே இறுதியானதாயிருக்கும்.

(உ) இவ் அறக்கட்டளையை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்படும் ஊழியர்களின் நியமனம் ஒழுக்காற்று நடவடிக்கை ஆகியவற்றுக்கு அறங்காவலர் குழுவே பொறுப்பானதாய் இருக்கும். அவ்வப்போது தேவைகட்கேற்ப அறங்காவலர் குழு ஊழியர்களை நியமிக்கலாம்.

### 4. தலைவரின் கடமைகள்

தலைவர் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பதோடு இவ் அறக்கட்டளையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான சகல

பணிகளையும் வழிநடத்துபவராயிருப்பார். கூட்டங்களுக்குத் தலைவரால் தலைமை தாங்கமுடியாதவிடத்து அறங்காவலர்களில் ஒருவரை தலைமை தாங்குவதற்கு நியமிப்பார்.

### 5. செயலாளரின் கடமைகள்

தலைவர் அறங்காவலர்களில் யாராவது ஒருவரை அறங்காவற்குழு அங்கத்தவர்களின் விருப்பத்தோடு செயலாளராக நியமிப்பார். செயலாளர் கூட்டங்களுக்கு அழைப்பாளராகப் பணிபுரிவதோடு அறக்கட்டளையின் நோக்கங்களை நிறைவேற்றும் பணிகளில் தலைவருக்கும், ஏனைய அறங்காவலர்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துபவராகவும், பணிகளை நெறிப்படுத்துபவராகவும் செயற்படுவார்.

### 6. பொருளாளரின் கடமைகள்

தலைவர் அறங்காவலர்களில் யாராவது ஒருவரை அறங்காவற்குழு அங்கத்தவர்களின் விருப்பத்தோடு பொருளாளராக நியமிப்பார். பொருளாளர் அறக்கட்டளையின் நிதி, சொத்துக்கள், காட்சிப் பொருட்கள் யாவற்றையும் பாதுகாக்கும் பொறுப்புக்களோடு, களஞ்சியப் பொறுப்பாளரின் பணிகளையும் மேற்பார்வை செய்வார்.

### 7. ஆலோசனைச் சபை

அறங்காவல் குழுவுக்கு ஆலோசனை கூறுவதற்கு ஒவ்வொரு வருடமும் தைமாதத்தில் நடைபெறும், பொதுக் கூட்டத்தில் அறங்காவல் குழு பத்துப்பேரைத் தெரிவு செய்யும்.

### 8. சித்திரக்கூட மேற்பார்வையாளர்

ஒவ்வொரு வருடமும் தைமாதத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் சித்திரக்கூட மேற்பார்வையாளராக ஐவர் நியமிக்கப் படுவர். இவர்களும் ஆலோசனைச்சபை உறுப்பினராக இருப்பர்.

### 9. பொதுக்கூட்டம்

ஒவ்வொரு வருடமும் தை மாதத்தில் தலைவர் இவ் அறக் கட்டளையின் செயற்பாடுகளில் அக்கறையுள்ள பொதுமக்களை அழைத்து ஒரு பொதுக் கூட்டத்தை நடத்துவார். அக்கூட்டத்தில் இவ் அறக்கட்டளைகளின் பணிகள் பற்றிய வருடாந்த அறிக்கையைச் செயலாளர் சமர்ப்பிப்பார். பொருளாளர் அறக்கட்டளையின் நிதி பற்றியும், கடந்துபோன வருடத்தின் வரவு - செலவுகள் பற்றியும், சொத்துக்கள், பொருட்பதிவேட்டில் உள்ள பொருட்கள் பற்றியும், ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார். இவ்வறிக்கை முறைமையாகக் கணக்காய்வு செய்வதற்கான அத்தாட்சிப் பத்திரத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.



## கலைஞானியின் கலைப்பொருள்கள் மக்களுக்கு அர்ப்பணிப்பு

"கலைஞானி" அவர்களால் கடந்த 45 வருடங்களாகச் சேகரித்து வைக்கப்பட்ட பல இலட்சங்கள் பெறுமதியான கலைப்பொருட்கள், பழைய நூல்கள், ஏட்டுச் சுவடிகள், கற்சிலைகள், களிமண் வேலைப்பாடுகள், செங்கல் படிவங்கள், நாணயங்கள், மரவேலைப்பாடுகள் யாவற்றையும் இத்தைப்பொங்கல் திருநாளில் இன்று நல்லை கம்பன் கோட்ட மண்டபத்தில் கூடியிருக்கும் சான்றோர் முன்னிலையில் தமிழ் மக்களுக்கு அர்ப்பணித்து இவ் அறக்கட்டளை இயற்றி உறுதிசாதனப்படுத்தப்படுகிறது.

### 10. நிதியும் சொத்துக்களும்

இவ்அறக்கட்டளையின் நிதிக்கும், சொத்துக்களுக்கும் அறங்காவல் குழுவே பொறுப்புடையதாயிருக்கும். சட்டபூர்வமான பத்திரங்களிலும் வங்கியில் பணம்பெறும் காசோலைகளிலும், உத்தியோக பூர்வமான சொத்துப் பத்திரங்களிலும், தலைவர் உட்பட முதல் மூன்று அறங்காவலர்கள் கையொப்பமிடுவது போதுமானதாகவும், சட்டபூர்வமானதாகவும் இருக்கும் உறுதிகள், பத்திரங்கள் யாவும் "கலைஞானி அறக்கட்டளை" என்ற பெயரிலேயே பதியப்படும். வங்கிக் கணக்குகளும் அவ்வாறே "கலைஞானி அறக்கட்டளை" என்ற பெயரிலேயே திறக்கப்பட்டு நடைமுறையில் இருக்கும். இவ் அறக் கட்டளையின் நிதி எந்த வங்கியில் அல்லது வங்கிகளில் வைப்பிலிடப் படவேண்டுமென்பதை அறங்காவல் குழுவே தீர்மானிக்கும்.

### 11. ஆரம்பநிதி

இவ் அறக்கட்டளையை நிர்வகிப்பதற்கான ஆரம்ப நிதியாக நான் பத்தாயிரம் ரூபாவை (ரூபாய் 10,000) இன்று அறங்காவல் குழுத் தலைவரிடம் ஒப்படைக்கின்றேன். இப்பணம் அறங்காவல் குழு தெரிவு செய்யும் வங்கியில் நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடப்படும்.

## 12. நிதி சேகரித்தல்

அறங்காவல் குழு தலைவரின் எழுத்துமூலம் அனுமதிபெற்று எவராவது அறக்கட்டளை நிர்வகிப்பதற்கு பணம் சேகரித்து வழங்கலாம். அப்படிச் சேகரிக்கப்படும் பணத்துக்கு உடனடியாகப் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுக் கணக்கில் சேர்க்கப்பட்டதற்கான அத்தாட்சிப் பத்திரம் உரியவர்க்குப் பொருளாளரால் அனுப்பப்படல் வேண்டும்.

## 13. பொருளேடு

இவ் அறக்கட்டளையின் அசைவுள்ள அசைவற்ற சொத்துக்கள் யாவற்றுக்கும் முறையான பொருட் பதிவேடு தயாரிக்கப்பட்டு வருடா வருடம் புதிப்பிக்கப் படவேண்டும்.

## 14. களஞ்சியப் பொறுப்பாளர்

அறங்காவல் குழுவினால் அறக்கட்டளையின் பொருட்களை கண்காணிப்பதற்கும், பேணிப்பாதுகாப்பதற்கும் ஒரு களஞ்சியப் பொறுப்பாளர் நியமிக்கப்படுவார். இவர் பொருளாளரின் நேரடி மேற்பார்வையில் பணிபுரிவார். இவரது வேதனம், ஒழுக்காற்று நடவடிக்கை ஆகியவற்றுக்கு அறங்காவல் குழு பொறுப்பாக இருக்கும்.

**துர்க்காதேவி தேவஸ்தான தலைவர்**

**வாழ்த்துரை**

கலைஞானி அறக்கட்டளை ஒன்றை நிறுவுகின்ற ஒரு வாய்ப்பை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். மெய்யாய் இருந்தது நாட் செல நாட் செல வெட்டை வெறும் பொய்யாய்ப் பழங்கதையாய் மெல்லப் போகும் நிலையிலிருந்து எமது பாரம்பரியம், கலை, பண்பாடுகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமை இன்றியமையாதது. கலைஞானி அரும் பொருட்காட்சி மனை ஒன்றும் நூல் நிலையம், சித்திரக் கூடம் ஆகியனவும் இந்த அறக்கட்டளையினால் அமைவதை நாம் பெரிதும் வரவேற்கிறோம். இந்த நன்முயற்சி கைகூட அனைவரும் ஒத்துழைப்பு நல்குவோமாக.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,**

தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## 15. கலைஞானி நினைவுச் சொற்பொழிவு

எனது சீவிய காலத்துக்குப் பின் வருடாந்தம் தை மாதத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கலைஞானி நினைவுச் சொற்பொழிவு



என்ற தலைப்பில் கலை, தமிழர் நாகரீகம், தமிழர் பாரம்பரியம், இந்து சமயம், சைவசித்தாந்தம் ஆகிய விடயங்களில் ஏதாவதொரு விடயத்தில் தகைமை பெற்ற ஒரு அறிஞரை அழைத்து சொற்பொழிவு நடத்தப்படவேண்டும். அவருக்குரிய சன்மானம், பிரயாணச் செலவு ஆகியன அறங்காவல் குழுவின் தீர்மானப்படி வழங்கப்படும்.

## 16. கணக்குப் பரிசோதகர்

இவ் அறக்கட்டளையின் வரவு செலவு கணக்குகள் யாவும் ஒரு தகுதி வாய்ந்த கணக்காளரால் பரிசோதிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் தை மாதத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

## 17. அறக்கட்டளையைக் குலைத்தல்

இவ் அறக்கட்டளையில் குறிப்பிட்ட எமது நோக்கங்களை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்படும் பட்சத்தில் :

அ) நல்லை திருஞானசம்பந்த ஆதீனத் தலைவரின் விருப்பத்திற் கமைய பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் இப் பொருட்கள் யாவும் பயன்படுத்தப்படவேண்டும்.

அல்லது

ஆ) குரும்பசிட்டிப் பொதுமக்களின் விருப்பத்தின்படி அவ்வூரில் உள்ள ஒரு பொதுப்பணி மன்றின் மூலம் இப்பொருட்கள் பயன்படுத்தப் படவேண்டும்.

அல்லது

இ) வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகிகள் இப் பொருட்களைப் பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் பொறுப்பேற்று ஆவன செய்யவேண்டும்.

இம்மூன்று வழிகளில் எது சிறந்தது என்பதை அறக்கட்டளை நிர்வாகங்களுக்குப் பொறுப்பான மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை அறங்காவல்குழு பெற்றபின்னரே அம்மன்றின் தீர்ப்பின்படி இப் பொருட்கள், நிதி, சொத்துக்கள் யாவும் கையளிக்கப்படவேண்டும்.

**'கலைஞானி'**

**அ. செல்வரத்தினம்**

11/7, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## கலைஞானியின் முயற்சி அளப்பரியது

அன்பர் "கலைஞானி" அவர்கள் சேகரித்த கருவூலங்களைப் பேணிப் பராமரிக்க ஒரு அறங்காவற்குழு அமைக்கப்பட்டதனைக் கேள்வியுற்று மகிழ்ச்சியுற்றேன்.

நமது நாட்டின் பாரம்பரியங்கள் காப்பாற்றப்படவேண்டியவை. இந்த வகையில் நம்முன்னோர் உருவாக்கிய நூல்கள், சிற்பங்கள், ஓவியங்கள் என்பன மிகவும் முக்கியமானவை. நமது பிரதேசத்தில் தரமான நுண்பொருட்காட்சிச்சாலை இல்லாதிருப்பது பெருங்குறையே யாகும். மேலை நாடுகளிலும் இந்தியாவிலும் ஒரு பெரியாரை நினைவுகூர அரசாங்கம் எவ்வளவோ செய்கின்றது. அப்பெரியார் வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்கி அவருடைய நினைவு என்றும் பசுமையாக இருக்க வழி அமைக்கின்றது. நமது நாட்டில் எத்தனை பெரியார்கள் வாழ்ந்து மறைந்து விட்டனர். ஒரு சில வரலாற்று ஆர்வலரைத் தவிர அவர்களைப் பற்றி யாருக்குமே தெரியாது. இத்தகைய சூழலில் கலைஞானியின் முயற்சி போற்றற்குரியது. நாட்டபிமானம் உள்ள ஒவ்வொருவனும் கலைஞானிக்கு வந்தனை செய்யவேண்டும்.

**எஸ். ஜெபநேசன்**<br>
அதிபர்<br>
யாழ்ப்பாணக் கல்லூரி<br>
வட்டுக்கோட்டை.

## ஆசியுரை

அருளோங்கும் மெய்யன்பர்களே உயர்திரு கலைஞானி அவர்களின் தொல்பொருள், மூலிகைவகைகள் ஆகியனவற்றின் சேகரிப்பைக் கண்டோம். இவற்றைச் சேகரிக்க எத்துணை பொறுமை, பெருமுயற்சி எடுக்கவேண்டும் என்பதனை எண்ணி வியந்தோம். வருங்கால சந்ததியினரின் ஆய்வுக்கும் அறிவு வளர்ச்சிக்குமான களஞ்சியம் எனலாம். கலைஞானி என்ற புகழாரத்தை ஐயமின்றி நிருபித்துவிட்டார். வளர்க அவர்தொண்டு. இறையருள் முன்நிற்க அவர் நலமே நீடுவாழவேண்டுமென ஆசீர்வதிக்கின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்**<br>
**நல்லை ஆதீனம்**



## அரும்பொருள் காக்கும் அரும்பணி வளர்க

கலைஞானியால் சேகரிக்கப்பட்ட அரும் பொருட்களைப் பொறுப்பேற்கும் அறங்காவல் குழுவினர் சமூகப்பொறுப்போடு செயற்படுகின்றனர். இப்பணியை விரித்துத் தொடர அத்தனை தமிழ் மக்களும் தம்மாலான ஆதரவை நல்கவேண்டுமென வேண்டி இப்பணி சிறப்படைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**இ. ஜெயராஜ்**<br>
அமைப்பாளர்,<br>
அகில இலங்கை<br>
கம்பன் கழகம்

## பாராட்டு

ஒரு பேரரசன், கலை ஆர்வம் படைத்தவனாக இருந்திருந்தால் செய்திருக்கக்கூடிய கலைப்பெரும் பணியை ஒரு தனி மனிதன் தமிழ் ஈழத்தில் செய்திருக்கிறார். இது இந்த மண் பெருமைப்படக் கூடியதாகும். அதே நேரத்தில் கலைஞானி அவர்களின் கலைத்தொண்டை இத்தனை காலமும் தெரிந்து போற்றாமையும் வருந்தத்துக்கு உரியதே.

இனி எதிர்காலத்தின் சிறப்பு அறங்காவலர் குழு கலைப் பொக்கிஷத்தைக் கையேற்கிறது என்று அறியும் போது ஒளிவிடுகிறது. காலத்தால் மறையாத பெருமையைக் காட்டி நிற்கும் பொக்கிஷம் எம் இனத்தின் சொத்து காத்தல் போற்றல் தமிழ் இனத்தின் கடன்.

முன்வந்த பெரியோர் வணக்கத்துக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள்.

**க. சிவராமலிங்கம்**

# கலைஞானியின் நற்பணிகளை நெறிப்படுத்த வேண்டும்

தமிழர் நாகரீகத்தின் தொன்மையினையும் செம்மையினையும் செம்மாந்த மேன்மையினையும் உலகறியாமற் போய்விட்டதேன்? எகிப்திய சுமேரிய பபிலோனிய நாகரிகங்களுக்கு நிகராக மேதகு நிலையிலேயே தொன்மைவாய்ந்த நாகரீகமாகத் திகழ்ந்த தமிழர் நாகரீகத்தை உலகங்கண்டு கொள்ளாததேன்? இந்துநதிப் பள்ளத் தாக்கினை அலங்கரித்த உன்னத நாகரீகம் திராவிடர்களையே சாருவதாக ஆராய்ச்சியாளர்கள் சான்றுகள் பகன்றபோது நாம் தூங்கிக் கொண்டிருந்துவிட்டோம். நம்முன்னோர்கள் எமக்காக விட்டுச் சென்ற சங்க நூல்களை வைத்துக் கொண்டு பழம்பெருமை பேசுகிறோம். தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம் சங்ககால இலக்கியங்களுக்கு முற்பட்டதெனின் அது பாணீயத் (வடமொழி இலக்கணம்) துக்கும் முற்பட்டதன்றோ?

2300 ஆண்டுகளுக்கு முன்னர் மொழிக்கு இலக்கண வரம்பினை வகுக்குமளவுக்கு நாகரீகமடைந்திருந்த தமிழினம் வீரத்தையும், காதலையும் பாடிக்கொண்டிருந்து விட்டதா? உலகறிஞர்கள் வியக்கின்ற தனித்தன்மையுள்ள சைவசித்தாந்தத்தைப் பெற்ற தமிழினம் இன்று நலிவுற்றதேன்? எமது சொந்த அரசாட்சிகளை நாம் இழந்து விட்டது மாத்திரமல்ல எமது முன்னோர் கலைஞானியின் கண்ணோக்கில் எமது நாகரீக சின்னங்களைப் பின்சந்ததியினர் பார்ப்பதற்கென்று சேகரிக்காது விட்டதும் ஒரு காரணமே. தங்களால் இயன்ற ஆதரவை கலைஞானிக்கு நல்கவேண்டுமென்றும், அறிஞர்கள் அவருக்கு அறிவுரைகள் வழங்கி அவருடைய நற்பணிகளை நெறிப் படுத்த வேண்டுமென்றும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அ. குமரகுரு**

காங்கேசன்துறை.

**நன்றி :- 'ஈழநாடு'**
14-01-1993
வியாழக்கிழமை



# அறிஞர்கள் எல்லாம் பெரியவர்கள் தான் ஆனாலும் என் தேடல் குறையவில்லை

**✣ கலைஞானி என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள். உங்களது இயற்பெயரென்ன? உங்களது பிறப்பு பற்றிக் கூறுங்கள்?**

உங்களுக்கு மட்டுமல்ல, ஊரிலும் கூட கலைஞானி என்றால் தான் தெரியும். எனது இயற்பெயரை அறிந்தவர் சிலரே. எனது பெயர் செல்வரத்தினம். தகப்பனார் பெயர் அரியகுட்டி. நான் 1933ம் ஆண்டு ஜுலை மாதம் 23ம் திகதி இறுவில் ஆஸ்பத்திரியில் பிறந்தேன்.

**✣ எங்கே கல்வி பயின்றீர்கள்?**

எனது ஆரம்பக் கல்வியை குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் பயின்றேன்.

**✣ உங்கள் குடும்ப விபரம் பற்றிக் கூறுங்கள்?**

சின்ன வயதிலேயே எனது தாயாரும் தந்தையாரும் இறந்து விட்டனர். பெரிய தாயார் தான் எங்களை வளர்த்தார். எனக்கு நான்கு சகோதரிகள். இப்போது அவர்களிலும் ஒருவர்தான் உள்ளார். நான் திருமணம் செய்யவில்லை.

**✣ அருங்கலைப் பொருட்களைச் சேகரிக்க வேண்டுமென்ற எண்ணம் எவ்வாறு உண்டானது?**

அது தற்செயலானது தான். அப்போது யூனியன் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருந்தேன். அன்றைக்குச் சித்திரபாடம். சித்திரம் சா. கந்தையா ஆசிரியரின் பாடம். அவர் தேங்காயொன்றைக் கீறுமாறு பணித்தார். நானோ தேங்காயைக் கீறி அதில் மாங்காய் காம்பைப்போல வரைந்துவிட்டேன். அதனால் ஆத்திரமுற்ற ஆசிரியர் துவரந் தடியால் அடித்தார். முதுகில் தழும்புகள் ஏற்பட்டிருந்தன. இவற்றைப் பார்த்தால் எனது பெரிய தாயார் ஆசிரியருடன் சண்டைக்குப் போய்விடுவார் என்று எண்ணிய நான் தழும்பை மறைத்து துணியொன்றால் போர்த்தியபடி கிணற்றருகே நிலத்தில் அமர்ந்திருந்து தடியால் தரையைக் கிண்டிக் கொண்டிருந்தேன்.

அப்போது ஒரு சங்கையும், மூன்று நாணயங்களையும் கண்டெடுத்தேன். அதுதான் அருங்கலைப் பொருட்கள் சேகரிக்க என்னைத் தூண்டிற்று.

❖ **அப்படியானால் இந்தப் பெரு முயற்சிக்கும் வளர்ச்சிக்கும் உங்கள் குருதான் காரணமாயிருந்திருக்கின்றார்?**

ஆமாம். இன்றுவரை நான் கந்தையா ஆசிரியரை நினைவில் கொள்கின்றேன். அவரது உருவப்படமொன்றையும் வரைந்து வைத்திருந்தேன். ஆனால் இடம்பெயர்வின் பின் அழிந்தவற்றுள் அதுவுமொன்றாகிவிட்டது.

❖ **இவ்வாறான சேகரித்தலுக்கு வேறு காரணிகளேதும் துணை நின்றனவா?**

நிச்சயமாக. நான் சேகரித்த சங்கு மற்றும் நாணயங்களையும், முத்திரைகளையும் அப்போது யூனியன் கல்லூரி அதிபராக இருந்த ஐ. பி. துரைரத்தினம் அவர்கள் கல்லூரியில் நடைபெற்ற காணிவேலில் இடம்பெற்ற பொருட்காட்சியில் காட்சிக்கு வைத்தார். அதில் சங்கு நாணய சேகரிப்புக்காக ஒன்றும், முத்திரைக்காக ஒன்றுமென இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் எனக்குப் பரிசாகக் கிடைத்தன. இதுவும் எனது ஆர்வத்தைத் தூண்டிய ஒரு நிகழ்வாகும். இவ்வாறே பல காரணிகள் இதற்கு உதவியுள்ளன.

❖ **எவ்வளவு பொருட்களளவில் நீங்கள் சேகரம் பண்ணியுள்ளீர்கள்?**

சேகரிக்கப்படும் பொருட்களின் தொகையல்ல. சேகரிக்கப்பட்டவற்றின் முக்கியத்துவமே பிரதானமானது. ஆயினும் ஒரு கருத்துக்காக லட்சக்கணக்கானது என வைத்துக் கொள்ளுங்கள். 1974ம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் அரும் பொருட் கண்காட்சியொன்றை நடாத்தினேன். அதற்கென ஏழு லொறிகளில் பொருட்கள் கொண்டு சென்றேன். தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வந்து திரும்பிய மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கொடுமுடி சண்முகம் அவர்கள் “இலங்கை முழுவதும் மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் கூட தனியாள் சேகரிப்பு உங்களிடம் தான் அதிகம்” என்று கடிதம் எழுதியிருந்தார்.

❖ **தனியே அரும் பொருட்களைச் சேகரிப்பதிலா ஈடுபட்டீர்கள்?**

அரும்பொருட் சேகரிப்புத்தான் பிரதானமானது. அதனோடு ஒட்டி புதைபொருள் ஆய்வுகளிலும் ஈடுபட்டுள்ளேன்.



❖ **எந்தெந்த இடங்களிலெல்லாம் ஆய்வுகள் செய்துள்ளீர்கள்?**

வல்லிபுரம், கந்தரோடை, தெல்தெனியா, புத்துவெட்டுவான், பளம்பாசி, சேமமடு, திருக்கேதீஸ்வரம், மாந்தை என 92 இடங்களில் புதை பொருள் ஆய்வுகளை நடாத்தினேன். இதன் மூலம் அரிய பல அரும் பொருட்களையும் எடுக்க முடிந்தது.

❖ **புதைபொருள் ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்டவை பற்றிக் கூறமுடியுமா?**

நிச்சயமாக. மாந்தையில் ஒரு மண்சுவடு கண்டெடுக்கப்பட்டது. அதிலுள்ள எழுத்துக்கள் 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்தன எனவும் அதுபோன்ற எழுத்துக்கள் தமிழகத்தின் கொற்கைத் துறைமுகப் பகுதியிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன எனவும் தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுப்பகுதியின் இயக்குனராயிருந்த இரா. நாகசாமி அவர்கள் குறிப்பிட்டார். இன்று அவரது கடிதம் மட்டுமே உள்ளது. அந்த மண் சுவடு இல்லை. திருக்கேதீஸ்வரத்தில் மண்ணால் செய்யப்பட்ட கலசம், கோணவட்டம் முதலியவற்றைக் கண்டெடுத்திருந்தேன். வேறு சிலவற்றை அதை வைத்திருந்தவர்களிடம் தேடிப் பெற்றும் வைத்திருந்தேன்.

❖ **என்னென்ன வகையான பொருட்கள் உங்கள் அரும்பொருட் சேகரிப்பில் இடம்பெற்றன?**

அரும்பொருட்களென இருப்பவை அனைத்தையும் நான் சேகரித்தேன். கடந்த காலத்தின் ஒவ்வொரு பொருளும் முக்கியத்துவமுடையதாக நான் உணர்ந்திருந்தேன். எனவே எல்லாவற்றையும் சேகரித்தேன். பொதுவாகக் கூறவேண்டுமானால் பண்டைய மன்னர்கள், மக்கள் பயன்படுத்திய பொருட்கள், வரலாற்றுச் சான்றுகளாக இருக்கக் கூடிய கல்லேடுகள், செப்பேடுகள், சிற்பங்கள், நாணயங்கள், பழைய ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், பெரியார்கள் பயன்படுத்திய பொருட்கள், அவர்களது படங்கள், அவர்கள் பற்றிய குறிப்புகள், ஓவியங்கள், பண்டைய கருவிகள், பல்வேறு வகையான நூல்கள் இன்னும் பலவற்றைக் கூறலாம்.

❖ **அரும்பொருட் சேகரிப்பை ஒரு பொழுதுபோக்காக அல்லாமல் அதை ஒரு தொழிலாக இன்னுஞ் சொல்லப்போனால் அதையே வாழ்க்கையாகக் கொண்டிருக்கின்றீர்களென நான் கருதுகின்றேன். தொழில் ரீதியாக வேறு எவ்வெவற்றில் உங்களுக்குப் பரிட்சையம் உண்டு?**

புகைப்படத் துறையில் முக்கியமான பரிட்சையமுண்டு. யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நீண்ட காலமாகவே கலைஞானி புகைப்படப்பிடிப்பு நிலையத்தை நடாத்தி வந்துள்ளேன். அதைவிட

ஓவியம் வரைவேன். அச்சுப் பொறிக்கட்டை (Block) தயாரிப்பேன். இறப்பர் முத்திரை (Rubber Stamp) செய்வேன். கைரேகை மற்றும் எண்சோதிடம் தெரியும். நாடக ஒப்பனையும் செய்வேன், சுதேச மருத்துவம் தொடர்பான அறிவும் ஓரளவு உண்டு. இவற்றில் சில என் தொழிலாகவும் வேறு சில ஊதியம் பெறா உதவியாகவும் அமைந்திருந்தன.

❖ **இவ்வாறு சேகரிக்கப்பட்ட அரும்பொருட்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் அழிவிற்குக்காவு கொடுத்துள்ள சோக வரலாறு உங்களுடையது. எப்போதெல்லாம் நீங்கள் இவற்றை இழந்துள்ளீர்கள்?**

1986ம் ஆண்டு நடைபெற்ற ஒப்பரேசன் லிபரேசன் இராணுவ நடவடிக்கையின் போது குரும்பசிட்டியில் பெருமளவு பொருட்கள் அழிந்தன. பின்னர் இந்திய இராணுவம் நடாத்திய தாக்குதலில் யாழ்ப்பாணம் கடையில் இருந்த பொருட்கள் அழிந்தும், காணாமலும் போயின. அதன் பின்னர் 1995 ஒக்ரோபர் இடம்பெயர்வுடன் மீதமுள்ள பொருட்களும் அழிந்து போயின. இன்று எமது அறங்காவற்பணிமனை இருந்த இடம் இராணுவ முகாமாக இருக்கின்றது. நான் அங்கே அழிவில் எஞ்சிய பொருட்களுடன் இங்கே முடங்கியிருக்க வேண்டியிருக்கிறது.

❖ **இப்போது சிறிதளவு பொருட்களை வைத்திருக்கிறீர்கள். இவை மொத்த சேகரிப்பில் எவ்வளவு வீதமாயிருக்கும்?**

என்ன வீதம். ஒரு பத்து வீதமான பொருட்கள் கூட இல்லை. ஒப்பறேசன் லிபறேசன், இந்திய இராணுவக் காலத்தின் பின்வரும் பொருட்களைச் சேகரித்தேன். உங்களிடம் கூட பிரிட்டிஷ் மஹாராணியின் மலேசிய விஜய நாணயம், ஒல்லாந்தர் கால நாணயம், முருகேசு பண்டிதர் பயன்படுத்திய சிமிழ் போன்றவற்றைப் பெற்றிருந்தேன்தானே. இடம்பெயர்வு அதையெல்லாம் அடியோடு அழித்துவிட்டது. அழிவுகளெல்லாம் பெரியது இது தான். ஆனாலும் எனது தேடல் குலையவில்லை. இன்னும் சேகரிக்க முயன்று கொண்டேயிருக்கின்றேன்.

❖ **வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாண இடம்பெயர்வின் சாதக பாதக அம்சங்கள் நிராகரிக்க முடியாதவை தான். இதன் பின்னர் மீளவந்தபோது எதையெல்லாம் இழந்திருந்தீர்கள்?**

வந்து பார்த்தபோது பணிமனைக்குள் செல்ல முடியவில்லை. பின்னர் பல நாட்கள் பலத்த முயற்சிகளின் பின்னர் தான் கைகூடியது. உள்ளே போனால் கண்டவையும் காணாதவையும் தலையைச் சுற்றச் செய்தன. 2500 ஆண்டு பழைமை வாய்ந்த நாணயம், பவுண், வெள்ளி நாணயங்கள் உட்பட சகல



நாணயங்களும் தொலைந்து விட்டன. ஆறுமுக நாவலரின் சொந்தக் கையெழுத்திலான புத்தகம். சுவாமி ஞானப்பிரகாசரால் தாவீது அடிகளுக்கு 1929ம் ஆண்டு எழுதிய கடிதம், வித்துவான் சி. கணேசையர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய தொட்டெழுதும் பேனா முதலியனவும் தவறிவிட்டன. மரச் சிற்பங்கள் கோடரியால் பிளக்கப்பட்டு அழிந்திருந்தன. 6 X 3 அடி அளவில் செய்து வைத்திருந்த தமிழ்ப் பெரியார்களின் பெரிய உருவப் படங்கள் குத்திக் கிழிக்கப்பட்டுச் சேதமடைந்திருந்தன. காணாமலும் போய் விட்டன. எதுவெல்லாம் இழக்கப்பட்டிருக்கின்றதென்று கேட்பதை விட எதெது இருக்கிறது என்று கேட்பது தான் பொருத்தமானது.

❖ **அழிந்தவற்றுள் பெரியாரின் உருவப்படங்கள் பற்றிக் கூறினீர்கள். அவற்றையேன் பெரியளவில் அமைத்திருந்தீர்கள்?**

பெரியாரது படங்கள் தெளிவற்றும் சிறிதாகவுமேயிருந்தன. அவற்றையெல்லாம் அதே தோற்றப் பொலிவோடு அழகாக வரைவித்து வைத்திருந்தேன். இவ்வாறு பெரியாரது படங்களைச் சேர்த்து ஒரு ஓவியக் கலைக் கூடம் (Art Gallery) ஒன்றை உருவாக்குவது எனது எண்ணமாயிருந்தது.

❖ **எவ்வளவு படங்களளவில் வரைந்து வைத்திருந்தீர்கள்? அவர்களில் சிலரைப்பற்றிக் கூறமுடியுமா?**

28 படங்கள் முழுமையாக வரையப்பட்டும், மேலும் 8 படங்கள் அரைவாசி வரையப்பட்டும் இருந்தன. ஆறுமுக நாவலர், சதுமலை அண்ணாமலைப் பரிகாரியார், இரசிகமணி கனக செந்திநாதன், ஈழகேசரி பொன்னையா, இணுவில் பெரிய சந்நியாசியார், கிளிநொச்சியில் மஹாதேவா ஆச்சிரமம் வைத்திருந்த வடிவேல் சுவாமிகள், வட்டுக்கோட்டை இராச வைத்தியர் குமாரசாமி போன்றோர் அவர்களில் சிலர்.

❖ **நீங்கள் அறங்காவற் சபையொன்றை ஏற்படுத்தியிருந்தீர்கள். அதன் நோக்கமென்ன?**

நான் நித்தியமானவனில்லை. எனக்குப்பின்னர் இந்த அரும் பொருட்களைப் பேணிப்பாதுகாத்தலவசியம். இதற்காகவே இவற்றைப் பராமரிப்பதற்கென அறக்கட்டளையினரை ஏற்படுத்தியிருந்தேன்.

❖ **அதிலே யார்யாரெல்லாம் இடம் பெற்றிருந்தார்கள்?**

மில்க்வைற் கனகராசாவைத் தலைவராகவும், வணக்கத்திற்குரிய ஜெபநேசன் அடிகளைச் செயலாளராகவும் கொண்டு 14 உறுப்பினர்கள் அதில் இடம் பெற்றிருந்தனர். காலவோட்டத்தில் சபையின் செயற்பாடுகள் நின்றுவிட்டன. அதுமீண்டும் இயங்கி இந்தப் பணியை முன்னெடுக்க வேண்டும் என்பதுதான் எனது விருப்பம்.

❖ **உங்களைத் தவிர அரும் பொருட்கள் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் யாரையாவது கூறமுடியுமா?**

அரும்பொருட் சேகரிப்பில் எவரையும் குறிப்பிட முடியாது. ஆனால் நாணயச் சேகரிப்பில் அளவெட்டி பொன்னம்பலம் திருநெல்வேலி சேயோன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

❖ **குரும்பசிட்டியைச் சேர்ந்த இரா. கனகரத்தினம்?**

ஆம். நூல்கள், பத்திரிகை நறுக்குகள் (Paper Cutting) சேகரித்து ஆவணப்படுத்தியமையால் அவர் முக்கியமானவர்.

❖ **இந்தப் பொருட்களை விற்கவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டதா? யாராவது விலைக்குக் கேட்டார்களா?**

1984ம் ஆண்டாயிருக்க வேண்டும். இங்கு வந்து எனது அரும் பொருட்களைப் பார்வையிட்ட அமெரிக்கத் தம்பதியினர் இவற்றுக்கு 50 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸ் தந்துவிட்டு வாங்க விரும்பினர். அதன்பின்னர் கனிசிலிருந்து வந்த ஒருவர் 60 ஆயிரத்து 500 ஸ்ரேலிங் பவுண்ஸ் விலைக்குக் கேட்டார். ஆனால் அவற்றை விற்க நான் விரும்பவில்லை. எனது விருப்பமெல்லாம் இதனை அடுத்த சந்ததிக்காக விட்டுச் செல்வதாகவேயிருந்தது.

❖ **இறுதியாக நீங்கள் விடுக்கும் செய்தியென்ன?**

இவ்வளவு கஷ்டப்பட்டு 50 வருட உழைப்பால் இந்த முயற்சியை ஏன் எடுத்தேன் என்று கவலைப்பட வைக்கிறது. எனக்குப் பின்னர் இந்த அரிய பொருட்களை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்ல நிறுவனங்கள் ஏதாவது முன்வரவேண்டும். மாநகர சபை போன்றவை பொறுப்பேற்கப் பின் நிற்கின்றன. இது அடுத்த சந்ததியின் கைகளில் சேர்வதுதான் எனது 50 வருட உழைப்பின் சரியான பயனைத் தரும்.

நன்றி :- **'காலைக்கதிர்'**
01-03-1998

✲



# அழியும் அருங்கலைப் பொருட்கள்

ஐம்பது வருடத்திற்கும் முற்பட்ட பல வரலாறு சார்ந்த பதிவுகளும், பொருள்களும், ஓவியங்களும், புகைப்படங்களும் 'மாமனிதர்' கலைஞானி அவர்களால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. காலத்தின் பாதிப்பினால் ஏற்பட்ட வடுக்களினால் தளர்ந்துபோன கலைஞானி அவர்கள், தனது வாழ்நாளில் சேகரித்து வைத்தவற்றை ஒரு தகுந்த, அதைப் பேணிப் பாதுகாக்க ஒரு கரத்தைத் தேடுகிறார். ஆனால் இதுவரை எவரும் முன்வரவில்லை என்பதை எண்ணி அவர் கவலையுற்றுள்ளார்.

அவரது சேகரிப்புகள் வளரும் சந்ததிக்கும் வருங்கால சந்ததிக்கும் பல சரித்திர உண்மைகளை விளம்பி நிற்கும் தகுதி படைத்தவை. அவற்றைப் பேணிப்பாதுகாக்கும் கடமை தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமை என்பதே எனது கணிப்பு. 'உதயன்' பத்திரிகையில் அவரது படைப்புக்களினதும், சேகரிப்புகளினதும் கண்காட்சி பற்றி செய்தி வெளியிடப்பட்டிருந்தது. செய்தியில் குறிப்பிடப்பட்ட இடத்திற்குச் சென்று பார்த்தபோதுதான் அந்தப் பெருங் கலைஞனின் அவலநிலை புரிந்தது.

**-த. துசிதா-**
**சாவகச்சேரி**

காட்சிப் பொருள்களில் பல கறையானுக்கு உணவாகியிருந்தன. குப்பை கூளம் போலக் காட்சியளித்தது அக்கூடம். ஒழுங்கு படுத்தப்படாத ஓவியங்களும், சேகரிப்புக்களும், உடைந்துபோன கண்ணாடிகளும் காணப்பட்டன. அவற்றின் மத்தியில் நடப்பதற்கே தயங்கும் கால்களுடன் ஒரு வயோதிபர். ஆம், அவர்தான் கலைஞானி அவர்கள். ஒரு கலைச் சிற்பிக்கு இந்நிலை, என்று நினைக்கும் போது மிகுந்த வேதனைக்குரிய விடயமாகியுள்ள து.

இப்படியான அருங்கலைப் பொருள்களுக்குக் கொடுக்கும் மதிப்போ அலாதியானது. ஆனால் நமது சமூகம், அவர்களைப்போல பழங்கால சேகரிப்பில் ஏனோ ஆர்வம் காட்ட முன்வருகிறார்கள் இல்லை. அந்த மனிதரின் சேகரிப்புகளில் பலவும் இலங்கையில் தமிழர்களின் இருப்பிற்கும் சான்று பகர்கின்றன. இவற்றை நாம் அழியவிட்டால் பல சரித்திர உண்மைகளும் மறைந்துவிட இடமுண்டு. ஆகவே, தமிழ்பேசும் உள்ளங்களே சற்றுச் சிந்தியுங்கள்.

நன்றி :- **'உதயன்'**
25-05-1998

✲

# மறத்தமிழரின் தொன்மை மறைந்துவிடக் கூடாது

கலைஞானி அ. செல்வரத்தினம் அறுபத்தைந்து வயது நிரம்பிய இம்மனிதர் யாழ்ப்பாணத்தில் தனியொருவராக நின்று அகழ்வுகள் சேகரித்தலை மேற்கொண்டு அரும்பொருள் தொல்பொருள் சேகரிப்புத் துறையில் தனித்துவமானவராகத் திகழ்கின்றார். கூடவே புகைப்பட, ஓவியக்கலை வல்லுநராகவும் இருக்கின்றார். ஒவ்வொரு துறைகளிலும் முற்று முழுதாகத் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றியோருக்கு 1991ம் ஆண்டு முத்தமிழ் விழாவில் வழங்கப்பட்ட "மாமனிதர்" விருதைப் பெற்றுக் கொண்ட ஒன்பது பேரில் இவரும் ஒருவர். யாழ்ப்பாணம் பரமேஸ்வரா வீதிச் சந்தியிலுள்ள அவரது தற்காலிக பணிமனையில் வைத்து அவர் "தினக்குரலுக்கு" வழங்கிய செவ்வியைத் தருகிறோம்.

***அரும்பொருள், தொல்பொருள் சேகரிப்பு, புகைப்படம், ஓவியக் கலை என்பவற்றில் நீண்ட காலமாக ஈடுபட்டு வருகிறீர்கள். தங்களுக்கு இத்துறையில் ஆர்வம் ஏற்படக் காரணமாக அமைந்த விடயங்களையும், தங்கள் பூர்வீகத்தையும் கூறமுடியுமா?**

***1933ம் ஆண்டு ஜுலை மாதம் 23ம் திகதி பிறந்த நான் ஆரம்பத்தில் குரும்பசிட்டி பரமானந்தர் வித்தியாலயத்திலும் தொடர்ந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கல்வி கற்றேன். எனக்குச் சிறுவயதில் சித்திரங்கீற வராது. யூனியன் கல்லூரியில் சித்திர பாடத்தைப் போதித்த கந்தையா ஆசிரியர் தேங்காய் கீறும்படி சொல்ல நான் வட்டமொன்றைக் கீறி அதில் மாங்காய் இருப்பது போன்ற ஒரு காம்பையும் கீறிவிட்டேன். கந்தையா ஆசிரியர் துவரங் கட்டையால் எனக்கு அடித்துவிட்டு தூரிகையை திரும்பத் தந்து உனக்கும் சித்திரத்திற்கும் வெகுதூரம் என்று கூறி வகுப்பிலிருந்து வெளியேற்றிவிட்டார். நான் வீட்டிற்குப் போய் கிணற்றிற்குப் பக்கத்திலிருந்து தோண்டியொன்றால் நிலத்தைக் கிண்டிக் கொண்டு கவலையுடன் இருந்தேன். அப்போது ஏதோ தட்டுப்பட எடுத்துப் பார்த்தேன். புழக்கத்திலில்லாத சில நாணயங்களவை. அவற்றையெடுத்து பத்திரமாக வைத்து விட்டு எப்படியாவது சித்திரம் வடிவாகக் கீறவேண்டுமென்ற உணர்வுடன் மீண்டும் மீண்டும் பல்வேறு காட்சிகளை கீறிக் கீறிப் பார்த்தேன்.



1947ம் ஆண்டு யூனியன் கல்லூரியில் காணிவேல் நடைபெறவிருந்தது. அக்காணிவேலின் போது கல்லூரி வாசலை அலங்கரிக்கப் பொருத்தமான முகப்புத் தோற்றம் வரையும்படி கூறினார்கள். நான் வரைந்த தாஜ்மஹால் போன்ற முகப்பைப் பார்த்த ஆசிரியர் மீண்டும் நான்கு அடி தாளில் அதனை வரையச் சொன்னார். பின் அதனையே காட்போட்டில் முகப்பாக உருவாக்கினார். காணிவேல் நடைபெற்ற பொருட்காட்சியில் நான் கண்டெடுத்த மூன்று காசுகளையும் ஒரு சங்கையும் பார்வைக்கு வைத்தோம். அதற்காக எனக்கு வெள்ளிப் பதக்கம் பரிசு தந்தார்கள். இவ்வாறுதான் எனது ஓவிய தொல்பொருட் துறை தொடர்பான வாழ்வு ஆரம்பமானது.

* **தொடர்ந்து நீங்கள் மேற்கொண்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் குறித்து சற்றுக் கூறுவீர்களா?**

***தற்செயலாகக் கண்டெடுத்த சில செல்லாக் காசுகள் பெற்ற முக்கியத்துவமும் அதற்காக எனக்குக் கிடைத்த வெள்ளிப் பதக்கமும் என்னை மேலும் அகழ்வுகளை மேற்கொள்ளத் தூண்டியது. தொடர்ந்து நான் இதுவரை 92 கிராமங்கள் மற்றும் காட்டுப் பிரதேசங்களில் அகழ்வுகளை மேற்கொண்டேன். இவ்வாறாக நான் சேமித்த பொருட்கள் பல தடவைகள் கண்காட்சியில் வைக்கப்பட்டன. ரிவிரச நடவடிக்கையின் முன் என்னிடம் 5 லொறிகளில் ஏற்றக் கூடியளவு பொருட்கள் இருந்தன. இன்று அவற்றில் 10%மே எஞ்சியுள்ளன. மிகுதி இராணுவ நடவடிக்கையின் போது அழிக்கப்பட்டு விட்டது. பல்வேறு சிலைகள், புதை பொருட்கள் அவற்றின் பெறுமானம் தெரியாதவர்களால் சிதைக்கப்பட்டுவிட்டன. இன்று எஞ்சியுள்ள பொருட்களையாவது பாதுகாத்தலே மிக சிரமமான காரியமாக உள்ளது.

## யாழ்ப்பாணம் தொல்பொருள் சேகரிப்பாளர் அ. செல்வரத்தினத்துடன் ஒரு நேர்முகம்

* **நீங்கள் நடாத்திய கண்காட்சிகள் பற்றி.**

*** 1974ம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டை முன்னிட்டு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் எனது கண்காட்சி இடம்பெற்றது. இக் கண்காட்சிக்கு பேராசிரியர் பத்மநாதன் உறுதுணை புரிந்தார். இக் கண்காட்சியில் எனது சேமிப்புக்களை பார்வையிட்டுச் சென்ற சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் கொடுமுடி சண்முகம்

பின்னாளில் எனக்கு எழுதிய கடிதமொன்றில் தனிப்பட்டவர்களின் சேமிப்புக்கள் என்ற வகையில் இந்தியாவில்கூட இவ்வாறான சேமிப்பை மேற்கொண்டவர்களைக் காணவில்லையெனக் குறிப்பிட்டார். 1975ம் ஆண்டு குரும்பசிட்டி பரமானந்த வித்தியாலய 75ம் ஆண்டு நிறைவு விழாவில் எனது புகைப்பட தொல்பொருள் ஓவியக் கண்காட்சி இடம்பெற்றது. 1990ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் 1992ம் ஆண்டு நாவலர் கலாசார மண்டபத்திலும் 1993ம் ஆண்டு மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும் 1994ம் ஆண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் எனது சேமிப்புக்கள், புதைபொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. இவ்வாண்டும் எனது தற்காலிகப் பணிமனையில் மே மாதம் 10ம் திகதி முதல் 20ம் திகதி வரை எஞ்சியுள்ள சேமிப்புக்களின் கண்காட்சியை நடாத்துகின்றேன். இடம்பெயர்ந்து சென்று மீண்டபின் பார்த்தபோது மரச்சிலைகள் பல கொத்திப் பிளக்கப்பட்டிருந்தன. கற்சிலைகள் பல உடைத்து எறியப் பட்டிருந்தன. அருமையாக நான் தேடிப்பெற்ற பல பொருட்கள் காணாமற் போயிருந்தன. எஞ்சியவையே கண் காட்சிக்கு வைக்கப்பட வுள்ளன.

**எமது வரலாற்று உண்மைகளைக் காட்ட நம்மவர் காட்டும் ஆர்வம் போதாது**

* **எமது நாட்டின் வரலாறு பக்கச் சார்பாகவுள்ளதாக பல தமிழறிஞர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். வரலாற்று ரீதியாக இந் நாட்டில் தமிழர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் எவற்றையேனும் நீங்கள் கண்டெடுத்தீர்களா?**

***உண்மையில் எமது வரலாறு திரிந்து சென்றதற்கு பிறர்மட்டும் காரணமல்ல. நீர் கூறும் தமிழறிஞர்கள் எனப்படுவோரும் கூட இதற்கு உடந்தையாக இருந்துள்ளனர். நானொரு கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்தவன் ; படித்துப் பட்டம் பெறாதவன். எனது ஆய்வுகள் சேமிப்புக்கள் இலங்கையில் அங்கீகாரம் பெறத் தவறுவது அதனால்தான். படித்துப் பட்டம் பெற்ற தமிழறிஞர்களோ தமது பதவிகளைத் தக்க வைப்பதிலேயே கருத்தாகவுள்ளனர். அவர்களுக்கு வரலாறு எப்படிப் போனாலும் கவலையில்லை. தமக்குப் பதவியுயர்வும் சலுகைகளும் கிடைத்தால் போதுமென்பதே உண்மை நிலையாகும். நான் யாரையும் குறை கூறவில்லை. இதுவே உண்மை நிலையாகவுள்ளது. ஆதித்திராவிடர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்ததற்கு அறிகுறியாக ஆதித்திராவிடர் இலட்சினையைக் கண்டெடுத்திருக்கிறேன். ஆனைக்கோட்டையிலும் சில புதை பொருட்கள் இதற்கு ஆதாரமாகக் கிடைத்துள்ளன. கந்தரோடையில் நான் கண்டெடுத்த மட்பாண்டமொன்றில் பொறிக்கப்பட்டிருந்த





இராணுவ நடவடிக்கையால் அழிந்துபோன சிற்பங்கள் கற்குவியல்களாக இன்று



மட்கவடுகள், செங்கட்டிகளைக் கண்ணாடிப் பெட்டிகளில் பாதுகாக்கும் "கண்ணாடி மனித"னுக்கு என்ன ஆழ்ந்த சிந்தனை:ா?

வடிவங்கள் தமிழ் பிராமி எழுத்துக்களே என பென்சில்வேனியன் சர்வகலாசாலையைச் சேர்ந்தோர் உறுதிப்படுத்தியுள்ளனர். மாதோட்டத்தில் கண்டெடுத்த புதைபொருள் ஒன்றிலிருந்த வடிவங்கள் பிராமி எழுத்துக்கள் அல்ல என்றும் அவை ஒரு மொழியே அல்ல என்றும் அதிற் காணப்பட்ட வடிவங்களைக் கொண்டு சொற்களையமைக்க முடியாது என்றும் கலாநிதி இந்திரபாலா மறுப்புத் தெரிவித்தார். ஆனால் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுப்பகுதி இயக்குநரான இரா. நாகசாமிக்கு இது குறித்துக் கடிதம் எழுதிய போது அவர் இவை எழுத்துக்களே என்றும் இவை போன்ற எழுத்து வடிவங்கள் கொற்கைத் துறைமுகத்திற்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்டதாகவும் வாசிக்க முடியாதளவிற்கு பழமைவாய்ந்தவை 3000 வருடங்கள் பழமை வாய்ந்த எழுத்துக்களே அவையென்றும் உறுதிப்படுத்தினார். எமது வரலாற்றுத் தொன்மையை நிரூபிப்பதற்கு நம்மவர் காட்டிய ஆர்வம் போதாது என்றே நான் கூறுவேன். சுயாதீனமாகச் செயற்பட போதிய வசதிகள் இல்லாமையும் இதற்கான காரணமாக இருக்கலாம்.

## சுவர்ணராஜா - நிலக்ஷன்

* **கந்தரோடைப் பகுதியில் காணப்பட்ட அரைக்கோள வடிவங்களைக் கொண்டு அவை பௌத்த ஆலயங்கள் என்றும் வடக்கிலும் சிங்கள பௌத்தர்களே தொன்று தொட்டு வாழ்ந்தனர் என்றும் கூறப்படுபவை குறித்து என்ன கருதுகிறீர்கள்?**

***சுத்தப்பொய். இவையெல்லாம் நன்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள். அங்கு காணப்பட்ட வட்ட வடிவமான அத்திவாரங்கள் மீது இவை பின்னாளில் கட்டப்பட்டுள்ளன. வட்டவடிவமான அமைப்புக்கள் உண்மையில் வீரசைவ மரபினரின் அடக்கங்கள் என்றே கருதப்படுகின்றன. அவ்விடத்தில் மேற்கொண்ட அகழ்வுகளில் எலும்புகளுடன் இலிங்க வடிவப் படிவங்கள் கண்டெடுக்கப்பட்டன. வீரசைவ மரபினர் கழுத்தில் இலிங்கவடிவப் படிவத்தை (காயத்து) கட்டியிருப்பார்கள். மேலும் நிலமட்டத்தின் கீழ் இக்கோளங்களின் அடியில் சுண்ணாம்பு, மண் என்பவற்றால் மெழுகி பின்னரே கட்டப் பட்டுள்ளன. இவை வீரசைவ மரபினரின் அடக்கங்களேயென்பது ஆதார பூர்வமானதாகும்.

* **வல்லிபுரத்தில் பொற்சாசனம் ஒன்று கண்டெடுக்கப்பட்டதாகவும் அதில் யாழ்ப்பாணத்தில் விகாரையொன்று கட்டப்பட்டதற்கு ஆதாரங்கள் இருந்ததாகவும் கூறப்படுவது பற்றி.**

***எங்கே அந்த பொற்சாசனம்? காட்டச் சொல்லும். இன்று சொல்கிறார்கள் அதைத் தொலைத்து விட்டதாக. அதிலிருந்த உள்ளடக்கத்தின் பிரதியென்று கூறி இன்னொரு போலி சாசனத்தை எழுதிவைத்திருக்கிறார்கள். நாக தீபத்தின் வட கரை அஸ்தானத்தில் ஈசுகிரி ராஜ என்ற பௌத்த தாதுகோபத்தைக் கட்டுவித்தான் என்றவாறாக சாசனத்தில் இருப்பதாகக் கூறி காங்கேசன் துறையில் ஈசுகிரி ராஜ விகாரை என்ற பெயரில் விகாரையொன்றைக் கட்டியிருக்கிறார்கள். மூலசாசனம் எங்கேயென்றால் அது தொலைந்து விட்டது என்கின்றார்கள். தட்டிக் கேட்பாரில்லை. அரசு, பௌத்த மதத்திற்கு முதன்மை ஸ்தானம் வழங்கும் நிலையில் ஒரு பௌத்த ஆலயம் தொடர்பான சாசனத்தை அதுவும் சர்ச்சைக்குரிய வட புலத்தில் அமைந்திருந்த பௌத்த ஆலயம் தொடர்பான சாசனத்தை தொலைத்து விட்டதாகக் கூறுவது விந்தையில்லையா? யாரின் காதில் பூ சுற்றுகிறார்கள்? எமது அறிஞர்களும் இவை தொடர்பாக கேள்வி தொடுக்கிறார்களா? மேலும் கந்தரோடையில் தலையற்ற சிலையொன்று அங்கியொன்றினால் போர்க்கப்பட்டது போல் ஈ. பீரிஸ் அவர்களால் கண்டெடுக்கப்பட்டது. அங்கியால் போர்க்கப்பட்ட சிலையாதலால் அது புத்தர் சிலையென்று கூறிவிட்டனர். அச்சிலை இளங்கோவடிகளின் சிலையாக இருப்பதற்கான சாத்தியமே அதிகம். காரணம் கண்ணகி சிலை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டபோது கந்தரோடையிலும் அச்சிலை வைத்து பூஜிக்கப்பட்டுள்ளது.

கண்ணகி சிலை பயணித்த இடங்கள் பாடல் ஒன்றில் கூறப் பட்டுள்ளது

"அங்஖ணன் அம்மைக் கடவை செட்டிப்புலம்
அச்சும் ஆயதொரு வற்றாப்பளை மீதுறைந்தாய்
பொங்குபுகழ் பொறிக்கடவை தங்குமே -- உன் புகழை
மங்காமல் ஓதவே தரணியுறை கோலங்கிரா
யுறுலுறை மாதே".

என்பதில் அங்கணன் அம்மைக் கடவை - கந்தரோடை யாகும். கண்ணகியுடன் தொடர்புடைய இளங்கோவின் சிலையே அச்சிலையாகும். தலையற்றபோதும் போர்க்கப்பட்ட அங்கியைக் கொண்டு அதனைப் புத்தர் சிலையென்று கூறுவது ஏற்கப்பட முடியாத தாகும். எமது வரலாற்றுச் சின்னங்கள் பலவும் ஒழிக்கப்பட்டுவிட்டன; ஒளிக்கப்பட்டுவிட்டன. வரலாறு திரிபுபடுத்தப்பட்டுவிட்டது. தொடரும் போர் எம்மை இன்னும் பின் தங்கிய நிலைக்கே இட்டுச் செல்லப் போகிறது. கோட்டைச் சுவர்க் கற்களில் திருக்கேதீஸ்வரர் ஆலயம் தொடர்பான சாசனங் களிருந்தன. அதாவது திருக்கேதீஸ்வர ஆலயத்தை உடைத்துப் பெற்ற கற்களும் கோட்டைச் சுவர்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. இவை பாதுகாக்கப்பட்ட போதும் இராணுவ நடவடிக்கைகளின் போது சிதைந்து விட்டன. இனியும் நாம் கண்



46700

திறக்காது கவனயீனமாக இருப்போமானால் எமது இருப்பே இங்கு பொய்யானதென்று நிரூபிக்கப் பட்டுவிடும்.

**நான் படித்துப் பட்டம் பெறாததால் என் ஆய்வுகள், சேமிப்புகள் இலங்கையில் அங்கீகரிக்கப்படாதவை ஆகிவிட்டன.**

*** தங்கள் எதிர்கால முயற்சிகளை எவ்வாறு கொண்டு செல்லப் போகிறீர்கள் என்பதைக் கூறுவீர்களா?**

***என்னைப் பொறுத்தவரை நான் சுயாதீனமாக எவருக்கும் சார்பின்றி இயங்கிக் கொண்டிருப்பவன். திருமணம் செய்யவில்லை. குடும்பமில்லை. தனி மனிதனாக எனது நிலபுலன்களைக் கூட விற்று இச் சேமிப்புக்களுக்காகவும் ஆய்வுகளுக்காகவும் பராமரிப்புக்காகவும் செலவிட்டுள்ளேன். என் உயிர் உள்ளவரை எனது சேமிப்புக்களை குழந்தைகளைப் போல் கட்டிக் காப்பேன். நிரந்தரமானதொரு இடமில்லாமல் ஒவ்வொரு தடவையும் இடம்மாறும் போதே பொருட்கள் பல சேதமடைந்து விடுகின்றன. எனினும் எதிர்கால சந்ததி தமது வரலாற்றை மறந்துவிடக் கூடாது. எனவே இப்பொருட்களை நிரந்தரமாக ஓரிடத்தில் வைத்துப்பேண எனக்கு உதவக் கூடிய தனி நபர்கள், தனவான்கள், அபிமானிகளை எதிர்பார்த்திருக்கிறேன். ஆலயங்களில் புதிய புதிய மண்டபங்கள் அமைக்கிறார்கள். கலைக்கூடங்கள் அமைக்கிறார்கள். இருக்கின்ற பெறற்கரிய இப்பொருட்களைப் பேண தரும ஸ்தாபனங்கள், உள்ளூராட்சி சபைகள் உதவ முன்வருவார்களா என்பதே எனது ஏக்கமாக உள்ளது. "எல்லாம் அவன் செயல்" என்று தொடர்ந்தும் எனது முயற்சிகளை மேற்கொள்வேன். இது தவிர எதிர்காலம் பற்றி எதனை நிச்சயமாகக் கூறமுடியும்?

**நன்றி :- ஞாயிறு தினக்குரல் 24 மே 1998**

தமிழ் கூறும் நல்லுலகில்

# வாழ்ந்து வரும் 'கலைஞானி'

## தமிழ் மக்களின் ஒரு சொத்து

யாழ்ப்பாணத்து தமிழர் நாகரீகத்தின் தொன்மையினையும் அதனோடு இணைந்த செம்மையினையும் உலகறியக் கூடிய விதத்தில் அரும் பொருட்களை சேகரித்தவர் யாழ்ப்பாணம் குரும்பசிட்டியைச் சேர்ந்த மாமனிதன் "கலைஞானி" என்ற பெயரால் அழைக்கப்படும் திரு. அரியகுட்டி செல்வரத்தினம் ஆவார்.

கலைஞானியின் அயராத முயற்சியினால் சேகரிக்கப்பட்ட பொருட்கள் பல சந்ததியினர் பார்வையிடக் கூடியளவிற்கு அவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

கடந்த கால அனர்த்தங்களினால் பெருமளவு தொல் பொருட்கள், நூல்கள், நாணயங்கள், பத்திரிகைகள், சிலைகள், வர்ணப்படங்கள் மற்றும் புகைப்படங்கள் அழிந்து போயினவாயினும் அவரது தொடர் முயற்சிகளையும் எதிர்கால சந்ததியினர் தொடர்ந்தும் இப்பொருட்களை பாதுகாத்து காக்கவேண்டும் என்பது அவரது வேண்டுகோள் ஆகும்.

**யாழ்ப்பாணக் கல்லூரியின் நூற்றி எழுபத்தைந் தாம் ஆண்டின் சிகரத்தின் விழாவில் கலைஞானி அ. செல்வரத்தினத்தின் அரும்காட்சிப் பொருட் கள் காட்சிக்காக வைக்கப்படவுள்ளது. இதனை யொட்டி இச் சிறப்புக் கட்டுரை வரையப்படுகிறது.**

இரண்டாயிரமாம் ஆண்டில் கலைஞானியின் பொருட்கள் பாதுகாக்கப்பட்டு உரிய இடம் ஒதுக்கப்படுவதற்கும் எமது சமுதாயம் முன் வரவேண்டும். இதன் மூலம் எமது தமிழ்ச் சமுதாயத்திற்கே ஓர் பெருமை ஆகும்.

கடந்த 55 ஆண்டுகளாக கலைஞானி அவர்களால் சேகரித்து வைக்கப்பட்ட கோடி ரூபா பெறுமதியான கலைப்



பொருட்கள், பழைய நூல்கள், ஏட்டுச் சுவடிகள், கற்சிலைகள், களிமண் வேலைப்பாடுகள் யாவற்றையும் பேணிப் பாதுகாப்பதற்கு "அறங்காவலர் சபை" ஒன்று பன்னிரெண்டு பேரை கொண்டு உருவாக்கப்பட்டபோதும் செயலிழந்து காணப்படுவதாகத் தெரியவருகிறது.

கலைஞர்களின் அரும் பொருட்களுக்கான மண்டபம், நூல் நிலையம், சித்திரக்கூடம் ஆகியவற்றை கொண்ட சுருக்கப் பெயராக "கலைஞானி அறக்கட்டளை" எனப் பெயர் சூட்டப்பட்டு செயல்வடிவம் பெற்றது ஒருகாலம்.

நவாலியூர்
**செல்வராஜா ரமேஸ்**
B. A. (Econ) Hons

தற்போது செயல்வடிவம் அற்று பொருட்கள் சிதைவடையக் கூடிய நிலையில் உள்ளது மிகவும் மனவருந்தத் தக்க விடயமாகும். ஏனெனில் வயதில் முதிர்ந்த கலைஞானி அவர்களால் மட்டும் இதனைப் பாதுகாக்க முடியாது.

இதனைப் பாதுகாப்பதற்கான நிதி பெருமளவில் தேவை. இந் நிதியினை பொது ஸ்தாபனங்கள், மனமுவந்து அளிக்கும் பெரியோர்களால்தான் இப்பொருட்களைத் தொடர்ந்தும் பாதுகாத்து யாழ்ப்பாணத்தின் பெருமையினை எடுத்துக் காட்டும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை என்பது தெளிவாகும்.

"கலைஞானி தனக்கென வாழா பிறருக்குரியவர் வரிசையில் முன் இடம்பெறுகின்றவர். இப்பெரியாரை வாழ்த்துவோம். வணங்குவோம்" என முன்னாள் நவாலியூர் கிராமசேவையாளர் மறைந்த கணபதிப்பிள்ளை செல்வராஜா அவர்கள் அடிக்கடி நினைவு படுத்துவார்.

"நமது நாட்டில் பாரம்பரியங்கள் காப்பாற்றப்பட வேண்டும். இந்த வகையில் முன்னோர் உருவாக்கிய பல அரிய சாதனங்களைச் சேகரித்தவர் கலைஞானி. அவரது முயற்சியை

காப்போம்" என பேராசிரியர் எஸ். ஜெபநேசன், துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, மில்க்வைற் அதிபர் க. கனகராசா (ச. நீ) ஆகியோர் வாழ்த்தி அவரது தொடர் சேவையை பாராட்டியும் உள்ளனர்.

தற்போது இவரது அரும் காட்சியகம் திருநெல்வேலியில் உள்ள அவரது காட்சிப்பணிமனையில் 10 நாட்கள் கண்காட்சி இடம் பெற்றன.

யாழ்ப்பாணக் கல்லூரியின் 175ஆம் ஆண்டின் சிகரத்தை நோக்கிய கண்காட்சி மூன்று நாட்கள் இடம்பெறப் போகின்றன. (ஜுன் 22, 23, 24) இதில் கலைஞானியின் அரும் பொருட்கள் வைப்பதற்கான ஏற்பாடுகள் கல்லூரி அதிபர் திரு. ஜீ. இராஜநாயகம், உப அதிபர் வண. பிதா ஏ. ஏ. போல். செல்வி. எஸ். பி. குலசிங்கம் ஆகியோரது முயற்சியினால் காண்பிக்கப்படவுள்ளன.

கலைஞானி அவர்களின் அரும் காட்சியகம் யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் வைப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய கால கட்டத்தில் இப்பொருட்களை - பேணிப் பாதுகாத்து - தற்போதும் சேகரித்து வரும் "கலைஞானி" என அன்பர்களால் அழைக்கப்படும் திரு. அ. செல்வரத்தினத்தின் பணி மென்மேலும் ஓங்கி வளர யாழ். கல்லூரி "இளஞாயிறு" ஆசிரியர் சங்கம் வாழ்த்துகின்றது.

நன்றி :- THE MORNING STAR
05th June 1998



# தனிமனித சேகரிப்பில் கிடைத்த தமிழர் வரலாற்றுப் பொக்கிஷங்கள்..

**கேள்வி :- வருமானம் தரக்கூடிய எத்தனையோ துறைகள் இருந்தும் நீங்கள் ஏன் இத்துறையில் நுழைந்தீர்கள்?**

**பதில் :-** நான் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் ஒருநாள் சித்திர ஆசிரியர் தேங்காய் ஒன்றை வரையுமாறு உத்தரவிட்டார். நான் வரைந்த சித்திரம் மாங்காய் மாதிரி வந்துவிட்டது. அதனால் துவரந் தடியால் முதுகில் தழும்புகள் ஏற்படும் வரை அடித்தார். நான் சிறிய வயதிலே தாய், தந்தையரை இழந்து விட்டதால் சித்தப்பா

கலைஞானி செல்வரத்தினத்தை அறியாதவர்கள் எவருமே ஈழத்தில் இருக்க முடியாது. தமிழர் வரலாற்றுடன் தொடர்புடைய அரிய பல தொல்பொருள்களைச் சேகரித்துப் பேணுவதில் தன் வாழ்நாளின் பெரும்பகுதியை அர்ப்பணித்தவர் அவர். தான் அரும்பாடுபட்டுச் சேகரித்த அரிய கலைப் பொக்கிசங்கள் இன்று தன் கண்முன்னாலேயே அழிந்து கொண்டிருப்பதைக் கண்டு வெதும்பி நிற்கிறார் இந்த மாமனிதர்.

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திக்கு அருகே உள்ள கைவிடப்பட்ட ஒரு வீட்டில் தன் பிள்ளைகள் போலப் பேணிச் சீராட்டும் அரும் பொருள்களுடன் வாழ்வின் கடைசிக் காலத்தைக் கழித்து வருகிறார் அவர்.

இலங்கையில் வேறு எந்த நூதனசாலையிலும் காண முடியாத அரிய பல பொருள்கள் அவர் வசம் உள்ளன. உலக தொல்பொருளியலாளர்களே வியந்து பாராட்டிய பெருமைக் குரியவர் கலைஞானி.

இன்று தள்ளாத வயதில் அவற்றைப் பேணிப்பாது காக்க முடியாமல் தவிக்கிறார். தொல்பொருள்சாலை எதுவும் இல்லாத யாழ்ப்பாணத்தின் தேசிய நூதனசாலையாக கலைஞானியின் பொக்கிசங்களை ஏன் பிரகடனப் படுத்த முடியாது?

இன்று உரிய வசதி இன்றி அழிந்து கொண்டிருப்பவை அவரது அரும் பொருள்கள் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தவர் வரலாறும்தான்.

தனிமனித நிறுவனமாக நின்று கலைஞானி சேகரித்த அரும் பொருள்களைப் பொறுப்பேற்று தொடர்ந்து பேணிப்பாதுகாக்க யாழ்ப்பாண சமூகம் முன்வருமா?

'சஞ்சீவிக்கு' அவர் அளித்த பேட்டி இது.

குடும்பத்தோடு அப்போது வாழ்ந்துவந்தேன். முதுகுத்தழும்புகள் சித்தப்பாவுக்குத் தெரிந்தால் பேசுவார் என்பதால் பாடசாலையை விட்டு வீடு சென்றதும் அவரின் கண்ணில் படாமல் வளவில் பூமரம் நடுவதற்கு நிலத்தைத் தோண்டுவது போன்று பாசாங்கு செய்துகொண்டிருந்தேன். அப்பொழுது சங்கு ஒன்றும், மூன்று நாணயங்களும் மண்ணுக்குள் இருந்து வெளியே வந்தன. இதனை எனது பாடசாலையில் நடைபெற்ற களியாட்ட விழா நிகழ்ச்சியின்போது கண்காட்சிக்கு வைத்தேன். இதற்காக எனக்கு அப்போது இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் பரிசாக அளிக்கப் பட்டன. இத்தகைய பொருளைச் சேகரிக்க வேண்டுமென்ற ஆர்வம் அன்றுதான் என்னுள் ஆரம்பித்த தொல்பொருள் சேகரிப்பு இன்று வரை தொடர்கிறது.

## முற்றாக அழியும் ஆபத்து!

**▶ கேள்வி :- "கலைஞானி" என்பது தங்களுக்கு எவராவது வழங்கிய பட்டப் பெயரா?**

**▶ பதில் :-** பட்டம் என்று சொல்ல முடியாது. எனது சித்தப்பாவின் மகன் ஒருவர் பட்டப்படிப்புப் படித்தவர். தொல்பொருள் சேகரிப்பு, ஓவிய, புகைப்படத்துறைகளில் எனக்குள்ள ஆர்வம் குறித்து மகிழ்வு கொண்டவர். அவர் கலைஞானி என்ற பெயரிலே ஒரு பத்திரிகையை என்னுடன் சேர்ந்து ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டார். திட்டமிட்ட சில நாள்களில் அவர் இவ்வுலகை விட்டு மறைந்து விட்டார். இதனால் தனித்து விடப்பட்ட நான் எனது பெயரையும் கலைஞானி என வெளிப்படுத்தத் தொடங்கினேன்.

**▶ கேள்வி :- கலைஞானி ஸ்ருடியோ ஆரம்பித்தது பற்றி .......**

**▶ பதில் :-** இதன் பின்னர்தான் கலைஞானி ஸ்ருடியோ ஆரம்பித்தேன். அது சிறப்பாக இயங்கி வந்தது. ஸ்ருடியோவில் கிடைக்கும் வருமானம் முழுவதையும் தொல்பொருள்களைச் சேகரித்து வைப்பதிலே செலவு செய்தேன்.

1990 ஆம் ஆண்டு இந்த ஸ்ருடியோவிலிருந்த உபகரணங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இதனால் 4 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது. அத்துடன் யாழ். நகரப் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சினால் எனது காதுகள் இரண்டும் பாதிக்கப்பட்டுள்ளன. அன்று தொடக்கம் காது கேட்பது கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கிறது.

**▶ கேள்வி :- அரும்பொருள் பலவற்றை சேகரித்து வைத் திருக்கிறீர்கள். இப்பொருட்களைச் சேகரிப்பதற்கு எத்தனை இடங்களுக்கு சென்றிருக்கிறீர்கள் என்று கூறமுடியுமா?**



**▶ பதில் :-** ஆம். இலங்கையில் மட்டும் 92 இடங்களுக்குச் சென்று இவற்றைச் சேகரித்துள்ளேன். வடக்கு, கிழக்கு, மலைநாடு உட்பட தென்பகுதியில் பல இடங்களுக்கும் சென்று வந்துள்ளேன். அத்துடன் இந்தியாவுக்கு ஏழு தடவைகள் சென்று வந்துள்ளேன்.

**▶ கேள்வி :- நீங்கள் சேகரித்து வைத்துள்ள பொருட்களை எந்தெந்த வகைகளுக்குள் அடக்கலாம்?**

**▶ பதில் :-** கலைப்பொருள்கள், பழைய நூல்கள், ஏட்டுச் சுவடிகள், கற்சிலைகள், களிமண் வேலைப்பாடுகள், செங்கற் படிவங்கள், நாணயங்கள், மரவேலைப்பாடுகள் என வகைப்படுத்திக் கொண்டே போகலாம்.

## - பேட்டி : கேசரி-

**▶ கேள்வி :- நீங்கள் சேகரித்த அரும் கலைப்பொருள்களைப் பாதுகாக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட "கலைஞானி அறக்கட்டளையின்" செயற்பாடுகள் பற்றி தெரிவிக்க முடியுமா?**

**▶ பதில் :-** "கலைஞானி" அரும்பொருள் காட்சி மண்டபம், நூல்நிலையம், சித்திரக்கூடம் ஆகியவற்றைப் பேணிக் காக்கும் அறக்கட்டளை 1993 ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி என்னால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ். மாவட்டத்தில் முதன்மைமிக்க சேவையாளர்களில் 14 பேரைத் தெரிவு செய்து அதற்கான அறங்காவலர் குழு அமைக்கப்பட்டது. எனது பதினைந்தாவது பிராயத்திலிருந்தே தமிழர் பாரம்பரியத்தையும் நாகரிகத்தையும் வெளிப்படுத்தும் தொல்பொருள்கள், புராதன சின்னங்கள், பழைய நூல்கள், ஏட்டுச்சுவடிகள் ஆகியவற்றைச் சேகரிக்கும் பணியிலும் என்னை ஈடுபடுத்தி பிரமச்சாரியாக வாழ்ந்துவிட்ட நான் சேகரித்த இப்பொருள்கள் தமிழ் மக்களுக்கு சந்ததி சந்ததியாகப் பயனளிக்க வேண்டும் என்று விரும்பியே கலைஞானி அறக்கட்டளை அறங்காவலர் குழு தெரிவு செய்யப்பட்டது. ஆனால் இன்று இக்குழு செயற்படுவதாக இல்லை.

**▶ கேள்வி :- தாங்களினால் சேகரிக்கப்பட்ட அரும்பொருள் களின் கண்காட்சிகள் இதுவரையும் எத்தனை நடத்தப் பட்டுள்ளன? அவை எங்கெங்கு நடத்தப்பட்டன? அதனால் கிடைத்த பயன் என்ன?**

**▶ பதில் :-** பல கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டை ஒட்டி சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும், 1975ஆம் ஆண்டு குரும்பசிட்டி பரமானந்தா வித்தியாலயத்திலும், 1990ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்

கழகத்திலும், 1992ஆம் ஆண்டு நாவலர் கலாசார மண்டபத்திலும் 1993 ஆம் ஆண்டு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும் 1994 ஆம் ஆண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் இந்த ஆண்டு எனது தற்காலிக பணிமனையிலும் நடைபெற்றன.

1974ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டில் இக்கண்காட்சி நடத்தப்பட்டபோது அதனைப் பார்வையிட்ட தமிழக அறிஞர் பேராசிரியர் கொடுமுடி சண்முகம் மற்றும் கொங்கு என்ற பத்திரிகையின் ஆசிரியர் புலவர் இராசு ஆகியோர் தங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

கண்காட்சியில் வைக்கப்பட்ட கல்வெட்டு, பானை ஓட்டு எழுத்துக்களை வாசிப்பதில் கம்பன் அடிப்பொடி கணேசன், தமிழக ஆய்வுப் பகுதி முன்னாள் இயக்குநர் இரா. நாகசாமி ஆகியோர் உதவியுள்ளனர்.

**► கேள்வி :- கிராமங்கள், காடு மண்டிய இடங்கள், மலையகம் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பல அரிய பொருள் களைத் தேடி எடுத்து வந்திருக்கிறீர்கள். இந்தப் பொருள்கள் எல்லாம் இன்று வரையும் எவ்வித சேதமும் இல்லாமல் உங்களிடம் இருக்கின்றனவா?**

► பதில் :- யுத்தம் இடப் பெயர்வு போன்ற காரணங்களினால் 90 சத வீதமான எனது சேகரிப்புகளை இழந்து விட்டேன். மேற்கூறிய காரணங்களினால் தமிழர்கள் ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்டுள் ளார்கள். அவர்கள் வீடுகள் மற்றும் தமது சொத்துக்களை இழந்துள்ளார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரை நான் சேகரித்த அரும் கலைப்பொருள்களை இழந்து விட்டேன். எனக்கு வீடு இல்லை, சொத்து இல்லை, எனக்கு சேமிப்பும் சொத்துக்களும் இந்த அருங்கலைப் பொருள்கள்தான்.

1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டின் போது ஏழு லொறிகளில் ஏற்றப்பட்ட எனது அருங்கலைப் பொருள்களில் பல இன்று அழிந்தும், தொலைந்தும் விட்டன. என்ன செய்வது? இருக்கிற பொருள்களையாவது பாதுகாக்கலாம் என்றால் இதற்கென ஒரு நிரந்தரக் கட்டடம் இல்லை. எதற்கெல்லாமோ கட்டடங்கள் கட்டுகிறார்கள். ஆனால் எனது இந்தப் பொருள்களைப் பாதுகாக்கக் கூடிய வகையில் கட்டட வசதி இல்லாமல் உள்ளது.

நான் சேகரித்து வைத்த பொருள்களில் பல கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட மிருகத்தலை, தங்கம் கலந்து செய்த செங்கல், மற்றும் கல்வெட்டுகள், மர வேலைப் பாடுகள், ஏட்டுச் சுவடிகள், அரிய புகைப்படங்கள், செப்புக் காசுகள் போன்றவற்றையும், பத்திரிகைகளின் தொகுப்புகளையும் சங்குவகைகள், சஞ்சிகைகள், நூல்கள், ஓவியங்கள், பித்தளைப் பொருள்கள், செப்புச் சின்னங்கள், களிமண் வேலைப்பாடுகள்



போன்ற பல்வேறு பொருள்களையும் இழந்து விட்டேன். தற்பொழுது யாழ். மாநகர சபை பழைய கட்டடம், நயினாதீவு நாகவிகாரை, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், முனீஸ்வரம் ஆலயம், கண்டுக்குளி பெரிய கோயில், பொதுநூலகம் போன்றவை உட்பட பலவற்றின் பழைய புகைப் படங்கள் இருக்கின்றன. அத்துடன் சத்தியவாணி, இந்து சாதனம், சுதேசமித்திரன், அமுதசுரபி, ஆனந்த போதினி, சித்தாந்தம், கலைகறை உட்பட பல சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் இருக்கின்றன. (ஒவ்வொன்றையும் எடுத்துக் காட்டுகின்றார்)

**► கேள்வி :- உங்களுடைய சேகரிப்புகள் பற்றி எவரும் ஆர்வங் காட்டுவதாக இல்லை என்று கவலை தெரிவித்தீர்கள். பல வெளிநாட்டுக்காரர்கள் இந்தச் சேகரிப்புகளை நேரில் வந்து பாராட்டிச் சென்றுள்ளதாக அறிந்தோம். இது பற்றிக் கூறமுடியுமா?**

► பதில் :- ஆம். என்னிடம் பல வெளிநாட்டுக்காரர் வந்து சென்றுள்ளார்கள். அவர்களுக்கு இந்தப் பொருள்களின் பெறுமதியும் முக்கியத்துவமும் விளங்குகின்றன. அவர்களில் சிலர் இந்தப் பொருள்களை விலை பேசினார்கள்.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் இந்த அருங்கலைப் பொருள்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டதுடன் 60 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் தருவதாகவும் இப்பொருள்களை தனக்கு வழங்குமாறும் கேட்டிருந்தார். அமெரிக்க தம்பதிகள் ஒரு தடவை வந்து பார்வையிட்டு 50 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் தருவதாகச் சொன்னார்கள். இவ்வாறு பலர் பல தடவைகள் இதற்கு விலை பேசினார்கள். ஆனால் நான் அவற்றை எவருக்கும் விற்க முடியாது என்று மறுத்துவிட்டேன்.

ஐ. நா. அபிவிருத்தித்திட்ட அதிகாரி ஒருவர் வந்து இப்பொருள்களைப் பார்த்து என்னைப் பாராட்டியதுடன் 10 ஆயிரம் ரூபா அன்பளிப்பாகவும் வழங்கிச் சென்றார்.

**► கேள்வி :- வயோதிபத்தை அடைந்துள்ளீர்கள். அத்துடன் நோய் வாய்ப்பட்டுமிருக்கிறீர்கள். இந்த நிலையில் இந்தப் பொருள்களைத் தொடர்ந்து எப்படிப் பாதுகாக்கப் போகிறீர்கள்? இப்பொழுது நீங்கள் இப்பொருள்களை வைத்திருக்கின்ற இடம் நிரந்தரமானதல்ல. எனவே மேற்கொண்டு இவற்றைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?**

► பதில் :- இது குறித்துப் பலருடன் தொடர்பு கொண்டேன். எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இந்துக் கலாச்சார அமைச்சுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் எமக்கு எதுவும் செய்ய முடியாது என்று அறிவித்துள்ளார்கள்.

நான் இறந்து போனாலும் இந்தப் பொருள்கள் அழிந்து விடக் கூடாது. தொடர்ந்து இவற்றைப் பாதுகாக்க வேண்டும். ஏனென்றால் ரசிகமணி கனக செந்திநாதன் இறந்த பின்னர் அவரிடமிருந்த பெறுமதிமிக்க நூல்கள் சிதைந்தும் அழிந்தும் போய் விட்டன. இதே போன்று கலைப்புலவர் நவரத்தினம் எழுதிய நூல்கள் சேகரிக்கப்பட்ட நூல்கள் அனைத்தும் அவரின் மரணத்தின் பின்னர் அழிந்து விட்டன.

க. சி. குலரத்தினம், தாவீது அடிகள் போன்றவர்கள் இறந்த பின்னர் அவர்கள் எழுதிய ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் பல நூல்கள் எல்லாம் அழிந்து விட்டன. சேர். பொன். இராமநாதன் சேகரித்து வைத்திருந்த சமய நூல்கள் பரமேஸ்வராக் கல்லூரி நூலகத்தில் வைக்கப்பட்டிருந்தன. இக்கல்லூரி பல்கலைக்கழகமாக உயர்த்தப்பட்ட பின் இந்த நூல்களும் அழிந்து விட்டன. கீரிமலை நகுலேஸ்வரக் குருக்களின் தந்தையார் எழுதிய சமய நூல்கள், மதம் சம்பந்தமான மந்திரங்கள் யாவும் அழிந்து விட்டன. மாவிட்டபுரம் இரத்தினக் குருக்கள் எழுதிய சுலோகங்களும் அது சம்பந்தமான குறிப்புகளும் சிதைந்துபோய் விட்டன. இவ்வாறு ஒவ்வொருவரும் மரணமடையும் போதும் அவர்கள் சேகரித்து வைத்திருந்த பெறுமதி மிக்க நூல்களும் அழிந்துள்ளன. இதே போன்று என்னால் சேகரிக்கப்பட்ட இந்த அரும் பொருள்கள் எனக்குப் பின்னர் அழியக் கூடாது என்பதில் நான் மிக அக்கறையாக இருக்கிறேன். இந்தப் பொருள்களை பாதுகாத்து தமிழர் தொன்மைச் சிறப்புக்களை வருங்காலச் சந்ததிக்குத் தெரியப்படுத்துவதற்கு இங்கிருக்கக் கூடிய பொது அமைப்புகள் உதவ வேண்டும். என்று எதிர் பார்க்கின்றேன்.

**➢ கேள்வி :- இறுதியாக சஞ்சீவி வாரமலர் ஊடாக தமிழ் சமூகத்திற்குத் தாங்கள் விடுக்கும் வேண்டுகோள் என்ன?**

➢ பதில் :- என்னால் சேகரிக்கப்பட்ட இந்த அரும்பெரும் கலைப் பொருள்கள் யாவும் ஒரு நிரந்தரமான மண்டபத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட வேண்டும். எனது சீவிய காலத்திற்குப் பின்னரும் கலைப் பொருள்கள், தொல்பொருள்கள், பழைய நூல்கள், ஏட்டுச் சுவடிகள் ஆகியன மண்டபத்தில் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட வேண்டும். இந்தப் பொருள்கள் தமிழ் மக்களுக்கு சந்ததி சந்ததியாக பயனளிக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

நன்றி :- **'உதயன் - சஞ்சீவி'**
19-09-1998



## தமிழ் வரலாற்றாசிரியர்கள் :
## சோரம் போனவர்களின் நீளும் பட்டியல் ?
## 'விஜயன்' எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதி

**குடாநாட்டுத் தொல்லியற் சான்றுகள் பலவற்றை சேகரித்து வைத்துள்ள பலரில் கலைஞானி முதலிடம் பெறுகிறார். மட்பாண்டங்கள், நாணயங்கள், செங்கற்கள், ஓடுகள், இதர பொருட்கள் என அவரிடம் இருந்தவற்றை எல்லாம் வைத்து 1991 ஆம் ஆண்டு யாழ்: பல்கலைக் கழகத்தில் ஒரு கண்காட்சியையும் நடாத்தினார். இவரது சேகரிப்புக்களை அறிவியற் பார்வையற்றது என தமிழ்ப் 'புத்திஜீவிகள்' நிராகரித்து விட்டனர். அல்லது கண்டுகொள்ளாது விட்டுவிட்டனர் எனலாம்.**

நன்றி :- *'சரிநிகர்'*
பெப். 11 - பெப். 24. 1999

# கந்தரோடை

## கல்லும் கதையும்

-கலைஞானி அ. செல்வரத்தினம்

**க**ட்டுரையின் உள்ளே புகுமுன் இக்கட்டுரை ஏன் எழுதப் பட்டுள்ளதென்ற காரணத்தை நீங்கள் அறிய விரும்புவீர்கள் அல்லவா! ஆகவே அதனைத் தொட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஈழத்தமிழகத்தின் வடபாகத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மத்தியில் யாழ் நகரிலிருந்து சுமார் 6 மைல் தூரத்தில் உள்ள கந்தரோடை என்னும் பெயருடைய கிராமம் மாற்றான் மொழி மூலம் மாசுபடுத்தப்பட்டும் மதங்கொண்டு பிறமதத்தைப் புகுத்தியும், வரலாற்றுக்கோ அன்றி வரன் முறைக்கோ ஒவ்வாததும், தொல்பொருளியலுக்கு அப்பாற்பட்டதுமான செயல் கண்டு உள்ளம் வேதனை கொண்டு குமுறியது. அந்தக் குமுறலின் பிரதிபலிப்பாக இக்கட்டுரை ஆக்கம் பெறுகின்றது.

நாம் எதை நிறுவ முயல்கின்றோமோ அதற்கு, அங்குவாழும் மக்கள் கூட்டம் அவ்வூர் இடப்பெயர்க் காரணம், சுற்றாடற் கிராமங்கள், வாழ்க்கைமுறை, வழிபாட்டு முறை, கலாச்சாரம், சரித்திர வரலாறு, சான்று நூல்கள், ஏட்டுப் பாடல்கள், கல்வெட்டுக்கள், தொல்பொருட் சின்னங்கள் என்பவற்றைக் கொண்டே துணிய வேண்டும்.

கந்தரோடை (கந்தர் + ஓடை ⟶ கந்தரோடை) இது ஒரு தமிழ்ச்சொல் . இதில் வேறு எந்த மொழியோ, மதமோ இடம்பெற வில்லை. கலக்கப் பெறவுமில்லை என்பதை எவரும் மறுக்கமுடியாது. இது 'கந்தன்' வழிபாட்டோடு தொடர்புகொண்ட ஓடைக்காணி என்றோ அல்லது கந்தர் என்பவருக்குச் சொந்தமான ஓடைக்காணி என்றோ அல்லது கந்தர் என்பவரது ஆணைக்குட்பட்ட ஓடைக்காணி என்றோ பொருள்பெறும். இதையெண்ணாது 'கருதுகொட' என்ற சொல்லின் பொருள் எட்டி மரங்கள் நிறைந்த இடம் எனப்படும். ஆனால் கந்தரோடைக் கிராமத்தில் எட்டி மரங்கள் இருப்பதாகவோ அல்லது இருந்ததாகவோ எதுவித சான்றுமில்லை.

அயற்கிராமங்களை எடுத்துக் கொண்டால், கந்தரோடையின் வடக்குப் பாகமாக உள்ள அங்கணம்மைக் கடவை இடை குறைந்து அங்கணாக் கடவை என அழைக்கப்படுகின்றது. இங்குள்ள கண்ணகையம்மையின் ஆலயம் சுமார் கி. மு. இரண்டாயிரம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இது காலத்திற்குக் காலம் அந்நியர் படையெடுப்பால் அழிக்கப்பட்டபோதும், இன்றும் இவ்விடத்தில் கண்ணகி ஆலயத்தைக் காணக்கூடியதாக இருக்கின்றது.



இன்று நாம் காணக்கூடியதாக உள்ள பெருந்தொகையான ஏட்டுப்பாடல்களில் (ஆலய வரிசையில்) முதலிடம் பெற்று நிற்பது இந்த அங்கணம்மைக் கடவையே.

நூற்றாண்டிலே சேரநாட்டில் காரூரில் நடைபெற்ற கண்ணகிப் பெருவிழாவில் கலந்து கொண்ட மணிமுடி மன்னருள் இலங்கை வேந்தன் கஜபாகுவும் ஒருவன் எனச் சிலப்பதிகாரம் கூறும். அக்கஜபாகு மன்னன் பன்முறை இரந்துகேட்க தாயாகிய பத்தினி கண்ணகி 'தந்தேன் வரமென' அசரீரி இயம்பியதும், அவன் வழிபாட்டிற்கென பத்தினிச் சிலம்பு எடுத்து வந்ததும், சிலப்பதிகாரத்திலும் ஏட்டுப் பாடல்களிலும் அழுத்தம் திருத்தமாகக் கூறப்படுகின்றன.

கஜபாகு மன்னனால் கொண்டு வரப்பட்ட தன்னிகரற்ற தனிப் பெருஞ் சிலம்பு இலங்கையின் வடகரைத்துறை திருவடிநிலையில் இறக்கப்பட்டு மாதகல், பாணாவெட்டி, பண்டத்தரிப்பு, சித்தங்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், கட்டுடை வழியாக மாகியப்பிட்டியை வந்தடைந்தது. அங்கணம்மைக் கடவையில் பெருவிழாவும் பிரகார விழாவும் நடைபெற்றன என அறியக் கிடக்கின்றது. எந்தெந்த இடங்களிற் தங்கி வந்தார்களோ அந்தந்த இடங்களிலும் அயற் கிராமங்களிலும் கண்ணகி ஆலயங்கள் நிர்மாணித்தார்கள்.

இவற்றுட் சில கால ஓட்டத்தில் அம்மன் ஆலயங்களாகவும், மாதா கோவில்களாகவும் மாற்றப்பட்டுவிட்டன. இன்றும் பாணாவெட்டி ஆலயத்தின் பின்புறம் கண்ணகி அம்மை சிறிய கோயிலொன்றில் காட்சியளிப்பது அவதானிக்கத் தக்கது.

கட்டுடையிலிருந்த கண்ணகி ஆலயம் நாகம்மாள் கோயிலாக மாறிவிட்டது. எனினும் அங்கணம்மைக் கடவை அதே பெயருடன் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

கந்தரோடை அருகில் கண்ணகி விழா மிகப்பழங் காலத்திலேயே சீருஞ்சிறப்புமாக நடைபெற்றதிலிருந்து கந்தரோடைச் சுற்றாடல் சைவமும் தமிழும் வளர்ந்த இடமென்பது உறுதிப் படுகின்றது.

கிராமங்களின் பெயரை ஆராய்வது எமது நோக்கமன்று. எனினும் கந்தரோடை தமிழ்க்கிராமம் என்று காட்டுவதற்கு அயற்கிராமங்களும் தமிழ்க்கிராமங்கள் என்று காட்டுவது இன்றியமையாதது. மாகி + அம் + பிட்டி என்பதே இன்று மாகியப்பிட்டி என அழைக்கப்படுகின்றது. இதற்குப் பக்கமாகவுள்ள ஓர் குறிச்சியின் பெயர் அளகோலை, அள + கொல்லை என்பதே அளகோலையாயிற்று. இது அளவைக் கணக்கோடு கூடிய காரணப் பெயர். இதேபோன்று இதற்கு அடுத்ததாக உள்ள கிராமம் அளவெட்டி, இன்றும் திரிபுபடாமல் வழங்கி வருகிறது.

கந்தரோடையின் வடகிழக்குப் பக்கமாக மல்லாகமம் என்பதே மல்லாகம் ஆயிற்று. சுன்னாகம் என்பது காரணப்பெயர் கொண்டதாகும். சுல் + நாகம் என்பதே சுன்னாகம் ஆயிற்று. சுல் + நாகம் என்றால் வெள்ளைமலை இன்றும் இவ்விடத்தில் மக்கிக் கிடங்கடி என்றபகுதி வெள்ளைக் கற்கள் தோண்டப்பட்டு பள்ளமாக இருத்தலைக் காணலாம்.

இதன் பக்கமாகக் கல்லால் கட்டுவன் என்பதே 'கல்லாக் கட்டுவன்' ஆயிற்று. கல்லுவேலை செய்வதில் பாண்டித்தியம் வாய்ந்தோர் வாழ்ந்தமைக்கு இது ஓர் சான்று. கந்தரோடையின் தென்கிழக்குப் பக்கமாக மருதனார்மடம் என்பதே இன்று 'மருதனாமடம்' ஆயிற்று.

உடை + வில் என்பது திரிபுபட்டு உடுவிலாயிற்று. உடைபோன்று உடலை விட்டகலாமல் வில்லேந்தியர்கள் வசித்தலால் இப்பெயர் ஏற்பட்டது.

கட்டுடை, கல்வளை என்ற அயற்கிராமங்களின் பெயர்கள் கல்லு வேலைசெய்வதில் திறமை வாய்ந்தவர்கள் வசித்தமையால் ஏற்பட்டவை.

கந்தரோடையின் வடமேற்குப் பக்கமாக சங்கானை என்பது சங்கு+ஆனை என்பதன் புணர்ச்சி. சங்கு கட்டிய யானை நின்றதாலோ, மிகப்பெரிய சங்கு இருந்ததாலோ ஏற்பட்ட காரணப் பெயர். இப்பகுதியில் 'ஆனைக்கால் வேளாளர்' என்று ஓர் பிரிவினர் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

இதுவரை சுற்றாடல் கிராமங்கள் யாவும் தனித்தமிழ்ப் பெயருடையனவாய் இருப்பது நிருபிக்கப் பட்டுள்ளது. இப்பகுதி தமிழ்க் கலாசாரத்தில் தலைநிமிர்ந்து நிற்பதும், வைதீக குடும்பங்கள் வாழும் இடமாக இருப்பதும் குறிப்பிடத் தக்கன. கண்ணகி ஆலயம், மீனாட்சி அம்மை ஆலயம், கல்வளைப் பிள்ளையார் ஆலயம், ஆலங் குழாய்ப் பிள்ளையார் ஆலயம், மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் (கண்ணகி கோயில்) ஆகியவை இப்பகுதியில் உள்ள பழமைவாய்ந்த சைவ ஆலயங்களாகும்.

நன்றி :- '**செவ்வந்தி**'

சட்டம் -- கலை -- இலக்கியம்
யூலை -- ஆகஸ்ட்
15-08-1977

*



# கந்தரோடை

கந்தரோடையில் நாணயங்கள், மட்பாண்ட ஓடுகள், அணி மணிகள், பிராமி எழுத்துப் பொறித்த ஓடு, பல்வேறு வகைப்பட்ட சிற்பங்கள், முதலிய தொல்பொருட்கள் கிடைத்துள்ளன.

## நாணயங்கள்

கந்தரோடையில் எல்டிங் நாணயம், றோமன் நாணயம், இலட்சுமி நாணயம், சீன நாணயம், சேது நாணயம், போர்த்துக்கீச, ஒல்லாந்த, கிழக்கிந்தியக் கம்பனி நாணயங்கள், பூவராகன் முதலிய பல்வேறு காலப்பிரிவுகளுக்குட்பட்ட நாணயங்களும் கிடைத்திருக் கின்றன.

## மட்பாண்ட ஓடுகள்

கந்தரோடையில் கிடைத்துள்ள மட்பாண்ட ஓடுகள் கந்தரோடையின் தொன்மையைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. பென்சில்வேனிய சர்வகலாசாலையினரால் அங்கு நடாத்தப்பட்ட அகழ் வாராய்ச்சியில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட புராதன மட்பாண்ட ஓடு ஒன்று கிடைத்துள்ளது. இவ் அகழ்வாய்வு 16 அடி முதல் 21 அடி வரை நடாத்தப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. இதன் காலத்தை கி. மு. 2ஆம் நூற்றாண்டு வரை கணித்துள்ளார்கள்.

யாழ். வளாக மாணிடவியற்பீடத் தலைவர், பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள் இவ் எழுத்துக்கள் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"கி. மு. 2ஆம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாணப் பகுதியில் மக்கள் குடியேற்றம் இருந்தது என்பதைத் தொல்பொருட் சான்றுகள் திட்டவட்டமாக நிறுவுகின்றன. கந்தரோடைப் பிரதேசத்திற் குடியேறி யிருந்த மக்கள் பண்பாட்டு முன்னேற்றம் அடைந்தவர்களாக கி. மு. நூற்றாண்டுகளிலிருந்து பிறநாடுகளுடன் தொடர்பு கொண்டு ஈழத்தின் உபயோகத்தையும் அறிந்து வாழ்ந்தனர் என இதே சான்றுகளைக் கொண்டு அறியலாம். இவ்வாறே யாழ்ப்பாணத்தின் பிறபகுதிகளிலும் முன்னேற்றம் அடைந்த மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திலே கிடைத்த சாசனங்கள் அப்பகுதியைப் பற்றி மேலும் தகவல்களைத் தருகின்றன. இங்கு கிடைத்த மிகப்பழைய சாசனம் கந்தரோடையிலேயே கிடைத்துள்ளது. பிராகிருத மொழி அல்லது பழைய சிங்களப் பிராகிருத மொழியிலே இதன் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

'தத ஹுபத' - தத்தவின் பாத்திரம், யாரோ துறவி ஒருவருடைய பாத்திரம் அல்லது துறவி ஒருவருக்குத் தானமாக வழங்கப்பட்ட பாத்திரம் என சாசனம் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். இதன் காலம் கி. மு. முதலாம் நூற்றாண்டு என்று எழுத்தின் அடிப்படையிலேயே கூறலாம் ....."

- இளங்கதிர் 21வது ஆண்டு மலர்

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகள் மாந்தை, இராசமடுக்காடு (மன்னார் - நானாட்டான்) முதலிய இடங்களிற் கண்டெடுக்கப்பட்ட ஓடுகளோடு ஒற்றுமையுடையனவாய் இருக்கின்றன. மூக்குள்ள பாத்திரங்கள், துவாரமுள்ள மூடிகள், கைப்பிடியுள்ள பாத்திரங்கள், நெடுக்குக் கோட்டாலும் குறுக்குக் கோட்டாலும் அலங்கரிக்கப்பட்ட சிவப்பு மண் பூசப்பட்ட பாத்திரங்கள், கல் அரிச் சட்டிக்கு இட்டது போன்ற கோடுகள், உள்ளேயும் வெளியேயும் இடப்பட்ட துண்டங்கள் முதலானவை பெரும்பான்மையாகக் கிடைக்கின்றன. இவற்றை உற்று நோக்கும் பொழுது மாந்தை நாகரிகத்திற்குச் சமகால நாகரிகமாகக் கந்தரோடை விளங்கியது எனக் கூறலாம்.

## கைவிரல் கூரை ஓடுகள்

கந்தரோடைப் பகுதியிற் சிதறுண்டு கிடக்கும் கைவிரல் ஓடுகள் பலரகப்பட்டவையாக இருக்கின்றன. காலத்திற்குக் காலம் அதன் தோற்றம் கூடியும் குறைந்தும், தட்டையாகவும், வளைவாகவும், துவாரமிடப்பட்டும், துவாரமிடாமலும் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதே போன்ற ஓடுகள் வல்லிபுரம், ஓமந்தையைச் சேர்ந்த சேமமடு, கல்படுக்கை, மாந்தை, இராசமடுக்காடு முதலிய ஏனைய பிரதேசங்களிலும் கிடைத்துள்ளன. கைவிரலால் அழுத்தி அடையாளமிடப்பட்டு உள்ளதால் இவை கைவிரல் ஓடுகள் எனப்படுகின்றன.

## மணிகளும் நகைகளும்

கண்டெடுக்கப்பட்ட மணிகளில் பலநிறப் பாசிமணிகள் (ஒரு வகைக் களிமண்ணால் செய்யப்பட்டவை) கண்ணாடி, தந்தம், பளிங்கு, சங்கு, விளைவுகல், பவளம், படிகம் போன்றவைகளாலான மணி வகைகள் என்பன அடங்கும். இவற்றின் அமைப்பும் வடிவும், மாந்தைப் பகுதியிற் கிடைத்தவற்றோடு ஒற்றுமைப்படுகின்றன. ஆபரணங்களும் இவ்வாறே ஒத்ததாக இருக்கின்றன.

வளையல்கள், சங்காலும், நீலநிற, பச்சை நிறக் கண்ணாடிகளாலும், ஓர்வகைச் சேர்வையால் செய்யப்பட்ட கரிவளையல்களாகவும் காணப்படுகின்றன. சங்கு வளையல்களில் மிக அழகான செதுக்கு வேலைகளும் காணப்படுகின்றன. செப்பு மோதிரங்களும், சங்கு மோதிரங்களின் உடைந்த துண்டுகளும், வட்டவடிவமாக நடுவில் துவாரமிடப்பட்ட காதணிகளும் காணப்படுகின்றன. இலிங்க வடிவமான படிகங்கள், கெண்டி மூக்கு, தந்தக் காய்கள் என்பனவும் கிடைத்துள்ளன.



## கந்தரோடையிற் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட் சின்னங்கள்

## சிற்பங்கள்

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட சிலைகளில் அங்கியால் போர்க்கப்பட்ட நிலையில் காணப்படும் உடைந்த சிலைகளும் உண்டு. இவற்றில் சில புத்தர் சிலைகள். ஒன்று இளங்கோவின் சிலையாக இருக்கலாம் என நான் சந்தேகிக்கின்றேன். இவற்றுள் ஒரு சிலையைக் கண்ணகிக்கு விழா எடுத்த கஜபாகுவின் உடைந்த சிலையென்று போல் ஈ. பீரிஸ் அவர்கள் கருதுகின்றார்கள். இது உண்மையாயின், சென்ற இதழில் கூறியது போன்று கண்ணகி விழாவிற்கும் கந்தரோடைக்கும் உள்ள தொடர்பு வலுப்படும். அங்கியால் போர்க்கப்பட்டதெல்லாம் புத்தர் சிலையெனக் கூறுவது தவறானதாகும். இவற்றில் ஒன்று காலில் வீரக் கழலுடன் காணப்படுகின்றது. இது தவறான பெயர்ச் சீட்டுடன் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பது வருந்தத்தக்கது.

## கலைஞானி அ. செல்வரத்தினம்

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட ஏனைய சிலைகள் இலட்சுமி உருவ தட்டைச் சிலைகள் (தொல்பொருட்சாலை) அனுமார் சிலை - வெண்கலம் (தொல்பொருட்சாலை), கட்டையாகச் செதுக்கப்பட்ட பிள்ளையார் சிலை (கலைஞானி கண்காட்சி மண்டபம்), திருவாசியுடன் கூடிய பிள்ளையார் - பளிங்கு (கலைஞானி கண்காட்சி மண்டபம்), உடைந்த புத்தர் சிலைகள் (தொல்பொருட்சாலை) பாத அடையாளம் பொறித்த கற்கள் என்பனவாகும்.

நன்றி :- **'சங்கமம்'**

கலை இலக்கிய அறிவியல் இதழ்
1975 பெப்ரவரி

# கந்துரோடை

## அதி முக்கிய குறிப்பு

சங்கமம் பத்திரிகை (பெப்ரவரி 1975) ஆசிரியர் செய்த சில தவறால் தான் கந்தரோடை என்னும் தொடர் கட்டுரை தொடராது இடை நிறுத்தப் பட்டது. காரணம் தொல் பொருள் வரலாறு ஆய்வில் ஓர் சில எழுத்துத்தானும் மாற்றாது எழுத வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். ஆனால் ஓர் சில பட்டதாரிகளின் விருப்பத்தை நிறை வேற்றுவதற்காக தவறான கருத்தை வெளியிட்டால் அது தொடர்வதில் எதுவித பயனுமில்லை என்றே கருதுகிறேன்.

உண்மையில் நான் எழுதிக் கொடுத்த வாசகம் பின்வருமாறு :-

**சிற்பங்கள்**

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட சிலைகளில் அங்கியால் மூடப்பட்டுக் கைகளும், பாதங்களுமற்றதாகவும் தலை இன்றியும் தனி உடல்கள் சில கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றைப் புத்தர் சிலைகள் என்று வரையறுத்துக் கூறமுடியாது. காலில் வீரக் கழலுடன் காட்சியளிக்கும் பாதமும் தலையும் கழபாகு மன்னனுடையதாக இருப்பின் அங்கியால் போர்க்கப்பட்ட இச்சிலைகள் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்பு கொண்ட இளங்கோவினுடையதெனத் துணிந்தே கூறலாம். இளங்கோ துறவறம் பூண்ட ஓர் தமிழ் இளவரசனும் கவிஞனும் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்.........

தயவுசெய்து சென்ற இதழ் செவ்வந்தியில் வந்த 'சிலைகள்' என்ற தலைப்பின் கீழ் உள்ள தவறைத் திருத்தி வாசிக்கும்படி வாசகர்களை அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கந்தரோடை பற்றிய உங்கள் சந்தேகங்களை உடனுக்குடன் ஆசிரியருக்கு எழுதிச் சரியான விபரத்தை அறிய பின்வாங்க வேண்டியதில்லை என்று அறியத்தருகிறேன்.

-'கலைஞானி'

மேலும் மட்பாண்ட ஓடுகள் என்ற வகையில் இதுவரை யாழ்ப்பாணத்தில் கண்டெடுக்கப்பட்ட மிகப் பழமையான எழுத்துப் பொறிக்கப்பட்ட ஓடு ஒன்று கந்தரோடையிலேயே கண்டெடுக்கப்பட்டது.

இவ்வோடு நில மட்டத்துக்குக் கீழ் சுமார் இருபத்திரண்டடி ஆழத்தில் கண்டெடுக்கப்பட்டது. இது பென்சில்வேனியா சர்வகலாசாலை (அமெரிக்கா) யைச் சேர்ந்த புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர் அவர்களால் கண்டெடுக்கப்பட்டது.



மேலே காட்டப்பட்ட மட்பாண்ட ஓட்டில் தெளிவாகக் காணப்படும் நான்கு எழுத்துக்களைக் கொண்டு ஆராயுமிடத்து வெளிப்படப்போகும் சில மாறுபட்ட கருத்துக்களும் உண்மைக்கு ஒவ்வாத தர்க்கங்களும் வெளியிடப்பட வேண்டியுள்ளது. இது விடயமாக சென்ற இதழில் வெளியிட்டிருந்த கலாநிதி இந்திரபாலாவின் முடிவுக்கும் எமது எண்ணத்திற்கும் உள்ள தொடர்பும் மாற்றமும் அடுத்த இதழில் தர்க்கரீதியாகத் தொடரும்.

நன்றி :-"**செவ்வந்தி**"

சட்டம், கலை, இலக்கியம்
இதழ் 18 பெப்ரவரி 1978

# கந்துரோடை

உண்மைக்கும் வரலாற்று நியதிக்கும் ஒவ்வாத எந்த ஒரு முடிவையும் கண்டிக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். சென்ற இதழில் நாம் சுட்டிக் காட்டியபடி கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்பாண்ட ஓட்டில் நான்கு எழுத்துக்கள் மட்டுமே முழுமையானதாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த நான்கு எழுத்துக்களும் முன்னுள்ள இரு எழுத்துக்கள் உடைந்து வாசிக்க முடியாது இருப்பதும் இதன் பின் எழுத்துக்கள் என்ன என்பது எமக்குக் கிடைக்காத காரணத்தாலும் இவை இன்ன மொழி என்றோ அன்றி இன்ன மதத்திற்குச் சொந்தமானதென்றோ வலிந்து கூறமுடியாது.

இந்த உண்மையை மறைத்து சிங்களப் பிராமி என்று கூறுவதை நான் கண்டிக்கிறேன்.

வரலாற்று நியதிக்கு ஒவ்வாத ஆய்விற்கு அப்பாற்பட்ட அர்த்தமற்ற முடிவை வெளிப்படுத்துவதால் பின் உள்ள சந்ததியினர் அதை மேற்கோள் காட்டி எழுதுவதால் அது வரலாறு ஆகிவிடுகிறது. எனவே இதை முளையிலே கிள்ளிவிட வேண்டியது தொல் பொருள் ஆய்வாளர்களின் கடமையாகும்.

உதாரணமாக யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூலை எழுதிய முதலியார் இராசநாயகம் அவர்கள் சுழிபுரம் முருகமூர்த்தி கோவிலடியில் நிற்கும் வெள்ளரச மரம் சங்கமித்திரையால் கொண்டுவரப்பட்ட வெள்ளரசம் கிளைகளில் ஒன்று எனக் குறிப்பிட்டுள்ளார். இதை ஆதாரமாகக் கொண்டு எத்தனையோ பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இதை மேற்கோள்காட்டி எழுதியிருப்பதை வாசகர்கள் அவதானித்திருப்பார்கள் என நம்புகிறேன். 'அஞ்சலி' பத்திரிகையின் வடஇலங்கைச் சிறப்பு மலரிலே கூட இச்செய்தி குறிப்பிடப்பட்டிருந்தது அவதானிக்கத்தக்கது. பல தடவை

மேற்கோள்காட்டி எழுதுவதால் பாலும் கறுப்பு என்று நிரூபிக்கப்படுவது போன்ற நிலைக்குத் தொல்பொருள் வரலாறு அமையக்கூடாது என்பதற்காகவே இதை இங்கு சுட்டிக்காட்டியுள்ளேன்.

கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்ட ஓட்டில் த, ப, ப, த என்ற நான்கு எழுத்துக்கள் மட்டுமே முழுவதாகப் பின்னமுற வகையில் காணக் கூடியதாக இருக்கிறது.

இதில் உள்ள நான்கு எழுத்துக்களுக்கும் இடையில் உள்ள இடைவெளி சரிசமமானதாகவே காணக்கூடியதாக இருப்பதை அவதானிக்கலாம். தமிழகத்தில் கண்டு எடுக்கப்பட்ட சில எழுத்து வடிவங்களுக்கும் இதற்குமிடையில் ஒற்றுமையும் வேற்றுமையும் இருப்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இ. என்று குறிப்பிட்ட எழுத்தின் மேல் உள்ளது போன்ற வடிவ அமைப்பே இலங்கையில் கண்டெடுக்கப்பட்டது. த. என்று குறிப்பிட்ட எழுத்தில் மேல் உள்ளது போன்றது தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்டது.

மேலும் இலக்கம் 2. -- இ. என்ற எழுத்துக்குப் பக்கத்தே ஓர் கோடு தென்படுவதை சென்ற மாத செவ்வந்தியில் அவதானித்திருப்பீர்கள். இவ்வடையாளம் தற்செயலாகத் தற்காலிகமாக ஏற்பட்டது என்பதே எனது அபிப்பிராயமாகும். எழுத்து எழுதும்போது போடப்பட்ட கோடாக இருப்பின் அதன் இடைவெளித் தூரம் வித்தியாசமாக இருப்பதை அவதானிக்கலாம். அதுவுமன்றி இக் கோட்டின் ஆழத்தையும் நிறையையும் நோக்குமிடத்து மற்றைய நான்கு எழுத்துக்களைக் காட்டிலும் விதிவிலக்காகவே தென்படுகிறது. எனவே இக்கோடு மேல் கூறிய நாள்கு எழுத்துக்களோடு சேர்ந்தவை அல்ல தற்காலிகமாகக் காலக்கிரமத்தில் ஏற்பட்டது என்றே கருதுகிறேன்.

மேலும் க. என்ற எழுத்திலிருந்து ஹ என்ற எழுத்தோ உச்சரிப்போ பிறந்தது என்றால் அதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் ப. என்ற எழுத்து வடிவில் ஹ என்ற எழுத்து உச்சரிப்புத் தென்படுவது மரபுமன்று வழக்குமும் அன்று. ஏன் எப்படி என்று சிந்தித்துப் பாராது ப. என்ற வடிவத்தோடு கோடு இருப்பின் அதை ஹ என்று உச்சரிக்க ஏன் முன்வந்தார்கள் என்பது விளங்கவில்லை. பலர் கூடிப் பாடிவிட்டார்கள் என்பதற்காக நாம் அதை ஏற்பதல்ல நோக்கம். அதில் ஏதாவது ஐயமிருப்பின் அதற்கு மாற்று மருந்தாக கருத்து உண்டா என ஆராய்வதே எமது நோக்கம். கருத்து கூறுபவர்களை அவமதிப்பதோ, பாமர மக்களை ஏமாற்றுவதோ எமது நோக்கமன்று.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

நன்றி :- **"செவ்வந்தி"**
சட்டம், கலை, இலக்கியம்
இதழ் 19 மார்ச் 1978

நூலகம்





**என்னைப் பெற்று வளர்த்த தாய் தந்தையரைக் காட்டிலும்**
**என்னைப் பேணிவளர்த்த பெரியாச்சியை**
**நான் பெரிதும் மதிக்கிறேன்.**

**-'கலைஞானி'**

# தொகுப்பாசிரியர் பற்றி....



இந்நூலை ஆக்கியிருக்கின்ற ஷாந்தன் சத்தியகீர்த்தி என்ற இளைய தலைமுறை எழுத்தாளரை அறிமுகம் செய்வதில் பெருமகிழ்வு எய்துகின்றேன். யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். தனது பள்ளிப் பருவத்தில் இருந்தே இவர் கலை. இலக்கிய. சமூகத் துறைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். எழுத்துத் துறையோடு இதழியலில் ஆர்வம் கொண்டு செயலாற்றி வந்ததோடு பத்திரிகைப் பிரதிகளைச் சேகரித்து ஆவணப் படுத்துவதிலும் தொல்லியல் துறையிலும் மிகுந்த அக்கறை காட்டி வந்தார்.

இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணம் அரும்பொருள். தொல்பொருள் சேகரிப்பாளர் 'மாமனிதர்' கலைஞானி அ. செல்வரத்தினத்துடன் ஏற்பட்ட தொடர்பினால் அவரின் கலைச்செல்வங்கள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியுடன் செயற்படுபவர். அதன் ஒரு உந்துதலாகவே இந் நூலைத் தொகுத்து வெளியிடுகின்றார்.

1998 ஆம் ஆண்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவு நடாத்திய பத்திரிகையாளர் பயிற்சி நெறியில் பங்குபற்றி பயிற்சி நெறியின் முடிவில் 'ஞானகங்கை' என்ற கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டு முதற்பரிசைத் தட்டிக்கொண்டார்.

"உதயன் - சஞ்சீவி" நாளிதழில் 'மௌனமொழி' பத்தியில் கருத்தோவியங்களுக்குரிய கவிதைகளைப் பல்வேறு புனை பெயர்களில் எழுதிவந்துள்ளார்.

'வலம்புரி' பத்திரிகையின் மூலம் அதன் செய்தியாளராக அறிமுகமாகி எம்.எஸ்.எஸ். கீர்த்தி என்ற பெயரில் கட்டுரைகளையும் வரைந்துவரும் இவர் சமூக சேவையிலும் சளைத்தவரல்ல.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் உறுப்பினராக மக்கள் சேவையில் ஈடுபட்டிருக்கிறார். பல அறிவியல் கட்டுரைப்போட்டிகளில் பரிசில்களை வென்றுள்ள இவர் ஒரு கவிஞர். அத்துடன் யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கிரிக்கெட் மத்தியஸ்தருமாவார்.

இவரது கலை இலக்கிய சமூக சேவைகள் மென்மேலும் வளர்ச்சியடைந்து இதழியலில் தடம் பதிக்க வாழ்த்துகிறேன்.

**ஐயா. சச்சிதானந்தம்**
**ஊடகவியலாளர்.**

08.11.2000